537

புதுமை

ஆசிரியர்: கோசல்ராம்

JL
m211,N57P1
N59.3.1
197702

PUTHUMAI ஆகஸ்ட் 1 1959 விலை 25

தந்தி: 'ஜுவல்லர்ஸ்' போன் : 49

பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

கிளைகள் : சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

போன்: 62500.

"தினச்செய்தி"

(தமிழ் தினசரி)

ஆவணி 1௳ (17—8—59) முதல்
வெளி வருகிறது.

தனிப் பிரதி 6 காசு.

ஆசிரியர்கள்:

K. T. கோசல்ராம் M. L. C.,
N. ராமரத்னம்

ராய்ட்டர், பி. டி. ஐ.,
விசேஷ நிருபர்களின் செய்திகள் தாங்கி வரும்
முதல்தரமான பத்திரிகை

★ **விறுவிறுப்பான தலையங்கங்கள்**

★ **கடற்காற்று (காற்ருடி)**

★ **விருப்பு வெறுப்பற்ற அரசியல் விமர்சனம்**

"தினச்செய்தி"
101, புரசவாக்கம் ஹைரோடு,
சென்னை-10.

விரைவில் வருகிறது

தயாரிப்பு & டைரக்ஷன்: K.V. ரெட்டி B.Sc (HONS.)

உரிமையாளர்கள்: மஹாலக்ஷ்மி பிக்சர்ஸ். மதராஸ்.

படிக்கிறீர்களா ?

தேசப் பகைவர்களின் பாசறையை சின்னுபின்னப்படுத்தி,
ஜனநாயக விரோதிகளுக்கெதிராகப் போர் தொடுத்து,
தேசீயத்தின் பாதுகாவலனுக பவனி வருகிறது !

"பாரதம்"

(புதன், சனிக்கிழமைகளில் வெளிவருகிற
வார ஏடு)

ஆசிரியர்:

டி. எஸ். சொக்கலிங்கம்

விலை 6 காசுகள்

உடனே சந்தாதாரர் ஆகுங்கள். ஆண்டுச் சந்தா ரூ. எட்டு.

ஏஜண்டுகள் தேவை:

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில்
பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம்
முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டு
கள் தேவை. கமிஷன் 25%.

ADVT. RATES;
Casual Rs. 8 per col. inch. Contract Rs. 6 per col. inch.

விபரங்கட்கு:

"பாரதம்" காரியாலயம்,

75, சாந்தோம் ஹைரோடு, சென்னை-28.

(டெலிபோன்: 71416)

இப்பொழுது நடைபெறுகிறது.

சென்னை கெயிட்டி, பிரபாத், சரஸ்வதி

மற்றும் தென்னுடெங்கும்

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: முதல் லைன் பீச், மதராஸ்-1.

23 உள்ளூர் ஆபீஸ்கள்

113 கிளை ஆபீஸ்கள்

கடன் மற்றும் அட்வான்ஸ்கள்

டிபாஸிட்டுகள்
- கரண்ட் அக்கௌண்ட்ஸ்
- ஸேவிங்ஸ் பாங்க் கணக்கு
- நிரந்தர டிபாஸிட்டுகள் 3 வருஷ
- காஷ் சர்டிபிகேட்டுகள்.

பத்திரங்கள் வாங்கவும், விற்கவும், வெளிநாட்டு பரிவர்த்தனை அலுவல்களையும் ஏற்றுக்கொள்கிறோம்.

நியூயார்க் ஏஜண்டுகள்: FIRST NATIONAL CITY BANK OF NEW YORK.

லண்டன் ஏஜண்டுகள்: WESTMINSTER BANK LTD.,

டி. பி. பார்த்தசாரதி, காரியதரிசி.

The Madras Motor Insurance Company Limited,

EXPRESS ESTATES,

MOUNT ROAD-P. O.

MADRAS-2.

(A unit of T. V. S.)

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு, (97% Nacl)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்குச் சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதி
தெரிந்துக்கொள்ளவும்,

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone: 1 & 333 Tel Address: MACSALT

Phone: 216 TIRUNELVELI.

LINGAM & CO.,

HIGH ROAD,
TIRUNELVELI JUNCTION.

Branch:
CAPE ROAD, NAGERKOIL
Phone: 38

Branch:
WEST GREAT COTTEN ROAD,
TUTICORIN.
Phons - 402

Agents for:

KIRLOSKAR PETTER OIL ENGINES,
PUMPS, MOTORS.

(KANNYAKUMARI DISTRICT)

DUNLOP BETTINGS, VEE BELTS & HOSES

Dealers:

CALTEX (INDIA) LTD.

Dealers in:

RICE HULLERS, SPARE PARTS, PIPES, FITTINGS,
OIL ENGINE SPARES ETC.

L. K. CHETTIAR.



புதுமை
ஆசிரியர் கோசல்ராம்

ஸ்ரீ இந்த இதழில்

மணி : 3 ஆகஸ்டு 1959 ஓசை : 1

நடுவரின் மயக்கம் ... 8
'கவர்ன்மெண்டு டிரான்ஸ்போர்ட்'டின் கண்ணீர்! ... 9
கேரளத்தில் நச்சரவம் ... 12
மலர் மணம் ... 14
திட்டமும், சிறு கைத்தொழில்களும் 15
(சு)தந்திரக் கட்சி (வி)சித்திரங்கள் 16
தமிழ்நாட்டின் நீர்வளம் ... 17
42 நாட்களில் 36,000 மைல்கள்! 19
தமிழில் சிறுகதைகள் ... 23
பிழைத்துப்போகட்டும்! ... 26
வேளாண்மை வளர்ச்சி ... 28
விடிவெள்ளி ... 33
மலைமகளே! ... 44
கடைசிக்கதை ... 45
விண்கல் ... 52
இரண்டாவது தாஜமகால் ... 56
எதிரியின் பலம் ... 59
துளசிங்கம் துப்பறிகிறார்! ... 66
கவிமலர்கள் ... 70
நாய், ஜாக்கிரதை! ... 75
மனத்தட்டு ... 81
என் அவர் ... 97
பிறப்பும், வளர்ப்பும் ... 99
பழரசம் ...104
திரும்பிப்பார் ...106
நாட்டுக்கொரு நல்லவள் ...107

முகப்பு : தலைவி கண்புதைக்க வருவதையும், கவனியாது ஆண்டு மலரை ரசிக்கும் ஆண்டகை!

நடுவரின் மயக்கம்!



('கேரளாவில் மத்திய அரசு, என்ன செய்யப்போகிறது?', என்பது இன்னும் புதிராகவே உள்ளது!)

புதுமை

'கவர்மெண்ட் டிரான்ஸ்போர்ட்'டின் கண்ணீர்!

சென்னைக்கும், பெங்களூருக்கும் பஸ் விடுவதற்கு சென்னை அரசாங்கம் மைசூர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. புது முயற்சிகளை எவரும் வரவேற்பது திண்ணம். ஆனால் சென்னை நகரில் பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்திவரும் அரசாங்கம், அதன் பொறுப்பையும், கடமையையும் சரிவர நிறைவேற்றி வருகிறதாவென்பதை எண்ணிப் பார்க்கும் மக்களுக்கு, "ஏன், இந்நெடும் பொறுப்பு?" என்று தோன்றும். அந்த அளவுக்கு சென்னை பஸ் போக்குவரத்து நிர்வாகம், மக்களைச் சோதித்துவிட்டது.

அரசாங்கத்துறைத் தொழில்கள், இப்போது நாட்டின் பொருளாதார அமைப்பில் முக்கிய அம்சமாகிவிட்டன. சோஷலிஸ சமுதாயக் குறிக்கோளை எட்டுவதற்கு, தொழில்களை சமூக உடைமையாக்குவதும், அவற்றை அரசாங்கமே நடத்துவதும் முக்கியமென்ற நம்பிக்கையை, நாட்டின் தலைவர்கள் பரப்பிவருகிறார்கள். சென்னை அரசாங்கத்துக்கும் அரசாங்கத்தொழில்துறையில் அக்கரை உண்டு என்று நம்புகிறோம். இக்குறிக்கோளில் அக்கறையும், நம்பிக்கையும் இருந்தால் மட்டும் போதாது. அரசாங்கத்துறைத்தொழில்கள் திறம்பட நடந்தால் தான் அரசாங்கத்திற்குள்ள நம்பிக்கை மக்களிடமும் பரவும். மக்களுக்கும் அரசாங்கத்துறை தொழில்களில் நம்பிக்கை ஏற்பட்டால்தான், சோஷலிஸ சமுதாயக்குறிக்கோளில் அவர்கள் ஊக்கம் காட்டுவார்கள். சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து நிர்வாகம், இத்தகைய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் மக்கள் உள்ளங்களில் உண்டாக்கத் தவறிவிட்டது என்றே கருதுகிறோம்.

சென்னை அரசாங்கம் 1947-ல் சென்னை நகரில் பஸ் போக்குவரத்துத் தொழிலை மேற்கொண்டது. சென்னை மாகாணத்தை ஆண்டு வந்த கவர்னருடைய குதிரைகள் கட்டும் லாயத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, சென்னையை ஆளும் மக்கள் ஏறும் பஸ்களை அங்கு விட்டபோது, சுதந்தரமடைந்த மக்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். சுகமான பிரயாண வசதியுடன் குறைந்த செலவில் பஸ்களில் ஏறிச்செல்ல அரசாங்கம் வழி செய்யும் என்ற நம்பிக்கை பிறந்தது. அரசாங்கமும் அதே நோக்கத்துடன்தான் பஸ் போக்குவரத்துத் தொழிலை மேற்கொண்டது. லாப நோக்கத்தை விட, வசதி செய்யும் நோக்கமே அரசாங்கத்துறை தொழில்களுக்கு அதிகமாயிருக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டது.

அரசாங்கம் பஸ் தொழிலை மேற்கொண்டபோது, நகரில் டிராம்கள் இருந்தன. 1952 வரை

டிராம்கள் இருந்தன. அப்படியிருந்தும் அரசாங்கத்துக்கு ரூ. 5 லட்சம் முதல் ரூ. 26 லட்சம் வரை லாபம் கிடைத்து வந்திருக்கிறது. இதில் மற்றொரு அம்சத்தையும் கவனிக்கவேண்டும். அந்நாளில் குறைந்தபட்சக் கட்டணம் அரையணா அல்லது மூன்று நயா பைசா; பின்பு இக் கட்டணம் ஓரணா அல்லது ஆறு நயாபைசாவாகியது; இப்போது கடைசிக் கட்டணம் ஏழு பைசாவாக இருக்கிறது. இத்தருணத்தில் இதைப் பத்து பைசாவாக்க வேண்டுமென்ற பேச்சு எழுந்துள்ளது. நஷ்டத்தை ஈடு கட்ட இம்மாதிரிச் செய்வது அவசியமென்றும் கருதப்படுகிறது.

* * *

குறைவான கட்டண விகிதங்களும், டிராம்களின் போட்டியும் இருந்தபோது நிறைய லாபம் கொடுத்துவந்த அரசாங்க பஸ் தொழில், உயர்ந்த கட்டண விகிதங்களும், ஏகபோக பிரயாண மிராசுமுள்ளபோது நஷ்டத்திற்குள்ளாவதேன்? இரண்டே இரண்டு பஸ்களை மட்டும் வைத்துக்கொண்டு, தனிப்பட்ட முதலாளிகள் லட்சக்கணக்கில் லாபம் சம்பாதிக்க, சுமார் 450 பஸ்களை வைத்துக்கொண்டு, 349 பஸ்களை சாலைகளில்குறுக்கும்,நெடுக்குமாக ஓட்டும் அரசாங்க பஸ் துறையினர் ஏன் நஷ்டத்தில் வேலை செய்ய வேண்டும்? தனியார் துறை தழைப்பானேன்? பொதுத்தொழில்துறை விழிப்பானேன்? பொதுத்தொழில் துறையை விஸ்தரிப்பதில் அக்கறை கொண்ட அரசாங்கம், நிபுணர்களைக் கொண்டு விரிவாக அலசிப் பார்த்து, அரசாங்கத் தொழில் துறை வெற்றிகரமாகத் திறம்பட லாபத்துடன் இயங்குவதற்கு வழி தேடவேண்டும். நஷ்டத்திற்கான காரணங்களைக் கண்டு பிடிக்கவேண்டும்.

சென்னை நகரத்தில் பஸ்கள் செல்லும் பாதைகள் அனைத்தும் செம்மையாக இருக்கின்றன. அதனால் வெளியூர் செல்லும் பஸ்களைவிடத் தேய்மானம் குறைவாகவும், உழைப்பு அதிகமாகவும் இருக்கவேண்டும். அரசாங்கத்துறை தொழிலுக்கு வருமான வரி கிடையாது. பஸ்களைப் பழுதுபார்க்கும் வசதிகளும், பஸ்களைக்கட்டும் தொழிற்சாலைகளும் உள்ளூரிலேயே இருக்கின்றன. இவ்வகையில் எல்லாம் அரசாங்க பஸ் தொழிலுக்குச் செலவுகள் குறைவு. வெளியூர் பஸ்களில் ''இனாம் சவாரிகள்'' வேறு இருக்கின்றன. அப்படியிருந்தும் வெளியூர் பஸ்காரர்கள் பணம் குவிப்பதைக் காண்கிறோம். பஸ் பெர்மிட்டுக்காக பெரும் போட்டியும், பெர்மிட்டுக்கு ஏராளமான தொகைகள் ஏலம் போவதும் உலகறிந்த வழக்காக இருக்கிறது. தேன் இல்லாமல் ஈ மொய்க்குமா? தனியார் துறையில் மட்டும் லாப தேவதைக்கு என்ன மோகம்? இதைக் கூர்ந்து நோக்கவேண்டுவது அவசியம். திறமை, சிக்கனம், சீர்மை மூன்றும்தான் தனியார் துறைக்கு உற்ற துணையாக நிற்கின்றன. அதை அவர்கள் நன்கு பயன்படுத்தி, லாபம் கண்டு, சமுகத்திற்கும், பொருளாதாரத்துக்கும் ஓரளவுக்கு உதவியாக இருக்கிறார்கள்.

ஆனால் அரசாங்கத்துறைத் தொழில்கள் வேறு அடிப்படையில் ஆரம்பிக்கப்படுகிறதென்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அதிலும் சமூகநல அரசாங்க அமைப்பில் இந்த அடிப்படை மிக முக்கியமானது. தனியார் துறையில் லாபம் முக்கியமாகவும், மற்ற அம்சங்கள் இரண்டாம் பட்சமாகவும் இருக்கும். பொதுத்துறையில் மக்களுக்குச்சேவை முக்கியமாக இருக்கும். ஆனால் அதற்காக நஷ்டத்துக்கு வழி செய்து விடக்கூடாது. ஏனெனில், தனியார் தொழில்துறைக்கு நிறைய வாய்ப்பு அளித்து, லாபம் சம்பாதிப்பதற்கு இடம் கொடுத்து, வரியாக வாங்குவதைவிட, அதே தொழிலை பொதுத்துறைக்குக் கொணர்ந்து, லாபம் முழுவதையும் அரசாங்கமே பெறுவது நலமல்லவா? இப்பொருளாதார அம்சமும் இதில் உள்ளது. சென்னை நகரில் டிராம்கள் எடுபட்டபின், போக்குவரத்துத் துறையில் அரசாங்கம் ஏகபோக உரிமை வகித்துவருகிறது எனலாம்; டிராம்வே கம்பெனியின் நஷ்டம் சேரவில்லையேதவிர, அரசாங்க பஸ்களுக்கு

டிராம்வே பிரயாணிகள் கிடைத்துவரு கிருர்கள்.

டிராம்வே கம்பெனியைக் குறிப்பிடும்போது, மற்ருெரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். டிராம்வே கம்பெனி தனது வண்டிகள் ஓடும் பாதைகளைத் தானே பராமரித்துவந்தது. அரசாங்க பஸ்கள் ஓடும் பாதைகளை சென்னை நகர சபை பராமரித்து வருகிறது. சென்னை அரசாங்கம் சாலைகள் பராமரிப்புக்காக நகரசபைக்கு மான்யம் கொடுத்து வருகிறது. சென்னை நகரில் ஏராளமான மோட்டார்கள் பதிவாகின்றன. சென்னை மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் மோட்டார்களுக்கான வரியை அரசாங்கம் வசூலித்துக்கொள்கிறது. இதில் கணிசமான பங்கு நகரசபைக்குக் கிடைக்க வேண்டுமென்று நகரசபை நெடுநாளாக மன்ருடிவருகிறது. சென்னை நகர சாலைகள் பராமரிப்புக்கு இது அவசியம்தான். சென்னை பஸ் போக்குவரத்துத் துறையினர் தங்கள் பஸ்கள் செல்லும் பாதைகளின் பராமரிப்புக்கான பொறுப்பை வகிப்பதில்லை. அப்படி இருந்தும் நஷ்டம் வருகிறது.

*　　*　　*

சமீபத்தில் பஸ் போக்குவரத்துத் துறைப் பொறுப்பை வகிக்கும் அமைச்சர் நஷ்டத்தைத் தவிர்க்க மூன்று வழிகள் உண்டு என்று சொன்னர்; (1) ஊதியங்களைக் குறைப்பது; (2) திறம்பாட்டை அதிகரிப்பது; (3) கட்டணங்களை உயர்த்துவது. இம் மூன்று வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தால் நஷ்டத்தைத் தவிர்க்கலாம் என்ருர். டீஸெல் எண்ணெய் விலை ஏறியதையும், மத்திய அரசாங்கம் உபரி வரி விதித்ததையும் சுட்டிக் காட்டி, கட்டணங்களை உயர்த்த வேண்டியிருக்கும் என்று அமைச்சர் கூறினர். மற்ற ராஜ்யங்களைக் காட்டிலும் சென்னையில் பஸ் கட்டணம் குறைவாக இருக்கிறதென்று அவர் கூறினர். ஆனல் விந்திய மலைக்குத் தெற்கில்தான் பஸ்கட்டணங்கள் அதிகமென்றும், வசதிகள் குறைவு என்றும் கூறுவோரும் உண்டு.

ஊழியர்களின் ஊதியங்களைக் குறைப்பதற்கில்லை. வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களின் விலைவாசிகள் ஏறியிருக்கும் இத்தருணத்தில் அவ்வாறு செய்வதற்கில்லை. இவ் வாதம், பஸ் பிரயாணிகள் விஷயத்திலும் பொருந்தும். ஏற்கெனவே வாழ்க்கைத்தரச் செலவுச்சுழலில் தவிக்கும் பொது மக்களிடம் மேற்கொண்டு 3 நயாபைசா, 5 நயாபைசா வசூலிப்பதென்பது அடுக்காது. ஆகையால் திறம்பாட்டை அதிகரிப்பதொன்றுதான் சரியான வழியாகும். இதில் பல அம்சங்கள் உள்ளன.

பஸ் தொழிலைத் திறம்பட நடத்துவதற்கான வழிகளை நாடித் தேட வேண்டும். தனியாக அரசாங்க பஸ் தொழில் கார்ப்பரேஷன் நிறுவி, திறமைக்கும், சேவைக்கும், லாபத்துக்கும் வழி செய்வது நலமாக இருக்கும். இக் கார்ப்பரேஷனில் அரசாங்கம்,ரயில்வே, நகரசபை பங்கெடுத்துக் கொள்வதுடன், போக்குவரத்துத் தொழில் துறையிலுள்ள தனியார்களையும் சேர்த்துக் கொள்வது உசிதமாகும். அரசாங்கத் தொழில்துறைத் திறம்பாட்டை நிலைநாட்டுவதற்கு தனியார் துணை மிகவும் பயனுடையதாயிருக்கும். கட்டணத்தைக் குறைப்பதற்குக் கூட வழி ஏற்படக்கூடும்.

கட்டணத்தை உயர்த்தும் முறை, பழைய டயர்களிலேயே மேன்மேலும் ஒட்டுப்போட்டுக் கொண்டு, மோட்டரை ஓட்டுவதற்கொப்பாகும். நடு யந்திரத்தில் கோளாறு இருக்கும்போது, டயர்களைச் சீர்படுத்தினல் போதுமென்று நினைப்பது தவறு. நிர்வாக யந்திரத்தின் திறம்பாட்டை உயர்த்துவதற்குத்தான் பாடுபட வேண்டும். நல்ல பழுது பார்க்கும் பட்டறையொன்று பஸ் நிலையத்துடன் இணைந்திருக்க வேண்டும். பட்டறையிலேயே செய்யக் கூடிய உறுப்புக்கள் யாவை என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்துக்கு பஸ்கள் மட்டுமின்றி, பல இலாகாக்களுக்கான மோட்டார் வான்களும் கட்ட வேண்டியிருக்கிறது. இக்கட்டுமான தொழிற்சாலை அரசாங்கத்துக்கு அவசியம். இவ்வகையில் எல்லாம் சிக்கனமாகத் தொழிலை நடத்த வழி ஏற்படக்கூடும்.

*　　*　　*

இரண்டாவதாக, பெரிய பஸ்கள் மட்டுமின்றி, சிறிய பஸ்களும் அவசிய

மாகும். பெரிய பஸ்களெனில் முதலீட்டுச் செலவும், பராமரிப்புச் செலவும் அதிகம். சிறு தொலைவுகளுக்குச் செல்லக் கூடிய சிறு பஸ்கள் பிரயாணிகளுக்கு வசதியாகவும், அடிக்கடி கிடைப்பதாகவும் அமையும். இப்போது மாணவர்களுக்கென 9 பஸ்களை ஒதுக்கியிருப்பது நல்லயோசனை. இதே போல மற்ற இடங்களில் "பிரயாணிகள் சர்வே" நடத்தினால் அவரவர்களுக்கு வசதியாக பஸ்களை ஒதுக்குவது சுலபமாக இருக்கும். இது போக்குவரத்தில் ஏற்படும் நெரிசலைத் தவிர்ப்பதற்கு வழி உண்டாக்கும்.

பஸ் நிலையங்களில் கால் கடுக்கத் தவம் கிடக்கும் பிரயாணிகள்தாம், அரசாங்கத்துறை தொழில்களைக் கடுமையாகத் தாக்குபவர்கள். இந்த மனக்கசப்பில்தான் காங்கிரஸை எதிர்க்கிறார்கள். இவர்களுக்கு அடிக்கடி பஸ் கிடைக்கும்படி செய்து விட்டால், அரசாங்கத் தொழிற்துறைக்கு விரோதிகள் குறைந்து விடுவார்கள்!

பஸ் தொழிலில் வருமானம் குறைந்து, லாபம் தேய்வதற்குக் காரணம் பஸ்களில் அளவு மீறிப் பிரயாணிகளை அடைப்பது ஆகும். டிக்கெட்டில்லா சகோதரர்களுக்கு ஊக்கமூட்டுவது இந்நெரிசல் தான்! பஸ்களில் நின்றுகொண்டு போவதற்கான வழியை அடியோடு எடுக்காவிட்டாலும், குறைக்கவாவது செய்யவேண்டும். பஸ்கள் கிளம்பும் இடங்களில் நேராக முடிவுவரை செல்லும் பிரயாணிகளை தனி பஸ்களில் அனுப்பிவிட்டால், நடுவில் தவங் கிடக்கும் பிரயாணிகளுக்கு இடங் கிடைக்கும். மாலை நேரங்களில் பஸ்களில் இடங் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள்; (1) எல்லாக் காரியாலயங்களையும் ஒரே சமயத்தில் விடுவது; (2) சினிமாக்களில் பகல் ஆட்டம் பார்த்துத் திரும்புவோரும், மாலை ஆட்டம் பார்க்கச் செல்வோரும் குவிந்துவிடுவது; இதற்கு ஏதேனும் பரிகாரம் தேடவேண்டுவது அவசியமாகும்.

16 பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய "ஸ்டேஷன் வாகன்" போன்ற சௌகரியமான வண்டிகளை அதிகப்படி கட்டணத்துக்கு விட்டால், திரளாகப் பொழுது போக்கச் செல்லும் பிரயாணிகளுக்கு வசதி கிடைக்கும். அரசாங்கத்துக்கும் வருமானம் பெருகும்.

* * *

மத்திய அரசாங்கப் போக்கு வரத்து மந்திரி திரு எஸ். கே. பாட்டீல் லாரி போக்குவரத்தை இன்னும் 15 ஆண்டுகளுக்கு அரசாங்கம் எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்று சமீபத்தில் அறிவித்தார். அரசாங்க உடமையாக்கும் கொள்கையைக் கேலிக் கூத்தாக்கிவிட வேண்டாமென்றும் எச்சரித்தார். இதை மனதில் கொண்டு அரசாங்கத்துறை தொழில்கள் எடுத்துக் காட்டாக நடக்க வழி காணவேண்டும்.

சென்னை, தமிழகத்தின் தலைநகரம். இந் நகரில் போக்குவரத்து சாதனங்களைப் பற்றி பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து, சிக்கனமாகவும், சீராகவும், செட்டாகவும் போக்குவரத்துத் தொழிலை நடத்தி, குறைந்த செலவில் நிறைய பிரயாண வசதிகள் கிடைக்கும் வழிவகைகளைச் சொல்ல சென்னை அரசாங்கம் நிபுணர்கள் கமிஷன் ஒன்றை அமைக்கவேண்டும். போக்குவரத்துத் துறையில் கண்ணீரைத் துடைக்க உடனே சென்னை அரசாங்கம் தீவிரமாகச் செயலில் இறங்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்றே நம்புகிறோம்.

கேரளத்தில் நச்சரவம்!

'ஐயோ, பாம்பு!'-ஒரு பெண்ணின் எங்கும் கூச்சல். படையே நடுங்கிவிட்டது. அங்கிருந்துவந்தார் விஷ்ணுபக்தர். அதைக் கும்பிட்டு "இது ஆதிசேஷன் அவதாரம். அடிக்காதீர்" என்று தருமோபதேசம் செய்தார். நச்சரவத்திடமிருந்து பெண்ணைக் காப்பது எப்படி? என்று கேட்டார் ஒரு தேசபக்தர்.

"எல்லாம் ஆண்டவன் இருக்கிறார்" என்று சொல்லி நகர்ந்தார் விஷ்ணு பக்தர்.

கேரளப் பெண்ணை மாஸ்கோ புற்றிலிருந்து வந்த நச்சரவம் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஜனநாயகக் கருவுற்ற

பெண்ணைக் காப்பாற்றும் பொறுப்பை கேரள மக்களே ஏற்றுக்கொண்டு, பாம்பை அடிக்கத் தலைப்பட்டுள்ளனர். இதைக் கண்ட பாம்பு பெண்ணை நன்ருகச் சுற்றிக்கொண்டுவிட்டது. கேரள மக்களுக்கு, கம்யூனிஸ்டு பாம்பின் குணம்(?) புதிதல்ல; அதனுல் நடுங்கி விட்டனர். மத்திய அரசாங்கத்தின் தலையீடு ஒன்றுதான் கதி என்ற நிலை வந்துவிட்டது. பெண்ணுக்கும் ஊன மில்லாமல், பாம்பை மட்டும் கொல்ல வேண்டுமென்பதுதான் நிலை. இந்நிலை யில்தாம், அரசியல் கூட்டத்தின் தூய் மையைக் காக்கும் தருமகர்த்தர்கள், அரசியல் சாஸனத்தைக் கருவியாகக் கொண்டு கேரளத்தில் தலையிட்டால், ஜனநாயக தருமம் கெட்டுவிடுமென்று 'இதோபதேசம்' செய்கிருர்கள். பாம்பு ஆதிசேஷ சொரூபமென்று கும்பிடும் விஷ்ணு பக்தர்கள் வர்க்கத்தைச் சேர்ந் தவர்கள் இவர்கள். ஜனநாயகக்கரு வைக் காப்பாற்றுவதைத்தவிர, வேறு நோக்கம் கிடையாது நமக்கு. கருவை யும், பெண்ணையும் காத்து, பாம்பை மட்டும் கொல்வது மத்திய அரசாங்கத் தின் கடமை.

கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சி புரிவதற்கும், மற்ற ராஜ்யங்க ளில் காங்கிரஸ் கட்சி நிர்வாகம் நடத்தி வருவதற்கும் மலைக்கும் மடுவுக்கு முள்ள வித்தியாசம் உண்டு. கோவா வில் போர்ச்சுகல் ஆள்வதையும், கேர ளத்தில் கம்யூனிஸ்டு கட்சி ஆள்வதை யும் ஒன்ருகக் கொள்வதுதான் பொருந் தும்! திரு. நம்பூதிரிபாட் மாஸ்கோ சூத் திரத்திலாடும் பாவை; நன்ருக ஆடுவ தைக் கண்டு மயங்கிவிடக் கூடாது. கேரளத்தைப் பற்றிய நச்சரவம் நீள்வ தற்கு இடங் கொடுக்கலாகாது. ஜன நாயகம் தழைக்கவேண்டுமெனில் தனி நபர் யதேச்சாதிகாரமாயினும் சரி, பல பேர்களின் கூட்டு —யதேச்சாதிகாரமா யினும் சரி, கொல்லவேண்டும். பாம் பைப் பாம்பாகவே கருதவேண்டுமே யன்றி, 'அடிக்கலாமா வேண்டாமா?' வென்று சாஸ்திரம் பார்க்கவேண்டுவ தில்லை. சீதையைக்கவரவந்தராவணன் மாயத் துறவியாக வந்தது போல, ஜன நாயகத்தைக் கவர வந்த கம்யூனிஸம், அரசியல் சாஸனத்தைத் தரித்துக் கொண்டு வந்தது அவ்வளவுதான். அதை அடிப்பதுதான் நீதி.

சில வாழ்த்துக்கள்!

"காங்கிரஸின் இலட்சியங்களையும், திட்டங்களையும் பிரசாரம் செய்வதில் 'புதுமை' தமிழ் நாட்டில் பெரும் தொண்டு செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்!"

ஸ்ரீமதி இந்திரா காந்தி,
தலைவர், அகில இந்திய காங்ரஸ் கமிட்டி.

"தங்கள் 15-6-59 தேதி கடிதம் கிடைக்கப் பெற்றேன். 'புதுமை' இரண் டாவது ஆண்டைப் பூர்த்தி செய்வதை யும் மக்களுக்கு நல்ல சிந்தனையைத் தூண்டுவதன் மூலம் நாட்டுக்குத் தொண்டு புரிவதையும் அறிந்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆகஸ்ட் '59ல் தங்கள் பத்திரிக்கையைச் சிறப்பிதழாக வெளியிடுவதற்கு, தங்க ளுக்கு எனது பாராட்டுக்கள். தங்கள் உயர்ந்த முயச்சியில் வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்."

திரு, யு. என். தேபர்.

"புதுமை' இரண்டாவதாண்டைப் பூர்த்தி செய்யும் இந்நேரத்தில் எனது இந்த நல்வாழ்த்துச் செய்தியை அனுப் புகிறேன். வருகின்ற ஆண்டுகளில் இப்பத்திரிக்கை மேலும் பல வெற்றி களையடைய வாழ்த்துகிறேன்"

— திரு. எஸ். கே. பட்டீல்,
மத்திய அரசாங்க போக்குவரத்து, செய்தித் துறை அமைச்சர்.

'தங்கள் ஜுன் 13ந் தேதி கடிதத்தில் இருந்து, 'புதுமை' தனது வாழ்வின் இரண்டாவது ஆண்டை முடிப்பதறிந்து மகிழ்வடைகிறேன். இத் தமிழ்ப் பத்திரிக்கைமக்களுக்கும், குறிப் பாகக் காங்கிரஸிற்கும் செய்து வரும் சேவைகள் எல்லோரும் அறிந்தவை. வருங்காலத்திலும், நாட்டு நலன்களை யும், காங்கிரஸின் நலன்களையும் கருதி இப்பத்திரிக்கை செயல்படும் என நம் புகின்றேன். 'புதுமை'க்கு எல்லா நலன்களும் வாய்க்க, எனது வாழ்த் துக்கள்

திரு. எஸ். வி. இராமசுவாமி
மத்திய அரசாங்க உதவி ரெயில்வே அமைச்சர்.

மலர் மணம்

புதிய இலக்கியப்பாதைகளை அமைக்க முயன்று வரும் பூரிப்போடு, 'புதுமை' இரண்டாவது ஆண்டு இதழை, வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கின்ருேம்.

இளம் எழுத்தாளர்கள் பலரும், எல்லோரும் அறிந்த பேனு மன்னர்கள் சிலரும் மலரிலே இதழ்களைப் படைத்துள்ளார்கள்.

சிந்தையைத் தூண்டும் அரசியல் கட்டுரைகள் ; பொருளாதார வளர்ச்சியைப்புகழும்அமைச்சர்களின் எழுத்துக்கள், பிரயாண அநுபவக் கட்டுரை ; இலக்கிய வளர்ச்சி, நகைச்சுவைக் கட்டுரைகள்—இவை மலருக்கு மணம் சேர்க்கின்றன.

சிக்கலான மனப்போராட்டங்களை நிலைக்களனுகக் கொண்டு எழுதப்பட்டுள்ள நெடுங்கதை ஒன்றும், பல வகைகளில் புனையப்பட்டுள்ள மெருகேறி மிளிரும் சிறு கதைகள் சிலவற்றையும் மலரிலே நீங்கள் நுகரலாம்.

'இதோ...தமிழ்க்கவிஞர் பரம்பரையினர் !' என்று முழக்கமிடும் இளம் கவிஞர்களின் கவிமலர்களும் இக்காவிலே மலர்ந்துள்ளன.

கலைப்பசிக்கு உணவூட்டும் சினிமாச் செய்திகள் பிரசுரமாகியிருக்கின்றன.

பக்தனின் பணிவோடு, வாசகர்களின் திருமுன்பு மலரைப் படைக்கின்ருேம்.

குறைகளும் உண்டு ; இது இமய முயற்சி அல்ல ; இன்னும் வளர்ச்சிக்கு நிறைய இடமுண்டு. நாம் உணர்ந்தவர்களே !

அலுவலக மாற்றம், காலக்குறைவு, புதிய தினத்தாள் (**'தினச் செய்தி'**) வேலைகள் எங்களைச் சூழ்ந்திருந்தன. எனவே இச்சிறிய வெற்றியையும், அரிய வெற்றியாகவே எண்ணி நாங்கள் களிப்படைகிருேம். சரி தானே ?

மேலும்—நிலைத்து விட்டோம் ! வளர்ச்சியையும் காட்டுவோம் ! நம்புங்கள்! நல்லாதரவினை நல்குங்கள்!

Contact :

CENTRAL AUTOMOBILES

7-A BANK STREET
MOUNT ROAD, MADRAS-2.

Phone : **85496**

for

All your Requirements

in

PERKINS & FORD PARTS

★ GENUINE PARTS

★ VERY COMPETITIVE RATES

★ PROMPT SERVICE.

A Trial will Convince you.

திட்டமும், சிறு கைத்தொழில்களும்

—: மனுபாய்ஷா :—

(மத்திய அரசாங்க கனரகத்தொழில் அமைச்சர்)

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்குவதில் இப்போது ஈடுபட்டிருக்கிருேம்; இத் தயாரிப்பு வேலை முன்னேறி வருகிறது. சிறு கைத்தொழில்களுக்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆக்கத்திறனும், வேகமும் ராஜ்யங்களின் அரசாங்கங்களிடம் காணப்படுகின்றன. சிறு கைத்தொழில் திட்டங்களுக்காக 1955-56ல் செலவிட்டது ரூ 19 கோடிதாம். ஆனுல் நடப்பு ஆண்டிலிருந்து, சிறு கைத்தொழில்கள் திட்டங்களுக்கென்று "பட்ஜெட்டிலேயே" ஏறக்குறைய ரூ. 47 கோடி செலவுக்கு மதிப்புப் போட்டிருக்கிருேம். நடப்பு ஆண்டு முடிவதற்குள்ளாகவே இன்னும் அதிகமான நிதி ஒதுக்க வேண்டி வரலாம். இவ்வகையில், எல்லாச் சிறு கைத் தொழில்கள் சம்பந்தமாகவும், இரண்டாம் திட்டத்தில் நிர்ணயித்துள்ள இலக்குகளை இவ்வாண்டிலேயே தாண்டிவிடுவோமென்று நம்புகிறேன்.

சிறுகைத்தொழில்கள் துறையில், நிதி சம்பந்தமான இலக்குகளை மட்டுமின்றி, சாதனைகள் சம்பந்தமான இலக்குகளையும் பெரும் அளவுக்குத்தாண்டி விட்டோம்.

வேலை வாய்ப்பே குறிக்கோள்!

நமது தேசியத் திட்டத்தில், வேலை வாய்ப்பு அளிப்பதே பெரிய, முக்கியமான நோக்கமாகும். உற்பத்திப் பெருக்கு, நியாயமான விநியோகம், தேசியச்செல்வம் அதிகரிப்பு, தேசிய வருமானம் பெருகுதல் எல்லாம் முக்கியம் தான். ஆயினும், நாட்டில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பயனுள்ளதும், லாபமுள்ளதுமான தொழிலில் ஈடுபடுவதற்கானவாய்ப்புக்களை மேன் மேலும், துரிதமாக அளிக்க இயலாவிடில், மேற்சொன்ன சாதனைகள் யாதாயிருப்பினும், பெரிய ஜீவகாருண்யப்பிரச்னை தீர்க்கப்பெருமல் நின்றுவிடும். ஆகையால், இன்னும் சில பத்தாண்டுகளுக்கு நமது தேசியத் திருப்பணிகளிலெல்லாம் வேலை வாய்ப்பு அளிப்பது நமது தலையாய லட்சியமாயிருக்கும். வேலை வாய்ப்பு அளிப்பது வெற்றுச் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்னையாக மட்டுமிருக்கப் போவதில்லை; ஒவ்வொரு திடமுள்ள மனிதனுக்கும் போதுமான ஜீவனமும், பராமரிப்பும் கிடைக்கச் செய்யும் வரை மிகவும் நிர்ப்பந்தமான ஜீவகாருண்யப் பிரச்னையாகவே இருந்து வரும். இக்கண்ணேட்டத்துடன் நாம் உற்பத்தித்துறையில் பல தரப்பட்ட முதலிட வரிசையை வகுக்க வேண்டும்.

கைத்தறி, கைத்திற வேலைகள், பட்டு, கயிறு, கதர், கிராமத் தொழில்கள், குடிசைத்தொழில்கள், யந்திர விசை சிறுதொழில்கள் உள்ளிட்ட சிறு தொழில்கள் மிகவும் வாய்ப்புள்ள, லாபகரமான உழைப்புத் தொழில்களாகும். பயனுள்ள, லாபகரமான வேலை வாய்ப்பு அளிப்பதுதான் இவ்வேலைத் திட்டங்களின் உயிர் நாடியாகும்.

நாம் ஏதோ வீண் செலவாகும் வேலைத் திட்டங்களை எடுத்துச் செய்வதாக ஓர் தப்பெண்ணம் பரவியுள்ளது. அம்பர் சர்க்கா அல்லது கதர் அல்லது சிறு தொழில்கள் எதுவாயினும், மொத்த சமூக—பொருளாதார மதிப்பீட்டில் வீண் செலவு என்று தோன்றுகிறதோ, அதை மறுகணமே கைவிடத் தயங்க மாட்டோமென்று உறுதியளிக்கிறேன். வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில், நாடு முழுவதிலும் எல்லா சிறுதொழில்கள் திட்டங்களையும் மும்முரமாகப் பரப்ப வேண்டும். தேசிய வேலை வாய்ப்புப் பிரச்னைக்குத் தீர்வு காணும் பொருட்டு, மூன்றும் திட்டத்தில் மும்மடங்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறேம். நமது வேலை வாய்ப்புப்பிரச்னைக்கு இது தான் பெரியவழி; இதுவே பெரும் பரிகாரம்.

(சு)தந்திரக் கட்சி (வி)சித்திரங்கள்!



பொருளாதார ஆராய்ச்சி:

தமிழ் நாட்டின் நீர்வளம்

டாக்டர். பா. நடராஜன்.

“நீர்வளம் நிலவளம் கொழிப்பதாய், நில மகளுக்கோர் திலகமெனப் பொலிவதாய்” என்றெல்லாம் தமிழ் நாட்டின் பொருள்வளத்தை வருணிக்க மிக விருப்பம்தான்; நிலைமை புலமைக்கு இடன் கொடுக்கவில்லை.

“காவிரி, தென்பெண்ணை, பாலாறு...” என்று செந்தமிழ் நாட்டின் ஆற்று வரிசையைப் பாரதியார் பாடும்போது, காதிலே தேன் வந்து பாய்வதாகத்தானிருக்கிறது. ஆனால், அந்த



காவிரியைப் பிழிந்து.........!

ஆறுகளிலே மட்டும் தண்ணீர் வந்து பாய்வதைக் காணோம்!

இந்த ஆற்று வரிசையிலே ஆறு என்று சொல்லவேண்டுமானால், காவிரி ஒன்றைத்தான் சொல்லலாம். அதையும், கன்னடரும் தமிழரும் கலந்து, சொட்டுத் தண்ணீர் கடலுக்குப்போகாமல் மின்சாரமென்றும், நீர்ப்பாசனமென்றும் பிழிந்து எடுத்துவிட்டோம்!

மற்ற இரு ஜீவநதிகளான வைகை, தாம்பிரவருணி ஆகியவற்றிலும் எத்தனை அணை கட்ட முடியுமோ, எவ்வளவு கால்வாய் வெட்ட முடியுமோ, அவற்றையெல்லாம் கட்டி முடித்து, வெட்டி முடித்தாகிவிட்டது. மற்ற ஆறுகளெல்லாம் காட்டாறு, மலட்டாறு வகையில் சேர்ந்தவைதான். ஏதோ சிறு சிறு திட்டங்களைப் பெரும் பெரும் செலவில் செய்து முடிக்கலாம்.

இவை தவிர, கரிகாலச் சோழன் காலத்திலிருந்து நாயக்கர்கள் காலம் வரை, பரம்பரையாக எத்தனையோ ஏரி குளங்களை நம் முன்னோர்கள் வெட்டி வைத்திருக்கிறார்கள். இனிமேல் எங்காவது புதிதாகக் குளம் வெட்டலாமென்று எவரும் சொல்ல முன் வரவில்லை. • இருக்கிற குளங்கள் தூர்ந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று பத்து ஆண்டுகளாகப் பல பெரியோர்கள் வற்புறுத்திக்கொண்டே இருக்கிறார்கள்; ஏதோ ஓரளவு வேலையும் நடந்து கொண்டுதான் வருகிறது.

கிணறுகளும் புதிதாகத் தோண்டுவதற்கில்லை. புதுக்கிணறுகள் தோண்டும்போது இருக்கிற கிணறுகளில் நீர் மட்டம் கீழே போய்விடுகிறது. அந்த அளவுக்கு ஏராளமான கிணறுகளையும் தோண்டி விட்டோம்.

பூமி அடிமட்டத்தைத் தொட்டு, பாதாளக் குழாய்க் கிணறுகள் தோண்டலாமா? என்று பூகர்ப்ப ஆராய்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றால்கூட, சிற்சில குறிப்பிட்ட இடங்களில்தான் அத்தகைய கிணறுகள் அகழ முடியும். அதுவும் ஏராளமான செலவாகும் என்று சொல்கிறார்கள். ஒரு ஏக்கர் பாய்ச்சலுக்கு ரூ. 145 வரை பிடிக்குமென்பது அரசாங்கத்தில் சிலர் கணக்கு.

வடிமுனைக் குழாய்க் கிணறுகளை கடலோரப் பக்கங்களில் அமைக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஏட்டில் எவ்வளவோ இருந்தாலும் நடைமுறையில் எத்தனை கூடிவருமென்று திட்டமாய்த் தெரியவில்லை.

இனிமேல் நமது நீர்வளத்தைப் பெருக்க வேண்டுமானால், மேற்கே பாய்கிற மலையாள ஆறுகளைக் கிழக்கே திருப்பவேண்டும்; கிழக்கே பாய்கிற ஆந்திர ஆறுகளைத் தெற்கே திருப்பவேண்டும். இது சமீபத்தில் நடப்பதாகத் தெரியவில்லை. அவரவர்கள் அவரவர்களுக்கு வேண்டிய திட்டங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு கட்டுப்பாட்டுக்கிடையிலும், நமது முன்னோர் செய்த புண்ணியத்தாலும், அதன்வழி நமக்கு வந்த பரம்பரையான வாசனைப் பழக்கத்தாலும், மொத்த சாகுபடி நிலப்பரப்பில் நூற்றுக்கு முப்பத்தெட்டு என்ற அளவில் பாசன வசதி செய்து கொண்டிருக்கிறோம். வற்றாத ஜீவநதியாகிய கங்கை, சோணை பெருக்கெடுக்கும் பீகார் போன்ற இராச்சியங்களில் பாசன நிலத்தின் சராசரி 15சதம்தான். அகில இந்திய பாசன சராசரி 16 சதம் தான். மேலும் 15 லட்சம் ஏக்கர் பாசனம் பெற சென்னை அரசாங்கத்தில் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் போகப் போக அதிக செலவு பிடிக்கிற திட்டங்களாகவே இருக்கும். இருந்தாலும்கூட, இப்பொழுது இருக்கும் 70 லட்சம் ஏக்கர் பாசன விரிவு, 85 லட்சமாகலாம்.

இந்த நிலைமையில், நமக்கிருக்கிற பாசன வசதியை எவ்வளவு இலாபகரமாக்கிக் கொள்ளலாமோ அவ்வளவும் செய்துகொள்ளவேண்டும். ஒரு ஏகராவில்—சோளம் சாகுபடி செய்தால் ரூ. 100-ம், நெல் சாகுபடி செய்தால் ரூ. 250 வரையிலும், உருளைக் கிழங்கு வெங்காயம் முதலியன சாகுபடி செய்தால் ரூ. 600-700 வரையிலும், கரும்பு சாகுபடி செய்தால் ரூ. 1100 வரையிலும்-கணக்குப் போடப்பட்டிருக்கிறது. அப்படியானால் பாசன வசதியை அதிக இலாபம் தருகிற பயிர்களைச் சாகுபடி செய்வதில் அதிகமாகப் பயன் படுத்த வேண்டும். இதற்கு, நமது சாகுபடி முறையிலேயே ஒரு தகுந்த சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். அடுத்த ஐந்து பத்து ஆண்டுகளில் பருத்தி, கரும்பு ஆகிய பயிர்களின் இப்பொழுதிருக்கும் இராச்சிய மொத்த விளைச்சலை, மேல் இன்னொரு மடங்காக்க முயலவேண்டும். அப்படியானால் நீர்வளத்தைப் பொறுத்தவரையிலும் ஒருவாறாகச் சமாளித்தவர்களாவோம்.

அனுமான் பிராண்ட் சிகரி

நமது நாட்டில் விளையும் சிகரி கிழங்குகளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. நூற்றுக்கு நூறு உத்திரவாதமுள்ளது. விபரங்களுக்கு எழுதுங்கள்:

தயாரிப்பவர்கள் :

சரஸ்வதி காபி டிரேடிங் கம்பெனி,
318/320, தெப்பம் மேல் பஜார்,
விருதுநகர்.

பிரயாணக் கட்டுரை :

42 நாட்களில், 36,000 மைல்கள்

— டாக்டர் யூ. கிருஷ்ணு ராவ் (சபாநாயகர், சென்னை சட்டசபை) —

முதன் முதலில், எனது உலக சுற்றுப்பிரயாணத்தைப் பற்றி தனது பத்திரிகையில் எழுதுமாறு அன்பழைப்பு விடுத்த 'புதுமை' ஆசிரியர் திரு. கோசல்ராம் அவர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

1959-ஜனவரியில் காமன்வெல்த் பார்லிமெண்டரி சங்கத்தின் நிர்வாகக் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள பார்படோஸுற்கு நான் சென்றேன். இந்திய இராஜ்யங்களின் பிரதிநிதியாக என்னை அனுப்பினார்கள். லோகசபை நாயகர் திரு. எம். அனந்தசயனம் அய்யங்காரும், இராஜ்யசபை உதவிநாயகர் திரு. எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி ராவும் இந்தியாவின் மற்றும் இரு பிரதிநிதிகள். லோகசபை நாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்கார் அந்த மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். 1958-டிசம்பர் 26-ம் தேதி இரவு 7-மணிக்கு சென்னை நீங்கி பம்பாயை அடைந்தேன். அன்றிரவு 12 மணிக்கே பம்பாயிலிருந்து புறப்பட்டு மறுநாள் மாலை இலண்டன் சேர்ந்தேன்.



இலண்டன் ஒரு மிகப் பெரிய அழகிய நகரம். சுமார் 7½ மில்லியன்கள் மக்கள்தொகை கொண்ட இந்நகரம், இப்போது உலகத்தில் இரண்டாவது பெரிய நகரம். நாம் எல்லோரும் புத்தகங்களில் படித்திருக்கின்ற, செயின்ட். பால்ஸ் கதீட்ரல் இங்கிலாந்தின் மன்னர்களும் அரசர்களும் முடிசூடிக் கொள்ளும் இடமாகிய வெஸ்ட் மினிஸ்டர் அபே அரச நகைகள் கண்காட்சிகளாக வைக்கப்பட்டிருக்கும் இலண்டன் கோபுரம், மேலும் புகழ்வாய்ந்த காட்சிகளாகிய டிரபால்கர் சதுக்கம், ஆக்ஸ்போர்ட் தெரு, பழைய புராதனச் சின்னங்கள் ஆகியவற்றை இலண்டனில் பார்த்தேன். துஸாட் அம்மையாரின் மெழுகுப் பொருட்கள் காட்சியையும் பார்வையிட்டேன். என்னை மிகவும் இலண்டனில் கவர்ந்தது அந்நகரத்தின் சுரங்க இரயில்வே யாகும்.

இப்பெரிய நகரத்தின் குறுக்கு நெடுக்காக முழுவதும் ஓடும் இவ்வகைப் போக்கு வரத்து அநேக மக்களால் உபயோகிக்கப்படுகிறது. இதைத் தவிர பஸ்களும், டிராம்களும் இருக்கின்றன. டிராம்களில் கண்டக்டர்களே கிடையாது. ஒரு பர்லாங் தூரத்திற்கும் 5 மைல்களுக்கும் கட்டணம் ஒன்று தான். பொதுவாக இலண்டன் மக்கள் நேசமனப் பான்மை கொண்ட யோக்கியமான நல்ல உழைப்பாளிகள்.

சமீபகாலம் வரை பரம்பரைப் பிரபுக்கள், மதத்தலைவர்கள், இராணுவ தளபதிகள் ஆகியோர் மாத்திரம் அடங்கிய பிரபுக்கள் சபையும் இருக்கிறது. ஆனால் தற்போது கலை, கலாச்சாரம் தொழில் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க சேவை செய்திருக்கின்றவர்களும் இச்சபையின் அங்கத்தினர்களாக நியமிக்கப்படுகிறார்கள். காமன்ஸ் சபையின் தலைவரை சபாநாயகர் என்று அழைக்கிறார்கள் அரசியல் முறைப்படி அரசாங்கத்தின் தலைவியாகிய அரசியார், சில சந்தர்ப்பங்களில் இரண்டு சபைகளும் அடங்கிய கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்கள். அப்பொழுது காமன்ஸ் சபையின் எல்லா அங்கத்தினர்களும் பிரபுக்கள் சபைக்குச் செல்லுவார்கள். 600 அங்கத்தினர்கள் உள்ள காமன்ஸ் சபையில் சுமார் 350 பேருக்கே உட்கார இடம் இருக்கிறது. மற்றவர்கள் எல்லாம் நிற்பதை பார்க்கும் போது ஏதோ பிரமாதமான கூட்டமும் நெரிசலும் இருப்பது போலத் தோன்றுகிறது.

டிசம்பர் மாதம் ஆதலால் மிக்க குளிர் என்றாலும் சுகமாகவே இருந்தது. ஜனவரி முதல்தேதி யன்று நவீன 'ஜெட்' விமானமாகிய "போயங்க் 707"ல் அட்லாண்டிக்கைக் கடந்து நியூயார்க்கை அடைந்தேன். 'இவ்விமானம் 30,000' உயரத்தில் மணிக்கு 600 மைல் வேகத்தில் பறந்து இலண்டனிலிருந்து நியூயார்கை $4\frac{1}{2}$ மணி நேரத்தில் அடைந்தது.

நியூயார்க் 'வானச்சுரண்டிகள்' என்று அழைக்கப்படும் மிக உயர்ந்த கட்டிடங்கள் நிறைந்த மிகப்பெரிய நகரம். உலகத்தின் மிகப் பெரிய கட்டிடம் நியூயார்க்கில் தான் இருக்கிறது. 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்' என்றழைக்கிறார்கள். நான் இக் கட்டிடத்திற்குச் சென்றிருந்தேன். ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயத்திற்கும் நான் போயிருந்தேன். தீப்பெட்டியைப் போல அமைந்திருக்கும் இக்கட்டிடத்தில் ஐ. நா. வின் பல அலுவலகங்கள் இருக்கின்றன. நியூயார்க்கின் ஒரு பகுதியாகிய 'மான்ஹாட்டன்' என்னும் இடத்தில் உலகத்தின் உயர்ந்த கட்டிடங்கள் சில இருக்கின்றன.

நவீன முறைகளின் படி அமைக்கப்பட்ட நகரம் நியூயார்க். முக்கிய வீதிகளை 'அவனியூ'க்கள் என்றும் குறுக்கு வீதிகளைத் தெருக்கள் என்றும் அழைக்கிறார்கள். உலகத்தின் தலைசிறந்த நூல்நிலையங்களுள் ஒன்றும், மிகச்சிறந்த இயற்கைச்சரித்திர 'மியுசியம்' ஒன்றும், உலகப் புகழ்வாய்ந்த சித்திரங்களும் காட்சிப் பொருட்களும் கொண்ட முதன்மையான கலைக்கூடம் ஒன்றும் நியூயார்க்கிலே உள்ளன. சிறந்த சைவ உணவு இலண்டனிலும் நியூயார்க்கிலும் கிடைக்கிறது. நல்ல சோறும் சிறந்த தயிரும் கிடைக்கின்றது. செலவினங்கள் மிக அதிகம். நியூயார்க்கில் என்னை மிகவும் கவர்ந்தது, அங்கிருந்த ஏராளமான கார்களாகும். இரண்டு மனிதர்களில் ஒருவனுக்குக் கார் இருக்கிறது. கடுமையாக உழைக்கும் இம்மக்கள் உழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்கள். மிகப் பெரிய பணக்காரனின் மகன்கூட வேலை, ஆளாக சொந்த செலவிற்கு சில டாலர்களை சம்பாதிப்பதை மதிப்புக் குறைவாக நினைப்பதில்லை.

நான் நியூயார்க்கிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றேன். காமன்வெல்த் பார்லிமென்ட் மகாநாடு நடைபெற்ற பார்படோஸ் தீவுகளுக்குச் சென்றேன். 28 ச. மைல்களைப் பரப்பளவாகக் கொண்ட ஒரு சிறிய தீவு அது; மிக அழகிய கடற்கரையைப் பெற்றிருக்கிறது. இந் நாட்டில் கரும்பு ஏராளமாக விளைகிறது. வெள்ளையரல்லாத மக்கள் நிறைந்த இத்தீவினர் மிக்க நேசமனப்பான்மை கொண்டவர்கள்.

அடுத்து நான் 'டிரினிடாட்' சென்றேன். இத் தீவில் நிறைய இந்தியர்கள் வசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் சில தலைமுறைகளுக்கு முன்பு இந்தியாவை நீங்கி வந்து நிரந்தரமாக டிரினிடாட்டினிலேயே தங்கிவிட்டார்கள்.

டிரினிடாட்டிலிருந்து நான் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிளாரிடா மாகாணத்தில் உள்ள 'மியாமி'க்குச் சென்றேன். இந்த இடம் அமெரிக்க கோடீஸ்வர பிரபுக்களின் சுவர்க்கம். பணக்காரர்கள்

காரிகையரும், + ÷ × − !

கணக்கிற்கும், இந்தப் பெண்களுக்கும்தான் எவ்வளவு பிரேமை! இந்தப் பெண்கள் தங்கள் வயதை இரண்டால் வகுத்துவிடுகிறார்கள்! தங்கள் உடைகளின் விலையையோ, இரண்டால் பெருக்கி விடுகிறார்கள்! தங்கள் கணவர்களின் சம்பளத்தையோ மூன்று மடங்கு கூட்டிச் சொல்கிறார்கள்! தங்கள் சிறந்த நண்பர்களின் வயதோடு குறைந்தது ஐந்து வருடங்களையாவது சேர்த்துக்கொள்ளத் தவறுவதில்லை!

தங்கள் விடுமுறைகளைக் கழிக்க இங்கு வருகிறார்கள். உலகத்திலுள்ள எல்லா வகை மீன்களையும் கொண்ட, மீன் காட்சி ஒன்று இங்கு இருக்கிறது.

நான் மியாமியில் இருந்து வாஷிங்டன் சென்று 5 நாட்கள் அங்கு தங்கினேன். வாஷிங்டன் அமெரிக்காவின் தலைநகரம். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாகிய ஐசன்ஹோவர் இங்கு தங்கி இருக்கிறார். அமெரிக்காவின் 'காங்கிரஸ்' என்று அழைக்கப்படும் பார்லிமெண்ட் வாஷிங்டனில் கூடுகிறது. பல்வேறு நாடுகளின் தூதுவர்களும் வாஷிங்டனில் இருக்கிறார்கள். அங்கு ஒரு மிகச் சிறந்த நூல் நிலையம் ஒன்று இருக்கிறது. பிற இடங்களில் இருப்பதைவிட இங்குள்ள அரசாங்க முறை சற்று வேறுபட்டது.

இங்கு இரண்டு சபைகள் உண்டு. மேல்சபை அங்கத்தினர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். அமெரிக்காவின் 50 இராஜ்யங்களில் இருந்தும் இரண்டிரண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த மேல் சபையின் தலைவர் உதவி ஜனாதிபதியாகிய திரு. நிக்சன். கீழ்ச்சபையாகிய செனட்டில், ஒவ்வொரு இராஜ்யத்தின் மக்கள் தொகைக்குக்கேற்ற விகிதாச்சார அடிப்படையில தேர்ந்தெடுக்கப்பட்ட 200லிருந்து 300 அங்கத்தினர்கள் வரை இருக்கிறார்கள். எல்லா அங்கத்தினர்களும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். ஜனாதிபதிகூட, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் தனது, 'அரசாங்கக் காரியதரிசிகள்' என்று அழைக்கப்படும் மந்திரிகளைத் தேர்ந்தெடுக்கிறார். அவர்கள் மேலே சொன்ன சபைகளின் அங்கத்தினர்கள் அல்ல எனவே அச்சபைகளுக்குப் பொறுப்பானவர்கள் அல்ல. எனினும், அவர்கள், சபையின் குழுவால் விசாரணை செய்யப்படுவதுண்டு.

ஜனநாயகக் கட்சியினரும், குடியரசுக் கட்சியினரும் அமெரிக்காவின் இரண்டு பிரதானக் கட்சியினர். கீழ்ச் சபையின் நாயகர், கட்சியின் பிரதிநிதியாகவே இருப்பார். அவரே பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்

அடுத்து நான் கனடா சென்று, ஒட்டாவை அடைந்தேன். இங்கும், பிரிட்டனில் உள்ளதைப் போன்ற, பார்லிமெண்டரி ஜனநாயக அரசாங்கமே உள்ளது. இரண்டு சபைகள்; பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்கள் பிரதம மந்திரி; அவர், சபைக்குப் பொறுப்புள்ள அமைச்சர்களை நியமிக்கிறார்.

ஜனவரியில் கனடாவில் ஒரே பனிமயம்; நாடே உறைந்து கிடக்கிறது.

ஒட்டாவாவில் இருந்து, உலக அதிசயங்களில் ஒன்றாகிய, நயகரா நீர் வீழ்ச்சியைப் பார்ப்பதற்காக டொராண்டோவிற்குச் சென்றேன். உலகத்தின் மிகப் பெரிய அந் நீர்வீழ்ச்சியைப் பார்ப்பது ஒரு மயிர்க் கூச்செரியும் காட்சியாகும். ஜனவரி மாதமாக இருந்ததால், நீர்வீழ்ச்சி உறைந்து கிடந்தது!

அங்கிருந்து, அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேற்குக் கரையிலுள்ள ஸான் பிரான்ஸிஸ்கோவிற்குச் சென்றேன். அது உலகின் மிக அழகிய நகரங்களில் ஒன்று; இதமான தட்ப, வெட்பம் கொண்டது; சுத்தமான தெருக்கள்; அழகாகத் திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ள நகரம். உலகத்தின் புகழ்

தனக்குப் போக தானம்...!



வாய்ந்த இரண்டு பாலங்களைக் கொண்ட பட்டினம். தங்கவாயில் பாலம், உலகிலேயே உயரமானது; வளைகுடாப் பாலம் உலகிலேயே நீள மானது.

ஸான் பிரான் ஸிஸ்கோவிலிருந்து, லாஸ்ஏஞ்சல்ஸ் சென்றேன். அமெரிக்கப் படவுலகம் அமைந்த ஹாலிவுட்டிக்கும் போனேன்.

பிறகு ஜப்பானை அடைந்தேன். வழியில் பஸிபிக்கில் உள்ள ஹோனலூலு தீவிற்குச் சென்றேன். இதமான சிறந்த தட்ப, வெட்பம் கொண்ட அழகிய தீவு அது.

ஜப்பானில் டோக்கியோவில் நான்கு நாட்கள் தங்கியிருந்தேன், தற்பொழுது உலகிலேயே அது பெரிய நகரம். 9 மில்லியன்கள் ஜனத்தொகையும், 200 ச. மைல்கள் பரப்பும் கொண்டது. டோக்கியோ, எனக்கு நமது நவீன நகர்களாகிய பம்பாய், கல்கத்தா, சென்னையை நினைவுபடுத்திற்று.

ஜப்பானிய மக்கள் சிறந்த உழைப்பாளிகள்; தேசபக்தி நிறைந்தவர்கள். புராதன புத்த சின்னங்களிருக்கும் காம குராவிற்கு போனேன். விசேட சந்தர்ப்பங்களில், ஜப்பானியர்கள் தங்களை வர்ண விசித்திர உடைகளில் அலங்கரித்துக் கொள்கிறார்கள்.

நமது நாட்டிலும், இங்கிலாந்திலும் இருப்பது போன்ற பார்லிமெண்டு அமைப்பே இங்கும் உள்ளது.

பிறகு ஹாங்காங் வழியாக இந்தியா திரும்பினேன்.

நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் இந்தியாவின் மீதும், ஐந்தாண்டுத் திட்டங்களால் நாம்அடைந்து வரும் முன்னேற்றத்திலும் மிக்க அக்கரை காட்டினார்கள். உலகத்தின் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவராக நமது பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவிற்கு அவர்கள் மிக்க மதிப்பு வைத்து இருக்கிறார்கள். ஜனநாயகத்தின் கடைசிக்கோட்டையாக இந்தியாவை மதிப்பதோடு, இந்தியாவின் வளர்ச்சியை ஒட்டியே உலக நலமிருப்பதாக உறுதியாக நினைக்கிறார்கள்.

எனது பிரயாணம் 42 நாட்கள் நடந்தது; 36,000 மைல்களை, எல்லாம் விமானத்திலேயே நான் கடந்தேன். உண்மையிலேயே அது ஒரு சிறந்த, மறக்க முடியாத அநுபவம். நான் இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டது, எனது அதிர்ஷ்டமே. எனது வாழ்வின் சிறந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாக நான் இப்பிரயாணத்தைக் கருதுகிறேன். இந்தியாவின் பிரதிநிதியாக ஒரு சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டது, ஒரு சிறந்த நிகழ்ச்சி அன்றோ?

இலக்கிய ஆராய்ச்சி தொடர் கட்டுரை :

தமிழில் சிறு கதைகள்

சாலை. இளந்திரையன்
எம். ஏ., எம். லிட்.,

1. முகப்பு

கதை மிகப் பழமை வாய்ந்தது; சிறு கதையும் அவ்வாறே. எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்துதான் 'சிறு கதை'யும் இலக்கியத்தின் ஒரு பகுதி என்னும் கொள்கை வலுப்பெற்றது. அன்று முதல் இன்றுவரை சிறுகதை தன் அளவிலும் இயல்பிலும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

பொதுவாகக் கதை இலக்கியமும், சிறப்பாகச் சிறுகதை இலக்கியமும் பன்னெடுங்காலமாக எல்லா நாட்டிலும் பல்கி வளர்ந்துள்ளனவேயாயினும், சிறுகதை தனக்கெனச் சில அடிப்படை வரம்புகளை வகுத்துக்கொண்டு தனி அமைப்புடன் வளரத் தொடங்கியது மிகப் பிற்பட்ட காலத்தில்தான். சிறுகதைக்கெனத் தனி உருவம் சமைத்துக் கொடுத்தோர் பலராவர்; அவர் அத்தனை பேரையும் இங்கே எடுத்தெழுத இயலாவிட்டாலும், இர்விங், ஹாதார்ன், ஆலன்போ ஆகிய அமெரிக்கர்களையும்-ஸ்டீவன்சன், கிப்ளிங், ஹாக்கார்டு முதலிய ஆங்கிலேயர்களையும்-எமிலிசோலா, மாப்பசான், தாதே, பவுல் மார்க்கரட் போன்ற பிரெஞ்சுக்காரர்களையும் - டால்ஸ்டாய், ஆன்டன்செகாவ் ஆகிய ருஷியர்களை சிறுகதை முதல்வர்களாகக் குறிப்பிடுதல் வேண்டும். தமிழைப் பொறுத்த வரையில் வீரமாமுனிவர், வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய பாரதியார், வேதநாயகம் பிள்ளை ஆகியோர் இத்துறையில் முதலில் முயன்றவர்களாவர்.

இலக்கியங்களுக்கு மொத்தமாகக் கட்டுப்பாடு அல்லது நெகிழ்த்த இயலாத சட்டதிட்டங்கள் எதுவும் கிடையாது. "ஒவ்வொரு புதிய இலக்கியமும் தனக்கெனத் தனிப்பட்ட அமைப்பு முறைகளையும் ஆதரவாளர்களையும் படைத்துக்கொள்ளுகின்றது' தமிழ்ச் சிறுகதை இலக்கியமும் வெகு விரைவில் இச்செயலைச் செய்துமுடித்து. தான் தோன்றிய சில ஆண்டுகளுக்குள்ளேயே, இலக்கியத்தில் தனக்கோரிடத்தை உறுதி செய்துகொண்டது. இவ்வியல்பு சிறுகதை இலக்கியத்தின் சிறப்பினாலேயே ஏற்பட்டது என்று முழுவதுமாக ஒத்துக்கொள்ளாவிடினும், அதன் செல்வாக்குக்கு அதன் சிறப்பும் ஒரு முக்கியமான காரணம் என்பதை மறுத்தல் இயலாது. மனித மனம் எப்போதுமே புதுமையை வரவேற்கும் இயல்பினது. இவ்வியல்பும் சிறுகதையின் விரைந்த செல்வாக்குக்குக் காரணமாகும். புதிதாக வரும் எதனையும், 'நம் பழமையின் சாயலே இது' என்று கூறிக்கொள்வதில் நமக்குத் தனி ஆர்வம் உண்டு. 'இருந்த வாழ்வைவிட இருக்கின்ற வாழ்வு தாழ்ந்தது' என்று எண்ணுகின்ற எந்த இனத்தினரும் இந்த இயல்பைப் பெற்றே இருப்பர். எனினும் காய்தல் உவத்தலகற்றி ஆராய்ந்து பார்ப்பதே சிறந்த முறையாகும். சிறுகதைக்கான கரு, ஒவ்வொரு மொழியிலும் உள்ள

பொதி!



இதிலேயா எடைபார்க்கப் போறீங்க! வேண்டாங்க! சாயந்திரம் 'பார்சல்' ஆபீசுக்குப் போரேமே? அங்கே பார்த்துக்குங்க, மணங்குக் கணக்குலே!

முதல் இலக்கியங்களிலேயே இருக்கின்றது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். செயற்கைப் பொருட்களின் சூழல் மிகுதியாக இல்லாத பழங்காலத்தில், எளிய வாழ்வு வாழ்ந்த மக்கள், வாழ்க்கையின் அடிப்படை உண்மைகள் அத்தனையும்கண்டு எழுதி வைத்துள்ளனர். எனவே இன்றும் இனியும் எழும் எந்த இலக்கியத் துறைக்கும் பழம் இலக்கியங்களில் கரு இருந்தே தீரும். ஏனெனில் எந்த இலக்கியப்பகுதியும் வாழ்க்கையினின்று விலகிச் சென்றுவிட முடியாது. நமது 'அகம்', 'புறம்', 'கலி' முதலிய சங்க நூல்களிலும், 'சிலம்பு', 'மேகலை', 'சிந்தாமணி' போன்ற காவியங்களிலும் பிறநூல்களிலும் சிறுகதைக்கான கரு உள்ளது என்பது உண்மையே. அது கொண்டு 'சிறுக்தை நமக்குப் மிகப் பழமையானது' என்று கூறுதல் பொருந்தாது.ஏனெனில் இப்போது நாம் காண்பது 'சிறுகதை' என்னும் இலக்கியம்; பழம் இலக்கியங்கிகளில் இருப்பது இவ்விலக்கியத்திற்கான கரு மட்டுமே.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் தமிழில் இடம்பெற்ற சிறுகதை, இந்த ஐம்பது, அறுபது ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்துள்ளது என்றே கூற வேண்டும். எத்தனையோ சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றி, எழுதி மறைந்துள்ளனர்; எத்தனையோ பேர் எழுதி எழுதிக் குவித்து வருகின்றனர். பத்திரிகைகள் அவற்றையெல்லாம் தமிழ் மக்களிடைப் பரப்பி வருகின்றன. பத்திரிகைக்குச் சிறு கதை இன்றியமையாத் தேவையாகி விட்டதென்று கூடக் கூறலாம். இன்னும் எத்தனையோ இளம் எழுத்தாளர்கள், தங்கள் படைப்புக்களுடன், ஏடேற வந்து கொண்டிருக்கின்றனர்.

எந்த ஒரு மொழி மக்களின் வாழ்வில் சாவா இடம் பெற்றுள்ளதோ, அந்த மொழியில் புதிய புதிய இலக்கியங்கள் தோன்றிக்கொண்டே யிருக்கும். இலக்கியங்கள், சமூக வாழ்வின் அடிப்படை இயக்கத்தை ஒட்டியே வளர்ந்து செழிக்க இயலும். அவ்வடிப்பட்ட இயக்கம் சமூகத்தில் தோன்றும் புதிய கொள்கைகளாலும் பிற நாட்டு மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றின் தொடர்பாலும் மாறுதலடைவது இயல்பு. அம்மாறுதல்களை ஒட்டி இலக்கியங்களும் மாற்றுருக்கொண்டு வளரும். தனித்தமிழ்ப்பண்பாட்டின் மேல் பூத்துள்ள பெரும்பாலான சங்கப் பாடல்களையும், வடமொழியும் வடஇந்தியக்கலை, நாகரிகம் முதலியனவும் வந்து விரவிய பின்எழுந்த இலக்கியங்களான காப்பியங்களையும் ஒப்பிட்டு நோக்கிஞல் சமூக மாறுதலும் இலக்கியப் புதுமையும் எத்துணைத் தொடர்புடையவை என்பது தெளிவாகும். இங்கே வந்து உலவி, நின்று, இருந்து, படுத்து, உறங்கி இருநூறு ஆண்டுகளை நம்முடன் கழித்த ஆங்கில மொழியும் அதன் இலக்கியமும், நம் மொழியில் தோற்றுவித்த புதிய இலக்கியமே சிறு கதை. எனவே நமது தமிழ்ச் சிறுகதை இலக்கியம் தமிழ்க் கருவையும் ஆங்கில உருவையும் கொண்டிருந்தால் நாம் அதில் வியப்படைய ஒன்றுமில்லை. எனினும் தமிழ் மொழியின் வளம் தனது, கருவுக்குத் தனது உருவையே கொடுக்க வேண்டும் என்னும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் 'தமிழ்ச் சிறுகதை'யைப் பற்றி ஆராய்வது தமிழுக்கும் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தரும் நன்முயற்சியாகும் அன்ருே!

இக்கட்டுரை எழுதப் பயன்பட்ட நூல்கள்.

I. முன்னுரைகள்

1. கல்கி, விந்தனின் கதைகளுக்கு எழுதியது.
2. மு. வரதராசன், விந்தனின் கதைகளுக்கு.........
3. மஞ்சேரி. ஈசுவரன், தி. ஜ. ர.வின் கதைகளுக்கு......
4. கி. சந்திரசேகரன், அகிலனின் கதைகளுக்கு......
5. ,, ,, 'ஆர்வி'யின் கதைகளுக்கு......
6. ,, ,, தி. ஜானகிராமனின் கதைகளுக்கு...
7. ரா. ஸ்ரீ. தேசிகன், புதுமைப்பித்தன் கதைகளுக்கு......
8. அகிலன்' தமது கதைகளுக்கு.......
9. தி. ஜ. ர. ,,
10. விந்தன் ,,
11. கி. வா. ஜகந்நாதன் ,,
12. C. S. Baldurin to "American Short Stories"

II. கட்டுரைகள் :

1. தமிழில் சிறுகதைகள்—டாக்டர் அ. சிதம்பரநாதன்.
2. ,, —கி. சந்திரசேகரன்
3. கதையுலகில் உல்லாச யாத்திரை —('ஆனந்த விகடனி'ல் வெளிவந்தது)
4. Short story and its devlopement in Tamil —Dr. A. Chidambaranathan (Tamil culture, July 1955)

III. புத்தகங்கள் :

1. நன்னூல் —(பவணந்தி முனிவர்)
2. இலக்கியக் கலை—(அ. ச. ஞானசம்பந்தம்)
3. இலக்கிய விமர்சனம் —(ரகுநாதன்)
4. வெற்றி வேற்கை—(அதிவீரராம பாண்டியன்)
5. மாப்பசான் கட்டுரைகள்
6. நல்ல தமிழ் எழுத வேண்டுமா ?—(அ. கி. பரந்தாமனுர்)
7. The Contemporary short story—(H. T. Baker)
8. Short story writing—(Barrat)
9. Short Stories in the Making—(R. W. Neal)
10. Writing fiction—(A. Derleth)
11. Essays on literature—(E. Shanks)
12. Stories of Hawthorne—(E. A. Poe)
13. In Formative ideals—(C. E. M. Joad)
14. Prose and Poetry—(Charles Lamb)
15. Current Literature—1896.

பொது மேற்கோள்கள் :

1. திருக்குறள்
2. திருவாசகம்
3. பாரதி நூல்கள்
4. மனேன்மணீயம்
5. அகநானூறு
6. புறநானூறு
7. ஆத்திசூடி முதலியவை.

அரசியல் கட்டுரை:

பிழைத்துப் போகட்டும்

டி. எஸ். சொக்கலிங்கம்

"ஆயுதம் எடுத்து, கலகம் செய்து பெறும் சுயராஜ்யத்தைவிட, அஹிம்சை மூலமாகப் பெறும் சுயராஜ்யம் வேறுபட்டதாய் இருக்குமென்பதில் கொஞ்சங் கூடச்சந்தேகம்வேண்டியதில்லை' என்று மகாத்மா காந்தி, 1922-ம் வருஷம் மார்ச்சு மாதம் 2உ வெளியான "யங் இந்தியா" பத்திரிகையில்எழுதினார். சுயராஜ்யம் பெறுவதற்கு 25 வருஷங்களுக்கு முன்னால் மகாத்மா எழுதிய உண்மையை இன்று நாட்டில் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆயுத பலத்தினால் சுயராஜ்யம் பெற்ற நாடுகளில், சுயராஜ்யம் கிடைத்ததும், அதற்குஎதிரிகளாய் இருந்தவர்களைத் தீர்த்துக் கட்டுவதுதான் புரட்சிக்காரர்களின் முதல் வேலையாய் இருந்தது. பிரான்சிலும், அயர்லாந்திலும், ருஷ்யாவிலும், சமீபத்தில் புரட்சி நடந்த பல நாடுகளிலும் இந்தஉண்மையைக்கண்டோம். ஆனால் இந்தியா சுயராஜ்யம் பெற்றதும் அந்த நிலைமை இங்கே ஏற்படவில்லை. சுயராஜ்யத்திற்கு விரோதிகளாய் இருந்தவர்கள், முன்போலவே சௌக்கியமாய் இருக்கும்படி விடப்பட்டார்கள். "இந்திய சுயராஜ்யத்தில் இருக்கமாட்டோம், பிரிட்டனுடன்தான் இருப்போம்" என்று தீர்மானம் செய்த அடிமைகளைக் கூட ஒரு தொந்தரவும் செய்யாமல் பகிரங்கமாய் உலாவும்படி விட்டார்கள். இந்தியாவின் தந்தையாகிய மகாத்மாவை சுட்டுக் கொல்லக்கூட தைரியம் கொள்ளும்படி அவ்வளவு சுதந்திரமாக சுயராஜ்ய எதிரிகள் விடப்பட்டார்கள். மக்கள்-அதாவது சுயராஜ்ய தாகமுள்ள மக்கள்—மகாத்மாவின் அஹிம்சையில் ஊறிப்போனபடியால் பழைய சுயராஜ்ய எதிரிகளை மன்னித்து விட்டார்கள். மன்னித்தது மட்டுமல்ல; அந்த சுயராஜ்ய எதிரிகளுக்கும் பேச்சு சுதந்திரத்தையும், எழுத்து சுதந்திரத்தையும் அரசியல் சட்டம் மூலம் அளித்தார்கள். அதாவது, மற்ற நாடுகளில் இருந்தால் உயிரைப் பறி கொடுத்திருக்கவேண்டியவர்கள், இந்த நாட்டில் மகாத்மாவின் கருணை வெள்ளத்தினால் உயிர் தப்பினார்கள்; பேச்சு சுதந்திரமும் எழுத்து சுதந்திரமும் பெற்றார்கள்; வோட்டுரிமை பெற்றார்கள்; பலர் பதவிகளையும் பெற்றார்கள்; சிலர் உயர் பதவிகளையும் பெற்றார்கள். சுயராஜ்ய விரோதிகளாய் இருந்தவர்கள் இன்று இவ்வளவு வசதிகளையும் அநுபவிக்கிறார்கள். அநுபவிக்கட்டும்; நன்றாய் அநுபவிக்கட்டும்; பிழைத்துப் போகட்டும்; ஆனால் ஒரு விஷயம்.

தேசத்திற்கு துரோகம் செய்தவர்கள் சகல உரிமைகளையும் பெற்று அநுபவித்தும், அவர்களுடைய உள்ளத்தில் மட்டும் இன்னமும் அந்த தேசத் துரோகம் இருந்துகொண்டே இருக்கிறது. அந்த தேசத்துரோகந்தான் நாட்டைச் சிதறடிக்கும் முயற்சியில் அவர்களை ஈடுபடச் செய்கிறது. அந்த தேசத்துரோகம்தான், தேசிய மொழியை எதிர்க்கவும், தேசத்தலைவர்களை அவமதிக்கவும் அவர்களைத் தூண்டுகிறது. அந்த தேசத்துரோகந்தான் மக்களை இழிநிலைமைக்கு கொண்டு வருவதற்காக ஆபாசக்கதைகளையும், ஆபாசப் படங்களையும் தயார் செய்யும்படி தூண்டுகிறது. இவற்றையெல்லால் பார்க்கும்போது தேசபக்தர்களின் மனம்கொதிக்கிறது. 'இந்தப் புல்லர்களின் இழிதொழிலுக்காகவா கண்ணீர் விட்டு சுயராஜ்யச் செடியை வளர்த்தோம்? என்று கேட்கும்படி தூண்டுகிறது. 'அஹிம்சை மூலம் சுயராஜ்யத்தைப் பெறாமல் ஆயுத பலத்தால் பெற்றிருந்தால்,இந்தப்புல்லர்களேநாட்டில் இருக்



“அடா...டா...டா.. டா...டா...டேய் பசங்களா...என்னடா இங்கே ஒரே ‘கேரளா’ பண்றீங்க? போங்கடா வீட்டுக்கு...”

கமாட்டார்களே?’ என்று நினைக்கத் தோன்றுகிறது. எல்லாம் உண்மைதான். என்றாலும் மகாத்மாவின் அஹிம்சை உணர்ச்சியில் இந்நாட்டில் பெரும்பான்மையோர் ஊறிப் போயிருப்பதால், புல்லர்கள்மீது கோபங் கொள்ள வேண்டியதில்லை. அவர்களும் பிழைத்துப் போகட்டும்! நம்முடைய சுயராஜ்ய முயற்சிக்கு எம்மாதிரி எதிர்ப்புகள் தோன்றின என்பதை நமக்கு எப்பொழுதும் நினைவூட்டி நம்மை உஷாராய் இருக்கச் செய்வதற்காகவாவது அவர்கள் நிலையான ஞாபகச் சின்னமாக இருந்துவிட்டுப் போகட்டும்!

எதிர்ப்பு இல்லாவிட்டால், போட்டி இல்லாவிட்டால், உற்சாகம் இருக்காது. அதற்காகத்தான் சர்வ வல்லமையுள்ள கடவுள்கூட சாத்தானைப் படைத்து வைத்திருக்கிறார். சாத்தானால் கடவுளை கவிழ்க்க முடியாது. அவன் செய்கையால் கடவுளின் மேன்மையையே அதிகரிக்கமுடியும். அதே மாதிரி, சுயராஜ்ய விரோதிகளால் சுயராஜ்யத்தைக் கவிழ்த்துவிட முடியாது. அவர்களின் செய்கைகளினால் சுயராஜ்யம் இன்னம் ஆழமாய் வேரூன்றி நிற்கும். இந்த விதமாகப் பார்த்தால், அஹிம்சையின் மூலம் சுயராஜ்யம் பெற்றதற்காக யாரும் வருந்தவேண்டியதில்லை. பொறுப்போம்; காலம் மாறும்; தர்மத்தை மென்மேலும் வெல்லக் காண்போம்.

முகவரி மாற்றம்

‘புதுமை’, ‘கலைவாணி பப்ளிகேஷன்ஸ்’, ‘மோகன் ராம் பிரஸ்’ ஆகிய எங்கள் நிறுவனங்களின் புதிய முகவரி :

101, புரசவாக்கம் ஹைரோடு,

சென்னை-10.

தொலை பேசி எண்: **62500**

—நிர்வாகி.

சென்னை இராஜ்யம்:

வேளாண்மை வளர்ச்சி

(விவசாய அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம்)

சென்னை இராஜ்யத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, கிராமவாசி இன்பமும், வளமும் நிரம்பிய வாழ்க்கை நடத்துவதும், தனி நபர் என்ற வகையிலும், சமூகத்தின் உறுப்பினன் என்ற வகையிலும் கிராமவாசி வளர்வதற்கென வாய்ப்புள்ள வாழ்க்கை அமைவதும் அவசியமென 1946-ஆம் ஆண்டிலேயே சென்னை அரசாங்கம் உணர்ந்தது. இந்நோக்கம் ஈடேறவேண்டுமென்று கருதி, அவ்வாண்டுக் கடைசியில் 34 பிர்க்காக்களில் கிராம முன்னேற்றத் திட்டத்தை ஆரம்பித்தது. இவ்வேலைத் திட்டம் முழுவதும் சமூக நல நோக்குடையதாகும். இக் கிராம முன்னேற்றத் திட்டமே சமுதாயநல அபிவிருத்தித் திட்டத்தின் முன்னோடியாகும்.

சென்னை ராஜ்யத்தின் மொத்த நிலப் பரப்பில் 55 சதவிகிதப் பரப்புக்குமேல், சமுதாயநலத் திட்டத்தின்கீழ் வந்துள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்முடிவடைவதற்குள் இந்த இராஜ்யம் முழுவதும் சமுதாயநலத்திட்டத்தின்கீழ் வரவேண்டுமென்று ஆரம்பத்தில் யோசனை இருந்தது. ஆனால் அனுபவத்தில் இதைச் செய்து, மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் திறம்பட செயலாற்றலாமென முடிவு செய்யப்பட்டது.

உணவு உற்பத்தி

முதல் இரண்டு திட்டங்களின்கீழ், உணவு தானியத் தேவையைப் பொறுத்த வரையில்சென்னை இராஜ்யம் பெரும்அளவுக்குத்தன்னிறைவைஎட்டி விட்டதாகக் கருதலாம்; ஆனால் ஜனத் தொகை எப்போதும் ஏறிக்கொண்டே வருவதால், அவர்களுடைய குறைந்த பட்ச அத்தியாவசியத் தேவையை ஈடு செய்ய, இன்னும் பெரும் அளவுக்கு உணவுதானிய உற்பத்தியை அதிகரிப்பது அவசியமாகும்.

சென்னை இராஜ்யத்தின்இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நகல் சில இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கருதி இதைத் திருத்தியமைக்க வேண்டியிருந்தது. உணவு தானிய உற்பத்தி 29 சதவிகிதமும், எண்ணெய் வித்துக்கள் 21 சதவிகிதமும், கரும்பு 34 சதவிகிதமும், பருத்தி 66 சதவிகிதமும் அதிகரிக்க வேண்டுமென்பதே திருத்தப்பட்ட இலக்கு ஆகும். இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் உணவு தானியங்கள் 12·79 லட்சம் டன் அதிகரிக்க வேண்டுமென்பது நோக்கம். முதல் மூன்று ஆண்டுக்காலத்தில் 6 லட்சம் டன் அதிகரித்தது. உர வகைகள் கிடைப்பது குறைந்ததாலும், சில மாவட்டங்களில் பருவ மழை தவறியதாலும் தானிய உற்பத்தி குறைந்தது. ஆயினும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவுக்குள் இலக்கில் (12·79 லட்சம் டன்) வெகு தூரம் எட்டிவிடுவோமென்று நம்புகிறேன்.

மற்ற தானியங்களிலும் அக்கறை

வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், தொழில்களைப் பரப்புவதற்கும் உணவுதானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவது மட்டும் போதாதென்று உணர்ந்தோம். சமூக, பொருளாதாரத் துறைகளில் பருத்தி, எண்ணெய் வித்துக்கள், கரும்பு போன்ற முக்கியமான பொருள்களின் உற்பத்தி அதிகரிப்புக்கும் இலக்குகள் நிர்ணயிக்கப்பெற்றது. எண்ணெய் வித்துக்கள், பருத்தி வகையரு சாதனைகள் சுமாராக இருந்தன. 1960-61-ஆம் ஆண்டு முடிவுக்குள் இலக்குகளை எட்டி விடலாமென்ற நம்பிக்கை எனக்குண்டு. கரும்பு உற்பத்தி 10 லட்சம் டன் அதிகரிக்க வேண்டுமென்று இலக்கு விதிக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளில் இந்த இலக்குக்கு ஏறக்குறைய திட்டும் விதத்தில் சாதனை அமைந்துள்ளது.

சோலைகள் வளர்ப்போம்!

தேங்காய், பழவகைகள் உற்பத்தியைப் பெருக்கவும் மும்முரமான முயற்சிகளை இந்தஇராஜ்யம்செய்துவருகிறது. பழவர்க்க சோலைகள் வளர்ச்சிக்குக் கடனுதவி செய்யப்படுகிறது. முந்திரி நமக்கு இன்றியமையாத டாலர் நாணயங்களை சம்பாதித்துத் தரும் தாவரமாகும். முந்திரிக் கொட்டை உற்பத்தியைப்பெருக்குவதற்கான தோதுநிறைய இருக்கிறது. காட்டு நிலங்களில் முந்திரிச் செடிகளை வளர்ப்பதற்குக் காட்டு இலாகா தனித்திட்டத்தை மேற்கொண்டுள்ளது. ஐந்தாண்டு காலத்தில் மொத்தம் 45,000 ஏக்கரா முந்திரித் தோப்பு வைக்க வேண்டுமென்று குறி வைத்தோம்; செங்கற்பட்டு, தென்ணார்க்காடு, முலலிய ஜில்லாக்களில் ஏறக்குறைய 27,000 ஏக்கராவில் முந்திரிச் செடிகள் நட்டிருக்கிறார்கள். காட்டு நிலமல்லாத இடங்களிலும் முந்திரி பயிரிடுவதற்கான திட்டத்தை விவசாய இலாகா மேற்கொண்டுள்ளது.

தொழில்களுக்குத் துணை!

இதுவரை குறிப்பிட்டு வந்த உற்பத்திப்பெருக்கு,இராஜ்யத்தில்அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாதென்று அஞ்சுகிறேன். மக்கள் தொகை பெருகிக்கொண்டே வருகிறது; இந்த ராஜ்யத்திலும், மற்ற இராஜ்யங்களிலும் தொழில்கள் தொடர்ந்து ஓங்கி வருகின்றன; மக்களுக்கும், தொழில்களுக்கும் தேவையான எல்லா விவசாயப் பொருள்களும் போதுமான அளவுக்குக் கிடைக்கும் வண்ணம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திலும், அதற்கடுத்த திட்டங்களிலும், மிகவும் மகத்தான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு உணவும் உடையும் போதுமானபடி அளிப்பதுடன், பலவகைத் தொழில்களுக்கும் வேண்டிய மூலப் பொருள்களைப்போதுமான அளவுக்குவழங்குவதுடன் இந்த இராஜ்யத்தின விவசாயத் தொழில்துறை, அந்நிய நாணயச் செலாவணிகளைச் சம்பாதிப்பதற்கும் சிறந்த அளவுக்கு முயலவேண்டும்; நாட்டின் பொருளாதார வளமைக்கு அந்நிய நாணயம் வேண்டற்பாலதாகும்.

மூன்றும் திட்டத்தில் 40% உணவுப் பெருக்கு!

இந்த ராஜ்யத்தில் மேற்சொன்ன பண்டங்களின் வளமைக்கான நீண்டகால தோதுக்களைக் குறித்து, அண்மையில் விவசாய உற்பத்தி நிபுணர்கள் ஆலோசனை நடத்தினார்கள். மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியமான முறைகளைக் குறித்துத் தற்காலிகமாகச் சில திட்டங்களை வகுத்துள்ளனர். இந்திய அரசாங்கம் அமைத்துள்ள வேலைத்திட்டக் குழுக்கள் இந்நகல்களைப் பற்றி ஆலோசித்து வருகிறார்கள்; அதன் பின் தெளிவான உருவகம் அமையும்.

மூன்றும் திட்ட காலத்தில், ராஜ்யத்தில் உணவு தானிய உற்பத்தி ஏறக்குறைய 20 லட்சம் பெருக வேண்டும்; இது 1960-61-லும் ஆண்டு முடிவில் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியைக் காட்டிலும், ஏறத்தாழ 40 சத விகிதம் அதிகமாகும்.இதைச் சாதித்துவிட்டால், பருவ மழை தவறினாலும் கூட,இராஜ்ய மக்களுக்கு இராஜ்யத்திற்குள்ளேயே எல்லாஉணவுத்தானியங்களும் கிடைக்கும் கிடைக்குமென்று துணிந்து

கூறலாம். உரவகைகள் வினியோகிக்கவும், பசுந்தாள் உரப்பயிர்கள் நிலங்களை அதிகப்படுத்தவும், தேர்ந்த விதைகளை உபயோகிப்பதைப் பெருவாரியாக்கவும் மும்முரமாக வேலை செய்ய உத்தேசம். உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் பெரிய பாசனத் திட்டங்களும் சிறிய பாசன திட்டங்களும் வகிக்கவிருக்கும் பங்கு கொஞ்சமாயிராது.

பருத்தி சாகுபடியாகும் நிலப்பரப்பை இனி அதிகரிப்பதற்கு இடமில்லை. ஆயினும் புது அணைத் திட்டங்களின் கீழ் கிடைக்கும் பாசன வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, தினைவகை, வேர்க்கடலை சாகுபடியுடன் ஊடுப்பயிராக பருத்தியை சாகுபடி செய்வதற்கு சகல முயற்சிகளும் செய்யப்படும். பருத்தி சாகுபடியை 33 சதவிகிதம் பெருக்குவதற்கான இலக்கு ஏற்படுத்தப்பட்டுளது. எண்ணெய் வித்துக்கள் இலக்கு 20 சத விகிதம்; கரும்பு இலக்கு 25 சத விகிதம். இதைத் தவிர, பழவகைகள், தேங்காய், காய்கறிகள், முந்திரி வகையரு சாகுபடி நிலப்பரப்பை விஸ்தரிக்கவும் யோசனை உள்ளது.

வரப்புயர, வாழ்வுயரும்!

மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், உத்தேசித்துள்ள இலக்குகளை எட்ட, நமது இராஜ்யத்தின் விவசாயிகள் பெருமுயற்சி எடுக்கவேண்டும். இந்த இராஜ்யத்தின் கண்டுமுதல் அளவு மற்ற இராஜ்யங்களைவிட அதிகம் என்பது நீங்களறிந்ததே. தேர்ந்த விதைகளை உபயோகித்தும், விவசாயத்துறையினர் கூறும் முறைகளைப் பின்பற்றியும் இன்னும் அதிகம் சாதிக்க இயலும். நமது விவசாய நிலை முன்னேறச் செய்வதற்கு இடைவிடாத முயற்சி அவசியம். இத்தேசியத் திருப்பணியில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் நோக்கம் ஈடேறச் செய்வார்களாக.

கிராமங்களே இந்தியாவின் உயிர் நாடி; நாட்டான் வாழ் நாடு வாழும். விவசாயப் பொருளாதாரமே நாட்டின் முதுகெலும்பு. விவசாயத்துறையில் மட்டுமின்றி, மூலப்பொருள்களுக்கு விவசாயத்தை எதிர்பார்க்கும் பலவகைத் தொழில்களிலும் ஏராளமான பேருக்கு வேலை தருவதாகும்.

பெரும் முதலீட்டைக் கோரும் தேர்ந்த விவசாய முறைகளை மேற்கொள்வதற்கு சிறு, சிறு நிலவுடைமைகளும், குடியானவர்களின் வறுமையும் பெரும் இடைஞ்சலாக இருக்கின்றன. குடியானவர்களுக்கு நிறையப் பண உதவி கிடைக்கும் விதத்தில் இரண்டாவது திட்ட காலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கூட்டுறவு ஸ்தாபனங்களிடம் ஏராளமான நிதிகள் ஒப்படைக்கப்பட்டன. விவசாயிகளுக்கு வேண்டிய கடனுதவிகளையெல்லாம் கூட்டுறவு ஸ்தாபனங்கள் வாயிலாகச் செய்ய வேண்டுமென்பது உத்தேசம் மூன்ரும் திட்ட காலத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்களின் உபயோகத்தை மேற்கொண்டு விஸ்தரிக்க உத்தேசம்.

சேவைக்கூட்டுறவுகள் வேலையை மும்முரமாக்கலாமென்று யோசனை. இவை சாகுபடியாளர்களுக்கு அவசியமான பண வசதிகளைச் செய்வதுடன், நல்ல விதைகள், உரவகைகள், மற்றும் வெற்றிகரமான சாகுபடிக்கு வேண்டிய சாதனங்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யும்.

மூன்ரும்திட்டகாலத்தில், இக்கூட்டுறவுகள் எங்ஙனம் இயங்க வேண்டுமென்பதைப்பற்றி அரசாங்கத்துறையில் மட்டுமின்றி, மக்களிடையிலும் சம்பந்தப்பட்டவர்கள் விவரமாகப் பரிசீலித்து வருகிருர்கள்.

இதன் பயனுக, விவசாயிகளுக்கு இடையருமல் எல்லா பண வசதிகளும், விதை, உரம் போன்றவைகளும், கிடைப்பதற்குரிய வகையில் தக்க ஏற்பாடுகள் செய்ய இயலுமென்று நம்புகிறேன்.

(23-7-59 இரவு 9-15 மணிக்கு ரேடியோவில் சென்னை மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் நிகழ்த்திய உரையின் தழுவலே இக்கட்டுரை. இக் கட்டுரையை வெளியிட அன்புடன் இசைந்தருளிய அமைச்சருக்கும், அகில இந்திய வானொலி நிலையத்தினருக்கும் எங்கள் நன்றி.)

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES
DRAWING FRAMES
FLY FRAMES
RING SPINNING FRAMES
REELING MACHINES
BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes

ENQUIRIES SOLICITED:

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, Coimbatore. (South India)

Telephone: 409 & 1409 *Telegrams: "TEXTOOLCO"*

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத்திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட், பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிரஞ்சு :

போன் : 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 31752 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவனிங் பஜார் :: :: P. T. மதரூஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.



11. மற்றுமொரு அன்னை!

களப்பிரர்களால் தாக்கப்பட்டு மயங்கி விழுந்த இளம்வழுதியை நோக்கி வந்த வண்டியில் வரகுணத் தேவர்தான் இருக்கிருர் என்றுகுடிகாரர்கள் நம்பினுர்கள். அதனுலேயே, அடிபட்டு விழுந்தவனை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் அவர்கள்.

மிடுக்கு நிறைந்த குதிரைகள் ஒயிலாக இழுத்து வந்த அந்த அலங்கார வண்டி மெதுவாக முன்னேறியது. பாதை நடுவில் ஒருவன் கிடப்பதைக் கவனித்த வண்டிக்காரன் 'ஐய்யய்யோ!' என்று பதறி, வண்டியை நிறுத்தினுன்.

உள்ளேயிருந்து 'என்ன?' என்ற கேள்வி பிறந்தது.

'யாரோ நடுத்தெருவிலே விழுந்து கிடக்கிருர்கள்!' என்ருன் அவன்.

'குடித்து விட்டு மயங்கிக் கிடப்பான்' என்ற பதில் எழுந்தது. பெண்ணின் மென்குரல் அது.

'இல்லை அம்மா. வண்டி அங்கே வரும்போது, இந்த இடத்திலே ஏதோ குழப்பமாகத் தெரிந்தது. பலபேர் ஒருவனைத் தாக்குவது போல்...' என்று மெதுவாகப் பேசலானுன் அவன்.

'களப்பிரர்களா?' என்று கேட்ட குரலில் பதட்டமிருந்தது. ஒரு கரம் வண்டியின் பூந்திரையை விலக்க, வெளியே ஒரு முகம் எட்டிப் பார்த்தது. அவ்வாறுநோக்கியவள் வரகுணத் தேவர் மகள் திலகவதியேயாவள்.

அவள் பார்வை தெருவில் கிடந்தவன் மீது படிந்தது. நெற்றியில் ரத்தம் வடிய, அவன் முகம் பளிச்செனத் தெரிவதை அவள் கவனித்தாள். 'ஆ, அவரா?' என்று பதறியது அவள் உள்ளம். 'அவரே தான்! இளம் வழுதி தான்.' அவள் நினைவு அவளை ஏமாற்றுவது கிடையாது.

'விழுந்து கிடப்பது களப்பிரன் இல்லையே!' என்ருள் அவள்.

'இல்லை அம்மா. நம்மவர் தான்' என்று முனங்கினுன் வண்டிக்காரன்.

'பாவம்! கடுமையாக அடிபட்டிருக்கும் போல் தோன்றுகிறது. உயிர் இருக்கிறதோ இல்லையோ!' என்று தவித்தாள் அவள். 'கீழே இறங்கிப் பக்கத்திலே போய்ப் பாரேன்' என்று பணித்தாள்.

அவன் இளம்வழுதியின் அருகில் சென்று ஆராய்ந்தான். 'உயிர் இருக்கிறது அம்மா' என்ருன்.

'அப்படியானுல் அவரை மெதுவாகத் தூக்கி வா. வண்டிக்குள்ளே படுக்க வை' என்று உத்திர விட்டாள் திலகவதி.

கண்ணன்

வண்டிக்காரன்வியப் புற்ருன். நிமிர்ந்து நின்று அவளை ஆச்சர்

யமாகப் பார்த்தான். 'நம்ம வண்டியிலா அம்மா?' என்றான்.

'ஆமாம். பின்னே வேறே வண்டி எங்கே இருக்கிறது?' என்று தேவரின் திருமகள் கேட்டாள்.

'இது யாரோ...'

'அதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? நம்மைப் போன்ற ஒரு உயிர். ஆபத்தில் சிக்கி உணர்வற்றுக் கிடக்கிறவர்களுக்கு உதவி புரிய வேண்டியது நமது கடமை. வீணாக யோசித்துக் கொண்டு நில்லாதே. அவரை எடுத்துவா'

திலகவதியின் மென்மையான பேச்சு திடமான கட்டளையாகவே தொனித்தது. அதற்குக் கீழ்ப்படிய வேண்டியது தானே அவன் கடமை?

வண்டிக்காரன் மறுபேச்சுப் பேசாமல், இளம்வழுதியைச் சுமந்து வந்து, வண்டியினுள் கிடத்தினான். தனது இடத்தில் அமர்ந்து மீண்டும் வண்டியைச் செலுத்தலானான்.

திலகம் வண்டிக்கதவைச் சாத்தி அடைத்துக் கொண்டாள். வசதியான மூடு வண்டி அது. உள்ளே இருப்பவர்களை வெளியேயிருந்து எவரும் கண்டு கொள்ள முடியாது.

'ஐயாவுக்குத் தெரிந்தால் மிகவும் கோபிப்பார்கள்' என்று வண்டிக்காரன் முணுமுணுத்தான்.

'தெரிந்தால் தானே!...அவர்களுக்கு ஏன் தெரிய வேண்டும்? என்று கேட்டாள் அவள். 'நீ வாயைத் திறவாமலிரு. அது போதும். நான் சொல்ல மாட்டேன். இவரை இப்படியே நடுத்தெருவில் போட்டு விட்டுச்சென்றால் என்ன ஆவது? திரும்பவும் வெறியர்கள் வருவார்கள். முன்பு தாக்கியவர்களோ, அல்லது வேறு குடியர்களோ வரலாம். வந்து இவரைக் கொன்று விடுவார்கள். அது தான் நடக்க வேண்டும், அதுவே நல்ல ஏற்பாடு என்பது தான் உன் எண்ணமா?'

'இல்லை அம்மா. உங்கள் விருப்பம் போலவே செய்யுங்கள்!' என்றான் அவன்.

வண்டி அவசரமற்ற கதியிலே சென்று கொண்டு தானிருந்தது. இப்பொழுது வண்டி ஓட்டி வந்தவன் வழக்கமாகத் தேவரோடு செல்கிறவன் அல்ல...வீர புத்திரன் என்ற அந்த வேலையாளாக இருந்திருந்தால், இளம்வழுதியை உடனேயே இனம் கண்டு கொண்டு, வண்டியை விலக்கிச் சென்றிருப்பான். முந்திய நாள் இரவில் வண்டியை மறித்து வம்பு செய்தவனை—தேவரிடம் எதிர்த்துப் பேசியவனை—விளக்கொளியில் அவன் நன்றாகக் கவனித்திருந்தான்...இவனோ தேவரிடம் பயம் கொண்டிருந்த போதிலும், தேவர் மகளிடம் ஒருவித பக்தியே செலுத்தினான் என்று சொல்லலாம். எனவே இவன் திலகவதியின் சொல்லைத் தட்டி நடக்கவே மாட்டான்.

'அம்மா, வண்டியை எங்கே கொண்டு போக?' என்று விசாரித்தான் வண்டிக்காரன்.

விஷ்ணுசிம்மன் மனைவி பூங்குழலியைப் பார்ப்பதற்காகத் தான் திலகவதி கிளம்பியிருந்தாள். களப்பிரனான விஷ்ணுசிம்மன் மதுரைமாநகரில் சிறப்புடன் வாழ்க்கை நடத்திய வணிகன் ஒருவனின் மகளை மணம் புரிந்திருந்தான். களப்பிரர்களுடன் நல்லுறவோடு வாழ ஆசை கொண்ட வரகுணத் தேவர் அவனுடைய நட்பைப் பெரிதும் மதித்து வந்தார். அதனால், தன் மகள் அடிக்கடி விஷ்ணுசிம்மனின் குடும்பத்தோடு பழகி நல்லெண்ணத்தைப் போற்றி வளர்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். பூங்குழலி நல்லவள். அவளுக்கும் பலருடன் பேசிப்பழகிப் பொழுது போக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆனால் அவளது மணவாழ்வு அவள் இஷ்டம் போல் வாழ வழி செய்யவில்லை. ஆகவே, திலகவதியின் உறவு அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியே தந்தது. தந்தையின் வற்புறுத்தலுக்காக உறவு கொண்டாட இணங்கிய திலகம், காலப்போக்கில் பூங்குழலியின் நற்பண்புகளை உணர்ந்து அவளது நட்பை வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டாள்.

வழியில் எதிர்பாராத நிகழ்ச்சி குறுக்கிட்டு விட்டதால், அவள் விஷ்ணுசிம்மன் இல்லம் செல்ல விரும்பமாட்டாள் என்று வண்டிக்காரன் எண்ணினான். அவன் யூகம் சரியானது தான்.

'பூங்குழலிப் பிராட்டியார் வீட்டுக்கு இப்போது போக வேண்டியதில்லை.

வண்டியை நமது மாஞ்சோலை இல்லத்துக்கு ஓட்டு' என அறிவித்தாள் திலகவதி.

அந்தி கருகி இருள் பரவிக் கொண்டிருந்தது. மங்கிய வெளிச்சத்தில் அவள் இளம்வழுதியின் முகத்தை நோக்கினாள். அவன் வேதனையால் முகம் சுளிப்பதுபோல் தோன்றவே கூர்ந்து கவனித்தாள். அவனுக்குக் குடிப்பதற்கு ஏதாவது கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் எழுந்தது. ஓடும் வண்டியிலிருந்து கொண்டு என்ன கொடுக்க முடியும்?

விஷ்ணுசிம்மனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகப் பூங்குழலியிடம் அளிப்பதற்கு, அவள் தந்தை விசேஷ சிரத்தையோடு தயாரித்திருந்த மதுரபானம் அவளிடமிருந்தது. திலகவதி சிறிதும் தயங்காமல் அதை எடுத்து, ஒரு தாயின் பரிவோடு, அவன் வாயில் மெதுவாக ஊற்றினாள். அவன் முகத்தில் தெளிவு பிறப்பதைக் கண்டதும் அவள் உள்ளம் ஆனந்தம் கொண்டது.

வண்டி 'மாஞ்சோலை இல்லம்' சேர்வதற்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. வரகுணத்தேவருக்கு வசதியான வீடுகள் பல இருந்தன. அவற்றில் 'மாஞ்சோலை இல்லம்' தனித்தன்மை உடையது. ஊரை விட்டு ஒதுங்கி, ஆற்றங்கரை அருகில், நன்கு வளர்ந்து நின்ற மாமரங்களின் நடுவில் அமைந்திருந்தது அது. கோடைகாலத்தில் பகல் பொழுதுகளைப் போக்குவதற்காகத் தேவர் அங்கு வருவது உண்டு. இதர காலங்களில் எல்லாம் அநேகமாக அந்த இல்லம் அடைபட்டே கிடக்கும். ஆயினும் அதைப் பாதுகாக்கவும், வசதிகள் குறையாதபடி கவனித்துக் கொள்ளவும் தேவையான பணியாட்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இளம்வழுதி ஓய்வு பெறுவதற்கு ஏற்ற இடம் அதுவே என்று திலகவதி அதனால்தான் தீர்மானம் செய்தாள்.

நன்றாக இருட்டிய வேளையில் தான் வண்டி அந்த இடத்தை அடைந்தது. 'இதுவும் நல்லதுக்குத் தான். யாரும் சந்தேகம் கொள்ள இடமிராது' என்று திலகம் கருதினாள்.

இளம்வழுதியை மெதுவாக எடுத்து வரச் செய்து, சௌகரியமான படுக்கை மீது படுக்கவைத்து, விளக்கு வெளிச்சத்தில் அவனை நன்றாக ஆராய்ந்தாள் அவள். அவனுக்கு பலத்த காயம் எதுவுமில்லை. அங்குமிங்கும் கத்திகள் சிறிது கீறியிருந்தன. ஆழமான வெட்டு ஒன்றுமில்லை. நெற்றியில் தான் அடி சிறிதே அழுத்தமாகப் பட்டிருக்க வேண்டும். அஞ்சுவதற்கேதுமில்லை என்ற உணர்வு அவள் மகிழ்ச்சியை அதிகப்படுத்தியது.

அந்த இல்லத்திலிருந்த தைல வகைகளில் ஒன்றை எடுத்து அவள் வழுதியின் காயங்கள் மீது பூசினாள். ஒரு மருந்தை நெற்றியில் வைத்துக் கட்டினாள்.

இளம்வழுதி சிறிது புரண்டான். அவன் கண்கள் மலர்ந்தன. தூங்கி விழுந்தவன் போல் உடலை நெளித்து உருண்டான். முழுதும் உணர்வு வரப் பெற்றவனாய்த் திடுக்கிட்டான். எழுந்து உட்கார முயன்றான்.

'பதற வேண்டாம். அமைதியாகப் படுத்திருங்கள்!' என்று கூறி, அவனைத் தன் கைகளால் தடுத்தாள் திலகம்.

அவளுடைய தீண்டுதலினாலும் குரலினாலும் மெய்சிலிர்த்த இளம்வழுதி நிமிர்ந்து நோக்கினான். வியப்பினால் விழிகள் அகல, அவள் முகத்தை நன்கு கவனித்தான். 'நீங்களா?' என்று அவன் உதடுகள் உச்சரித்தன. 'நான் எங்கே இருக்கிறேன்?' என்றபடி அவன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

'என்னைத் தெரிகிறதா?' என்று புன்னகையோடு கேட்டாள் அவள்.

'தனக்கு உதவி செய்தவர்களை இளம்வழுதி எளிதில் மறப்பதில்லை' என்றான் அவன். எழுந்து உட்கார்ந்தான்.

'நீங்கள் படுத்திருப்பதே நல்லது' என்றாள் அவள்.

'இப்போது எனக்கு ஒன்றுமில்லை. நெற்றியில் மட்டும் சிறிது வலிக்கிறது... இது வரகுணத்தேவர் வீடு தானே?' என்று கேட்டான் அவன்.

'ஆமாம். ஆனால்...'

அவன் அவசரமாக எழுந்தான். அந்த வேகத்தால் சிறிது தள்ளாடிய போதிலும், கீழே விழுந்து விடாமல் தற்காத்துக் கொள்ளும் சக்தி அவன் உடலில் இருந்தது.

'முன்பு உங்களுக்கு அறிமுகமான நிலையம் அல்ல இது. மாஞ்சோலை இல்லம் என்கிற ஆற்றங்கரை வீடு இது. இங்கே என் தந்தை வரமாட்டார். நீங்கள் அலட்டிக்கொள்ளாமல் ஓய்வு பெறுவதே நலம் தரும்' என்று திலகவதி அன்புடன் மொழிந்தாள்.

அவள் கூற்றில் நம்பிக்கை கொண்ட வழுதி அமைதியாக அமர்ந்தான். 'நான் இங்கே எப்படி வந்தேன்?' என்றான்.

அவள் நடந்ததைச் சொன்னாள்.

'நீங்கள் தெய்வம். உங்கள் தந்தையின் எதிரி என அறிந்தும் கூட நீங்கள் என்னை இரண்டு தடவைகள் காப்பாற்றி விட்டீர்கள்...'

நன்றிப்பெருக்குடன், உணர்ச்சித் துடிப்போடு, பேசலானுன் அவன்.

அவள் தனது உணர்வுக் குழப்பத்தை அடக்கிக்கொண்டு அமைதியாக உரைத்தாள்: 'நான் சாதாரணமான பெண் தான். மனித இதயம் பெற்ற யாரும் செய்யக்கூடியதைத் தானே நானும் செய்தேன்?'

'இருந்தாலும்,உங்கள் கருணை உள்ளம் மிகவும் புனிதமானது, உயர்ந்தது என்றே நான் மதிக்கிறேன். உங்களுக்கு என் நன்றியை...'

அவள் வேகமாய் குறுக்கிட்டாள்: 'நீங்கள் பேசாமலிருங்கள். அமைதியாக இருப்பதே நல்லது.'

'எனக்கு இப்போது ஒன்றுமில்லை' என்று அவன் மீண்டும் சொன்னுன். 'நான் எதிர்பாராத வேளையில் வெறியர்கள் பலர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். நான் வெறுங்கையனுக நின்றேன். இல்லையெனில், அவர்களில் ஓரிருவரையாவது வீழ்த்தியிருப்பேன்...'

அவன் வீண்பெருமை பேசவில்லை என்பதை அவனது தடந்தோள்களும் வீங்கிய புயங்களும் அகன்ற மார்பும் அவளுக்கு எடுத்துக் காட்டின. அவள் கயல் விழிகள் வீரம் நிறைந்த அவன் மேனியை அளவிட்டன. அவன் சொற்கள் ஜீவனுக்கு உவகையூட்டின.

'இருந்தாலும் நீங்கள் தனியே இந்நகரில் திரிவது தகாது. அன்றே நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? என் தந்தையைக் காண வரவேண்டாம்; அந்தப் பக்கம் திரும்பவும் வேண்டாம் என்று எச்சரித்தேனே...'

'நான் தேவரைக் கண்டு பேச வரவில்லை...'

'ஆனுல், நீங்கள் இருந்த நிலையில் அவர் உங்களைக் காண நேரிட்டால் உங்கள் கதி என்ன ஆகியிருக்கும்? குடியர்கள் மீண்டும் வந்திருந்தால் உங்களைச் சும்மாவா விட்டிருப்பார்கள்?'

அவள் பேச்சில் உண்மை ஒலி செய்ததால் அவன் மறுத்துரைக்க முடியாமல் இருந்தான்.

'இன்று இந்நகரில் ஏற்பட்டுவிட்ட புதிய மாற்றங்களை நீங்கள் அறியவில்லை போலும்! இந்நகர மாந்தர்களிடமுள்ள கத்தி, வாள், ஈட்டி போன்ற கருவிகளை எல்லாம் பிடுங்கும்படி கூற்றன் நாயனுர் கட்டளை பிறப்பித்து விட்டார். வீடுவீடாக வீரர்கள் சோதனை செய்யத் தொடங்கியுள்ளனர்...'

'ஓகோ!' என்ருன் இளம்வழுதி. 'அதனுல் தான் நகர மக்கள் பரபரப்புற்றுக் காணப்பட்டார்களோ? இன்று பகலில் தெருக்களில் மக்கள் கூடிக்கூடிப் பேசி நின்ருர்கள். அவர்கள் முகத்தில் அச்சமும் ஐயமும் குழம்பிப் படர்ந்ததையும் கவனித்தேன். அது ஏன் என்று இப்பொழுது தான் புரிந்தது' என்ருன் இளம்வழுதி.

'தலைநகரில் மட்டும் அச்சத்தை விதைப்பது போதாது என்று கூற்றன் நாயனுர் கருதிவிட்டதாகத் தெரிகிறது. உள்நாடுகளிலும் கூற்றங்களிலும் களப்பிரரின் உண்மை ஆற்றலை மீண்டும் எடுத்துக் காட்டி, தங்கள் ஆட்சி நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வீரர்கள் குதிரைகளின் மீதேறிச் சென்றிருக்கிருர்கள்...'

'ஓ!' என்ருன் வழுதி, மறுபடியும். 'இன்று அதிகாலையில் குதிரை வீரர்கள் செல்வதையும் நான் கண்டேன். இதற்காகத்தானு?'

அவன் உள்ளம் கொதிப்படைந்தது. 'நாட்டு மக்களை பிள்ளைப்பூச்சிகளாக மாற்றிவிட்டார்கள் இவ்வெறியர்கள். தலை தூக்கவும் அஞ்சுகிற பொட்டுப் பூச்சிகளாக மாற்றிவிட்டது போதாதென்ருே, அவர்களை மண்ணோடு மண்ணுகத் தேய்ந்துவிடத் திட்டமிடுகிருர்கள் இவ் வீணர்கள்?...'

அவசரமாகக் குறுக்கிட்டாள் திலகவதி. 'பொறுமையோடு இருங்கள்!

ஆத்திரம் அடைவது உங்களுக்கே திமை உண்டாக்கும்...'

'உண்மை. அன்னை மங்கையர்க்கரசி எனக்கு அறிவுறுத்தியதை நான் அடிக்கடி மறந்து விடுகிறேன்' என்று முனங்கினுன் அவன்.

'மங்கையர்க்கரசியா!' என வியப்புற்ருள் திலகம்.

'ஆமாம், தமிழகத்து ஆண்கள் வீரமிழந்து உணர்வற்றவர்களாய் மாறிவிட்டார்கள். ஆயினும் தமிழ்ப் பெண்கள் அன்பையும், அருள்நோக்கையும், மனத்திண்மையையும் இழந்துவிடவில்லை என்பதை எனக்கு உணர்த்திய என் தாய்க்கு அடுத்த அன்னை மங்கையர்க்கரசிப்பிராட்டி' என்று நன்றி பெருகும் குரலில் உணர்வு துடிக்கப் பேசினுன் வழுதி.

'இந் நகரத்தின் பிராட்டியாரையா குறிப்பிடுகிறீர்கள்? அவர்களை உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று வினவினுள் அவள்.

அவன் சொன்னுன் தொடர்ந்து, 'அதே உண்மையை எனக்கு மீண்டும் வலியுறுத்தி விளக்கும் தெய்வம் நீங்கள்...'

'என்னைத் தெய்வம் என்று சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ளவில்லையா?' வேதனை ஒலித்தது அவள் குரலில்.

'அப்படியானுல், அன்னையாகவே உங்களையும் மதிக்கிறேன். எனக்கு உதவிய அன்னையின் பெயரை நான் அறிய வேண்டாமா?...'

இளம்வழுதி தன்போக்கில் பேசிக் கொண்டிராமல், அவள் முகத்தைக் கவனித்திருந்தால் திலகவதியின்துயரம் அங்கு சூழ்ந்ததைப் புரிந்திருக்கலாம். கருநிறத்தவளான அந்த இளம்பெண்ணின் முகத்திலே கூட இரத்தம் வேகமாகப் பாய்ந்து ஒரு மாறுதலை ஏற்படுத்தியதை அவன் உணர முடிந்திருக்கும், அவன் சொல்,அவள் இதயத்தில் தைத்தது என்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது. உள்ளத்தில் தோன்றிய ஒரு ஏக்கத்தின் நிழல் அவள் விழிகளில் ஆடியது. திலகம் பெருமூச்செறிந்தாள். 'திலகவதி' என்று முனங்கினுள்.

'அம்மா, உங்களை நான் மறக்க முடியாது என்னுல் . வருகிறேன்,' என்று கூறி, கை கூப்பி வணங்கிவிட்டு அவன் வேகமாக வெளியேறினுன்.

'தனது உள்ளத்தை உணர்ந்து கொள்ளவில்லையே அவன்' என்ற ஏக்கத்தோடு, வேதனையோடு, குழப்பத்தோடு நின்ற திலகவதிக்கு அவனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றே தோன்றவில்லை; முதலில் அவன் இருளில் மறைந்து சிறிது நேரமான பிறகே தன் தவறை உணர்ந்தாள் அவள்.

'அடஅடா! இரவு வேளைகளில் எவரும் வீதிகளில் தலைகாட்டக் கூடாது; ஆணை மீறி நடக்கத் துணிகிறவர்கள் உடனடியாகக் கொல்லப்படுவர் என்றும் கூற்றன் நாயனுர் அறிவித்திருக்கிருரே! அதை நான் இவரிடம் தெரிவிக்க மறந்து போனேனே!' என அங்கலாய்த்தாள் திலகம். தன் கைகளைப் பிசைந்து கொண்டு நின்ருள்.

'அம்மா!' என்ற அழைப்பு அவளைத் திடுக்கிடச் செய்தது. இளம்வழுதி தான் திரும்பி வருகிருனே என்ற ஆவலோடு கவனித்தாள்.

• ஆனுல், வண்டிக்காரன் தான் எட்டிப் பார்த்தான். 'நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் விடுபோய் சேராவிட்டால், ஐயா...'

அவனை மேலே பேசவிடவில்லை அவள். 'ஆமாம்? என்று கூறி வண்டியில் ஏறிக் கொண்டாள்' 'வண்டி வேகமாகவே போகட்டும். என்று உத்தரவிட்ட பிறகு அவள் வேறு பேச்சு பேசவேயில்லை; தனது எண்ணங்களோடு குழம்பிக்குவிந்தாள்.

12. இருளோடு இருளாய்!

திலகவதியின் மூலம் அறிந்த செய்திகளால் ஏற்பட்ட உணர்ச்சிக்கொதிப்பு குறையாதவனுய் இளம்வழுதி வேகமாக நடந்தான். மாஞ்சோலையை விட்டு வெளியேறி ஆற்றங்கரை ஓரமாகவே சென்ருன் அவன்.

அப்பொழுது உலகை இருள் கரிய திரை கொண்டு போர்த்தியிருந்த போதி

ழும், வானவெளியில். பூத்துக்கிடந்த எண்ணற்ற வெள்ளிகளின் ஒளி மங்கலாக நிலவியது. அதன் உதவியால் பாதையை உணர்ந்து நடப்பதும், சூழ்நிலையை ஒருவாறு புரிந்து கொள்வதும் சாத்தியமாயிற்று.

'மீனுட்சி ஆச்சி வீட்டுக்கு விரைவில் போய்ச்சேர வேண்டும். சாத்தன் கணபதி இதற்குள் அங்கே வந்தாலும் வந்திருக்கலாம்!' என்ற எண்ணம் எழவும் அவன் கால்கள் மேலும் வேகமாக நடை போட்டன.

திடீரென்று 'சரசர' என்று ஒரு ஓசை கேட்டது. தரை மீது கிடக்கும் உதிர் சருகுகள் எழுப்பிய ஓசை அது. இளம்வழுதி சட்டென நின்றுன். 'பாம்போ பூச்சியோ நெளியும் சலசலப்பாக இருக்குமோ?' என்றது அவன் மனம். ஆனுல் அந்த ஒலி தொடர்ந்து கேட்டது. யாரோ நடந்து வருவதனுல் எழுந்த ஓசை என்பதை அவன் புரிந்து கொள்ள முடிந்தது.

எனவே அவன் அருகிலிருந்த பெரிய மாமரம் ஒன்றின்பின்னே ஒதுங்கிப் பதுங்கிக் கொண்டான்- தன் கண்களை ஆந்தைக்கண்களாக்கிஇருட்டிலே தடயம் காண முயன்றுன் இளம் வழுதி.

முதலில் அவன் பார்வையில் தனித் தனி மரங்களும், தரையின் கருமையும், இருளிலும் வெண்மையாய் பளிச்சிட்ட ஒற்றையடித் தடமும்தான் புலனுயின. பிறகு ஒரு உருவம் அசைவது தென் பட்டது. பரபரப்பு எதுவுமின்றி, தன்னம்பிக்கையோடு, மெதுவாக நடந்து வருவதுபோலவும் தோன்றியது.

வழுதி அடிமரத்தோடு பதுங்கித் தன்னை இருளோடு இருளாக்கிக் கொண்டு கூர்ந்து கவனித்தான். அந்த உருவம் நெருங்க நெருங்க, அதன் நடையும் சாயலும் முன்பே தனக்குப் பழக்கமானவை போல் தோன்றுவதாக அவன் கருதினுன்.

அவன் நினைத்தது தவறல்ல என்பது சீக்கிரமே தெளிவாயிற்று. அருகில் வந்தபோது நன்கு நோக்கவும் அது அடியார்க்குநல்லான் தான் என்பதை வழுதி தெரிந்துகொண்டான். இத் துறவிக்கு எவ்வளவோ முக்கிய அலுவல்கள் இருக்கும் போலும்!' என்றது அவன் உள்ளம்-

துறவி தயங்கவில்லை. நிற்கவோ நடையைத் தளர்த்தவோ இல்லை. தனது வழக்கமான நடையில் முன் சென்று கொண்டிருந்தான். அங்கு தன்னைக்கவனித்தபடி மறைவிலே யாராவது நிற்கக்கூடும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்ததாகவே தோன்றவில்லை. அப்படி ஒரு எண்ணம் அவன் மனசில் இருந்தால் தான், அவன் தயங்கித் தயங்கி நடந்திருப்பானே? அடிக்கொரு தரம் அங்குமிங்கும் திரும்பித் திரும்பிப்பார்த்தபடி நடப்பானே!

துறவி தன்னைக்கடந்து சிறிது தூரம் சென்ற பிறகும் இளம்வழுதி மறைவிலேயே நின்றுன். 'இவரைப் பின்பற்றிச் செல்வோமா? அல்லது, பூங்குடிஆச்சிவீட்டுக்கே போகலாமா?' என்று ஊசலிட்டது அவன் மனம்.

'சாத்தன் இதற்குள் அங்கு வந்திருந்து என்னைக் காணவில்லை என்று அறிந்து கிளம்பினுலும் கிளம்பிச்சென்றிருக்கலாம் .இத்துறவியின் செயல்கள் மிகுந்தஐயம்எழுப்புவனவாக உள்ளன. இவரைத் தொடர்ந்து சென்ருல் உண்மைகள் ஏதேனும் அம்பலமாகலாம்' என்று உள் மனம் உரைத்தது. அதன் குரலை ஏற்றுக்கொண்டான் அவன். மரத்தின் பின்னுலிருந்து வெளிப்பட்டு, மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்தான். பின்னே ஆள் வருகிறது என்ற சந்தேகம் துறவிக்கு எழாதிருக்க வேண்டுமே எனும் உணர்வோடு அவன் மரங்களின் பின் மறைந்தும் நிதானமாகவும் தொடர்ந்து சென்றுன்.



ஆற்றங்கரையோடு சென்ற அடியார்க்குநல்லான் ஒரு இடத்தில் திரும்பி, சற்றே நின்றுன். வந்த வழியைக் கவனிப்பது போல் படவும் இளம்வழுதி தயங்கினுன். நல்ல வேளையாக அருகிலேயே ஓங்கி வளர்ந்த மருதமரம் ஒன்று நின்றது. அதன் பின் பதுங்கினுன். அவன் தான் வருவதைத் துறவி உணர்ந்து கொண்டானே என்ற பதைப்பு அவனுக்கு உண்டாயிற்று.

அது வீண்திகில்தான். துறவி இயல்பான எச்சரிக்கை நோக்குடன் நின்று நிதானித்துவிட்டு முக்கிய திருப்பத்தில் அடி எடுத்து வைக்கிருன் என்பதை வழுதி உடனடியாக அறிய முடிந்தது. மீண்டும் காலம் கடத்தாமல் தொடர்ந்து நடந்தான் அவன்.

மரங்கள் அதிகமாக இல்லாத பகுதி வழியாகவும், உடை-கருவேல் போன்ற முள் மரங்கள் ஓங்கி வளராமல் புதர் புதராக அங்கொன்றும் இங்கொன்றும் தலை விரித்து நின்ற வெளிகளினூடும் துறவி நடந்தான். அவன் அடிக்கடி போய் வந்து பழக்கப்பட்ட பாதையாகத் தான் இருக்கவேண்டும் அது. ஏனெனில், காலில் முள் தைத்துவிடுமே என்ற பயமோ, வேறு எவ்வித ஐயமோ ஓர் சிறிதும் இல்லாதவனுய் நிமிர்ந்த தலையோடு முன்சென்று கொண்டிருந்தான் அவன்.

அவனைப் பின்பற்றி நடந்த இளம் வழுதி அதிகமான எச்சரிக்கையோடு போக வேண்டியிருந்தது. சில இடங்களில் கூரிய முட்கள் கிடந்து, அவன் பாதங்களை 'நலம் விசாரித்தன!' குத்திய முட்களை எடுத்தெறிந்து விட்டு, வேதனையையும் பொறுத்துக் கொண்டு அவன் தொடர்வதற்குள், துறவி பார்வைப்புலனில் படாது முன்னேறியிருப்பான். ஆகவே வழுதி வேகமாக நடக்கவேண்டிய அவசியம் ஏற்படும். அவற்றை எல்லாம் பெரிது படுத்தாமல் அவன் நடந்தான்.

பாழடைந்த கோவில் ஒன்று தென்பட்டது. துறவி அதனுள் புகுந்து மறைந்தான். இளம்வழுதி கோயில் அருகே வந்து பார்த்தபோது, பெரிய கதவு வெகு சுலமாகவே திறக்கப்படாதது போல் நெடிதுயர்ந்து அசையாது நின்றது. வழுதி கையினுல் தடவினுன். நெடுங்கதவின் ஓர்புறத்தில் திட்டிவாசல் அமைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தான். அதன் கதவும் இறுகச் சாத்தி உள்ளே தாழிடப்பட்டிருந்தது. 'இதன் வழியே தான் துறவி உள்ளே சென்றிருக்க வேண்டும்' என்று தீர்மானித்தான் அவன்.

தானும் உள்ளே நுழைய வேண்டும் என்று இளம்வழுதி எண்ணினுன். இல்லாவிடில் இவ்வளவு தூரம் இன்னல்களையும் பொறுத்துக் கொண்டு, துறவியைப் பின் தொடர்ந்து வந்து என்ன பயன்? நேர்வழியில் உள்ளே புகமுடியாது என அறிந்த வழுதி, மதில் சுவர்களைச் சுற்றி வந்தான்.

உயர்ந்து நின்ற சுவர்கள் மீது ஏறுவதற்கு வசதி எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. கால்பதிப்பதற்கோ, கையால் பற்றிக் கொள்வதற்கோ சிறு பள்ளமுமில்லை; பிடிப்புமில்லை என்றே அவன் கருதினுன். எனினும், கோயிலின் பின்புறத்தில் சில மரங்கள் நின்றன. அவற்றில் சில நன்கு வளர்ந்து, பெரிய கிளைகள் பரப்பி, அடர்த்தியாகக் காட்சி அளித்தன. சில கிளைகள் மதில் சுவர் மீதும் படிந்திருந்தன.

வழுதி ஒரு மரத்தில் ஏறி கிளை வழியே நடந்து, மதிலை அடைந்தான். மெதுவாக மதில் மீது நடந்தான். அவன் கண்கள் வழியையும் கவனித்துக் கொள்ள வேண்டும், கோயிலின் உட்புறத்தில் என்ன தென்படும் என்றும் ஆராய்ந்தாக வேண்டும். ஆகையால் அவன் வெகு எச்சரிக்கையோடு தான் செயல் புரிந்தான்.

உள் மண்டபம் ஒன்றிலிருந்து பேச்சுக்குரல்கள் எழுவது அவன் காதுகளில் விழுந்தன. 'அடியார்க்கு நல்லான் வருவதற்கு முன்பே அநேகர் இங்கு வந்து கூடியிருக்கிருர்கள் என்று தெரிகிறது. பலருக்கும் சொல்லி ஏற்பாடு செய்வதற்காகத்தான் துறவி பித்பகல் முதலே அலைந்தார் போலிருக்கிறது' என்று வழுதி எண்ணினுன். அவர்கள் ஏதோ திட்டமிடுவதற்காகவே இங்கு இப்பாழிடத்தில் குழுமியிருக்க வேண்டும் என்று நிச்சயமாகப்பட்டது அவனுக்கு. என்ன பேசுகிருர்கள் என்று உற்றுக் கேட்பதற்கு

வசதியான ஒரு இடத்தில் மறைந்து கொள்வது நல்லது என்றும் தோன்றியது.

அப்படி ஒரு இடமும் கிடைத்தது. கீழே பலரும் குழுமியிருந்த மண்டபத்துக்கு மேலே மதில் சுவரோடு மரக்கிளை ஒண்டிக்கிடந்தது. மறைந்து நிற்பதற்கு வசதியாக அமைந்திருந்தது அது. அந்த இடத்தில் இளம்வழுதி மறைந்து கொண்டான். முதலில் முணமுணப்பாகவே குரல் காதில் விழுந்தது. திடீரென்று ஒன்றிரு குரல்கள் ஓங்கி ஒலிக்கும். அவர்கள் எதைப்பற்றி வார்த்தையாடுகிறார்கள் என்றே இளம் வழுதியினால் புரிந்துகொள்ள இயலவில்லை.

கீழே வாக்குவாதம் முற்றுவதாகத் தோன்றியது. சில குரல்கள் கத்தின. சந்தை இரைச்சலாக மாறியதுநிலைமை. அதை அடக்குவது போல் 'அமைதி!' என்ற அதட்டல் எழுந்ததும், அது அப்படியே ஒடுங்கி விட்டது. தெளிவானபேச்சு ஒலித்தது இப்போது. பேசுவது அடியார்க்கு நல்லான் என உணர்ந்தான் இளம்வழுதி.

'சைவம் இன்று புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறது என்பது உண்மை. குடியேறி வந்து கொடுங் கோலர்களாக மாறிவிட்டவர்களின் ஆதரவோடு சமணமும் பிறவும் தலைதூக்கிப் பேயாட்டம் போடுவது நம்மனோர்க்கு மிகுந்த வேதனையே தருகின்றது. அவர்களுக்கு நாம் அறிவு கொளுத்த வேண்டியது அவசியம் என்பதை நாம் உணர்ந்தும் வெகு காலமாகிவிட்டது. எவ்வழியில் அதை நிறைவேற்றுவது என்று தான் இன்னும் நம்மால் முடிவு செய்ய இயலவில்லை...'

'நம் மதம் தழுவாதாரை ஒழித்துக் கட்டுவோம்' 'நெருப்பிலே தள்ளுவோம்' 'கழுவில் ஏற்றுவோம்' 'கொல்லுவோம்!'

வெறிக்கூச்சல்கள் கனமாக மேலெழுந்தன. மீண்டும் 'அமைதியாயிருங்கள்!' என்ற கட்டளை பிறந்தது.

'நமசிவாய! நமசிவாய!' என்றது ஒரு குரல். அதைப் பல குரல்கள் முனங்கின. 'நாதன் நாள் வாழ்க!' என்ற தலைமைக்குரல். அதை ஓங்கி உச்சரித்தன இணைக்குரல்கள்.

அடியார்க்குநல்லான் திரும்பவும் பேச்செடுத்தான்;

'நாம் அறுதியிட்டு வகுக்கப் போகின்ற திட்டம், கூற்றன் நாயனார்க்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் கூற்றம் ஆகவே அமையும். பிறவாயாக்கைப் பெரியோனாகிய நம் இறைவனைப் பழித்து வந்தவர்களின் நாக்குகளைக் கூர்வாளினால் அறுத்தெரியவும் இசைவேன் யான். ஆயினும், எதற்கும் உரிய வேளை வரவேண்டும்...'

'கசடர்களைக் கழுவில் ஏற்றக் காலமும் வேண்டுமோ எனக் கடாவுகின்றேன்' என இடிக்குரல் ஒன்று உறுமியது...

'இவ்வளவு செவிமடுத்ததே போதும் போதும்' என்றாகிவிட்டது இளம் வழுதிக்கு. 'சமயப்பற்று மிகுதியும் பெற்றுவிட்ட அடியார்கள்! இவர்களும் வெறியர்களே!' என முடிவு செய்தான் அவன். இனி அங்கே தனக்கு வேலையில்லை என்று எண்ணி, வந்தது போல் திரும்பினான்.

மரத்தின் வழியே கீழிறங்கி, குறுகலான வழியில் நடந்து, மறுபடியும் ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தான் இளம் வழுதி.

'சமயம் தேய்ந்துவிட்டது; அதை முன்னைப் புகழ்நிலைக்கு உயர்த்துவதற்காகக் களப்பிரர்கள் வீழ்ச்சி அடைய வேண்டும் என்று அடியார்கள் விரும்புகிறார்கள். சிவன் தந்த தமிழ் மொழி வளம் குன்றிவிட்டது; அதைப் போற்றி வளர்ப்பதற்காகக் களப்பிரர்களை ஒழிக்க வேண்டும் என்று தமிழன்பர்கள் ஆசைப்படுகிறார்கள். இவ்விரு சாராரும் துணிந்து செயலாற்றக் கூடிய வலிமை பெற்றிருக்கவில்லை. நமது

பழம் பெரும் குடியினர் ஆட்சி புரிந்த நாடு அந்நியரிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதைத் தாய்க்குலம் விரும்ப வில்லை. விடுதலை பெறுவதற்கு அவர் கள் தங்களால் இயன்ற அளவு துணை புரிவார்கள் என்றும் தெரிகிறது. ஆக வே, வெற்றி பெறுவதற்கு வீரத்தின் அணிவகுப்பு தான் தேவை. அருளும், அறிவும், அன்பும் வீரத்தின் பக்கபலம் இல்லாது போனால் மிகச் சிறந்த சாதனை எதையும் செய்து விடமுடியாது என்றே நான் உணர்கிறேன்...

தனது அனுபவங்கள் அறிவுறுத்திய உண்மையைப் பற்றிச் சிந்தித்தபடி நடந் தான் அவன். இனி என்ன செய்வது? இது தான் இளம்வழுதியின் முன்னின்ற பிரச்னை. வீரர்களைத் திரட்டவேண்டும்! அதற்கு எவ்வாறு செயலாற்றுவது ?... மங்கையர்க்கரசி எவர் துணையையோ நாடும்படி சொல்லவில்லையா ?—இந்த நினைப்பு வரவும், சாத்தன்கணபதி என்ன செய்கிறானே? என்ற துடிப்பு பிறந்தது.

இளம்வழுதி, மாலையிலேயே நேரா கப் பூங்குடி ஆச்சி வீட்டுக்குப் போய், சாத்தன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கத் தவறி விட்டோமே என்று வருத்தப்பட்டான். வேகமாக நடந் தான்.

அவனுடைய முயற்சிகளில், அவனுக் கும் மேலான எதுவோ ஒன்று— விளக்க முடியாத ஏதோ ஒரு சக்தி— அவனுக்குத் துணை நின்று அவனை இயக்குவதாகத் தான் அவனுக்கே தோன்றியது. இவ்வேளையிலும் அவ் விதமே நடந்தது.

அவன் ஆற்றுப்பாதையிலிருந்து திரும்பி நகருக்குள் செல்லும் பெரிய வழியில் அடி எடுத்து வைத்தபோது, 'அட! இளம்வழுதியா?' என்ற கேள்வி அவனைத் திடுக்கிட வைத்தது. நான் வேறு யாரோ?என்று பயந்துவிட்டேன். அதனால் தான் மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன்' என்று கூறியபடி சாத்தன்கணபதி முன்வந்தான்.

'உன்னைப் பற்றி எண்ணியபடி தான் நான் வந்து கொண்டிருக்கிறேன். பூங் குடி ஆச்சி வீட்டில் போய்க் காத்திருப் பாய் என்று எண்ணினேன். திடீ ரென்று குரல் கேட்கவும் நான் அதிர்ச்சி அடைந்தேன்' என்று சொல்லிச்சிரித் தான் வழுதி.

'நல்ல வேளை! நான் உன்னை இங்கே யே பார்க்க முடிந்தது! நான் இது வரை மீனாட்சி ஆச்சி வீட்டுக்குப் போக வில்லை. வீதிகளில் இரவில் எவரும் தலைகாட்டக் கூடாது என்று கட்டளை பிறப்பித்திருப்பதால்...'

'அப்படி ஒரு ஆணை பிறந்துவிட்ட தா? அது எனக்குத் தெரியாதே!' என அதிசயித்தான் வழுதி.

'ஆமாம். கூற்றன்நாயனார் கட்டளை கள் பிறப்பிப்பதற்கு ஒரு வரைமுறை யே கிடையாது' என்றான் சாத்தன். 'அதனால் நம் போன்றவர்கள் மிகுந்த விழிப்புடன் நடமாட வேண்டியிருக் கிறது. ஆள் நடமாட்டத்துக்கே ஆபத்து என்றால், குதிரைகளோடு நாம் வரமுடியுமா? ஆகவே, இருட்டுவதற்கு முன்னரே குதிரைகளை அக்கரையில் ஓர் இடத்தில் கொண்டு போய், பாது காப்போடு நிறுத்திவிட்டு, வேறு சில முக்கிய அலுவல்களையும் கவனித்து விட்டு வருகிறேன். உன்னைச் சந்திக்க வேண்டுமே? என்ற எண்ணத்தோடு தான் கிளம்பினேன்! அதற்குள்நீயே பேய் மாதிரி இங்கு திரிகிறாய்!' என்று கூறிச் சிரித்தான் அவன்.

'பேய்களாக மாறத் துடிக்கிற சில மனிதர்களின் பேச்சைக் கேட்க நேர்ந்த நான்; இன்னும் பேயாகி விடவில்லை!' என்றான் அவன்.

'அது என்ன சங்கதி?' என்று ஆவ லுடன் கேட்டான் சாத்தன்.

'அக்கரை சேர்ந்ததும் மெதுவாகப் பேசிக்கொள்வோம் வா!' என்று நடந் தான் வழுதி. சாத்தனும் தொடர்ந் தான்.

ஆற்றைக் கடந்து, உரிய இடம் சேர்ந் து, குதிரைகள் மீதேறிக்கொண்டு இருவரும் திரும்பிப்பார்த்தார்கள்.

அப்பொழுதும் இருள் தான் மூடிக் கிடந்தது அழகிய மதுரை நகரிலே!

முதல் பாகம் முடிந்தது.

மலை மகளே!

- நீலமணி -



★

ஈனர் மனிதர் என்றோ — அவரை
எள்ளி நகைத்துவிட்டோ — உயர்
வானமெனும் பெரும் சூனியம் நோக்கி
வளர்ந்து நீ செல்லுகிறாய்?

மேகக் கவரிகளை — வானம்
மெல்ல விசிறுகையில் — உன்றன்
ஆகங் குளிர்ந்திட்ட இன்பத்தில் தென்றலை
அள்ளி அனுப்புவையோ?

காலக் கடல்அடியில் — பரிதியாம்
காதலன் மூழ்கியதால் — வருந்தி
மேலெல்லாம் மூடிடும் வெண்பனி ஆடையுள்
மேனி புதைத்தனையோ?

நீலநிற வானம் — உனது
நீள்பெருங் கூந்தல் என்றால் — தங்கம்
போலப் பொலிந்திடும் விண்மீனெலாம் சூடும்
பூக்களாய் வாழ்வனவோ?

கொள்ளை அடித்துவரும் — முகிலைக்
கொன்று முறித்துவிட்டே — அது
அள்ளிக் கொணர்ந்திட்ட வெள்ளித்துளிகளை
ஆருக்கும் தந்திடுவாய்!

வள்ளல்நீ! வல்லரண்நீ! — நோய்கள்
மாற்றும் மருந்தளிப்பாய்! — ஆனால்
கொள்ளி நெருப்புக் குழம்பினை வீசிநீ
கொடுமை புரிந்திடல் ஏன்?

★

கடைசிக் கதை

கே.ஆர்.பானு

"சூரியா! ஏ சூரியா! உங்களைத் தானே?"

அவன் காதுகளில் எவ்வார்த்தையும் விழவில்லை. அவன் தன்னை மறந்திருந்தான். நினைவுகளை எழுத்துக்களாக்கி, வேதனை என்னும் எழுதுகோல் கொண்டு, கண்ணீர் என்னும் ஏட்டினில்வரைந்து கொண்டிருந்தான்.

மீண்டும் அழைத்தாள் இனிமை. அவன் திரும்பிப் பார்க்காதது, அவளுக்கு மனச்சங்கடத்தையே அளித்தது. ஆனாலும் பெண்மையின் மலர்ச்சியிலே மனம் மயங்காதவர் ஏது? நெஞ்சமோ வெற்றி சங்கநாதம் செய்தது.

அவன் சமீபம் வந்து நின்றாள். மேசையில் குனிந்தவாறே எழுதிக் கொண்டிருந்தான் என்ன நினைத்துக் கொண்டாளோ, அவனது கண்களை திடீரென்று பொத்தினாள்.

சூரியா ஸ்தம்பித்து விட்டான், அவன் தன்னையே மறந்து போனான். கண்களை மறைத்திருந்த அம்மலர்க் கரங்களை 'வெடு'க்கென எடுத்தான்.

"இனிமை! படித்தவளா நீ! அறிவு மழுங்கிப் போய் விட்டதா?" இன்று தபாலில் அனுப்பி வைக்கவேண்டுமே? சிந்தனைகளைத் தடை செய்து விளையாடுவது என்பது உன் வழக்கமாகி விட்டது..." என்றான். அவன் முகத்தில் ஏமாற்றத்தின் சாயை பிரதிபலித்தது. ஏனெனில் அவள் வந்து விட்டாளென்றால், அவனது எழுத்துக்களே அத்துடன் சரி! சிரித்துச் சிரித்துப் பேசி அவனது சிந்தனைகளையே மாற்றி விடுவாள்!

"ஆமாமாம்! பிரமாதம்மா எழுதராரில்லே. இரவு-பகல் பாராது எழுதிப் பலன் என்ன? ஒரு பைசாவுக்கு வழி கிடையாது! எழுத்தாளர் என்ற பெயர் தான் மிச்சம். வெட்கமா இல்லே..." என்றவள் கன்னங்குமிழியிடச் சிரித்தாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்டதும், சூரியாவுக்கு கோபம் தான் வந்தது. ஆனாலும் நெஞ்சினைக் கொள்ளை கொண்ட அந்த அழகுப்பிம்பத்தை அப்படியே விழுங்கி விடுபவன் போன்று உற்று நோக்கினான்.

"இனிமை! உனக்கு வாய்தான் அதிகமாயிருச்சு..." என்றவனை, வெகு அலட்சியமாகப் பார்த்தாள். மேசை மீது இருந்த காகிதங்களை ஒன்று சேர அடுக்கினான்!

"வர்றீங்களா?" என்றாள். இமைப் புருவங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்தன.

"எங்கே!" என்றான். எழுத்து, பாதியில் தடைபட்டுப் போய்விட்டதே என்ற ஏக்கம்.

"கேள்வி மட்டும் கேளுங்க...ஊம் புறப்படுங்க... எழுதியெழுதி உடம்பே பாழாகிடுச்சு...படிச்ச படிப்பு என்ன? பேசாமல் எழுத்தை விட்டு ஒழியுங்க. நிம்மதியா தலை முழுகுங்க...என்பதற்குள், "இனிமை! நிதானமாகப் பேசு. உன் ஒவ்வொரு சொல்லும் என் நெஞ்சைக் கிழிக்குது இனிமை." என்றான். எழுந்திருந்தான். அவளையே உறுத்துப்பார்த்திட்டான். ஏனோ, இனிமையோ மெதுவாக விசும்பினாள்.

"நான் தவறிப் பேசிட்டேன்,என்னை மன்னிச்சுடுங்க...என்றவள்,கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"இனிமை! உண்மையைத் தானே சொன்னாய்...ஆமாம்! எங்கு புறப்பட வேண்டும்? நானும் உன்னுடன் வருகிறேன்...திரைப்படக் காட்சிக்குத்தானே?" என்றதும், பழைய இளநகை இனிமையை ஆட்கொண்டது. உதடுகளை நாக்கினால் தடவிக் கொண்டாள்.

"ஊஹூம்! - கண்காட்சி நடக்குதில்லே ..அங்கே..." என்றாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்டதும், சூரியா திணறிப் போனான். ஏனெனில் அன்று தியதி பத்துக்கும் மேம்பட்டு ஆகி விட்டது. கண்காட்சிக்குப் போனால், இனிமை கேட்காதது எதுவும் இருக்காது. சிறு குழந்தை போன்று ஏதானும் கேட்டுக் கொண்டே இருப்பாள்.

"இனிமை! வந்து...வந்து...மிகுதி பணத்தில் நேற்றுத்தான் கதைகள் அனுப்பினேன். அதுவும் தவிர..." என்பதற்குள், அவனது கண்கள் கலங்கி விட்டன.

அவன் எழுதினான்; அவர்கள் அழுதார்கள்; அனைவரும் சிரிக்கும்நிலை வந்தபோதும் அழுகையொலி மாறவில்லை!

அவனது சொற்களைக் கேட்டதும், அவளோ தவித்துப் போய் விட்டாள். அவன் உள்ளப் போராட்டத்தினை உணர்ந்து கொண்டாள்.

"சூரியா! இங்கே பாருங்க...நான் சொன்னால் ஏளனம் செய்வதாகக் கருதுறீங்க. ஆனால்...மாதா மாதம் நூற்றிருபது வரை சம்பளம் கிடைக்குது. அதை விட்டுட்டு, எப்பப்பாத்தாலும் எழுத்து எழுத்து என்ற அலைச்சலிலே என்ன நிம்மதியைக் கண்டீங்க...என்றவள் உதடுகளை 'சப்பு'க் கொட்டிக் கொண்டாள். தான் ஏன் அம்மாதிரி மீண்டும் பேச்சுக்களை துவக்கினோம் என்றே ஆகி விட்டது. உடனுக்குடன் வார்த்தைகளை மாற்றி விட்டாள்-

"வருத்தப்படாதீங்க! உங்களிடம் இருந்தால் என்ன! என்னிடம் இருந்தாலென்ன? புறப்படுங்க...நான் பணம் தர்றேன். ஆனாலும் பாவம்...' என்றவள், கையில் கட்டியிருந்த அழகிய கடிகாரத்தைப் பார்த்தாள்.

"இனிமை! வாஸ்தவம் தான் நீ சொன்னதும் எனக்கும் எழுத்து பிடிப்பு விட்டுத் தான் வருகின்றது. ஒரு ஆசை! அது மட்டும் நிறைவேற வேண்டும்..." என்பதற்குள், முத்துப் பற்கள் காட்டிட, மோகனப்புன்னகையைச் சிந்தவிட்டாள்.

"அந்த ஆசை என்னிக்கு ஒழியப் போவுதோ? அத்தை சொல்வது மாதிரி குடும்பத்தையே குலைக்கப் போவுது. விபரீதத்துடன் விளையாடிக்கிட்டு வர்றீங்க ..உஎம் உஎம்! எதுக்கு நான் சொல்லணும்...புறப்படுங்க..." என்றவள் வெளிப்புறம் நோக்கி நடக்கலானாள்...

ஏதோ கூற வாயெடுத்தான். ஒன்றும் கேட்காமல் அவளைப்பின் தொடர்ந்தான்.

கூடத்தில் வந்ததும் என்ன நினைத்துக் கொண்டானோ, "மாமி! மாமி!" என்று கூப்பிட்டான்.

சமையற்கட்டில் வேலையாக இருந்தாள் பார்வதி. இனிமையின் தாயார். அவனது உரத்த குரலைக் கேட்டதும், என்னவோ ஏதோவென்று முன்புறம் விரைந்து வந்தாள். அவனைக் கண்டதும் தான் நிம்மதி அவளிடம் ஏற்பட்டது.

"என்ன சூரியா?" என்றாள்.

"ஒன்றுமில்லை மாமி! வாரத்துக்கு அலுவலகம் ஒரு நாள் ஒய்வு...எதுவானாலும் எழுதலாம்னுட்டு நினைச்சால், அதுவும் முடியல்லே. கண்காட்சிக்குப் புறப்படும்படி மேலிடத்து உத்திரவு... நான் வர்றேன். இன்னிக்கு சிவராத்திரிதான். விடிய விடிய உட்கார்ந்து எழுதனும்...முன் பக்கத்திலும் யாருமில்லே"...என்பதற்கும், "வர்றீங்களா இல்லையா?" என்ற இனிமையின் குரல் தெருப்பக்கத்திலிருந்து கேட்பதற்கும் சரியாக இருந்தது.

"மாமி! கேட்டீங்களா! 'ஆர்டர்' பறக்குது. இனியும் போகாட்டி அம்மையாரே வந்துடுவாங்க.. என்றவன் தன்னையும் மறந்து சிரித்தான்.

"தாயே! இதோ வந்துட்டேன். பக்தனிடம் கோபம் கொள்ளலாமா?" என்றவாறே தெருப்பகுதியை நோக்கி நடக்கலானான்.

"இரண்டு பேரும் வந்து சேர்ந்தீங்களே" என்ற பார்வதி தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள். ஏனோ அவளது கண்களில் கண்ணீர் ததும்பியது.

சூரியாவுடன் உடன் பிறந்தவர்கள் நால்வர். பள்ளியில் படித்து வந்தனர். அக்குழந்தைகளின் தந்தையும்-தாயும் அவன் தான். ஏனெனில் பத்தாவது படிக்கும் பொழுதே, அவன் தந்தை திடீரென்று காலமாகிவிட்டார். ஏதோ சொற்ப வருமானம் கிடைத்து வந்தது. அவ்வளவு தான்.

பாகீரதி பாவம்! குழந்தைகளை வளர்க்க அவள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்லை. அதிலும் குறிப்பாக சூரியா படித்து விட்டால் மட்டும் போதும்; உடன் பிறந்தவர்களைக் காப்பாற்றி விடுவான்.

சென்னையில் இருந்தாள், சூரியாவின் ஒன்று விட்ட அத்தை. கணவனை இழந்தவள். ஒரு பெண் மட்டும்தான். எளிமையான வாழ்வு அவர்களுடையது.

பாகீரதியின் எண்ணம் நல்ல பலனைத் தந்தது. சென்னைக்குக் கடிதம் எழுதினாள். பார்வதியும் மனமார ஒப்புக்கொண்டாள். சூரியாவும் வீட்டுடனே இருந்து படிக்கட்டுமென்றும், தன்னால் முடிந்தது அச்சிறு உதவி

ஒன்றுதான் என எழுதி இருந்தாள். வேதனையின் சாயல் அவளின் ஒவ்வொரு வார்த்தையிலும் மேம்பட்டு நின்றது.

சூரியா வந்து விட்டான். ரொம்பவும் எளிமையான குடும்பம் அதுஅவனைநி.னை

வெல்லாம் மகிழ்வாக வரவேற்ருள் பார்வதி.

"வா சூரியா! அம்மா குழந்தைகள் நலமா? முன்பே கடிதம் போடக்கூடாது?" என்ருள்.

"எழுதுவானேன்? நானே வந்துட்டேனே?" என்ருன். சமீபம் நின்ற இனிமையைப் பார்த்திட்டான். அந்த வட்டக் கருவிழிகள் அவனை ஆவல் ததும்பநோக்கின.

* * *

வருடங்கள் ஓடின. சூரியாவும் பட்டப் படிப்பை முடித்துவிட்டான். கம்பெனி ஒன்றில் வேலையும் கிடைத்து விட்டது. ஆனல் ஊரில் பாகிரதியின் கஷ்டங்கள் விடிவதற்கான வழிகளையே காணும். ஏனெனில் சென்னை சென்ற சூரியா மிகவும் மாறிப்போய்விட்டான்.

ஊரில் இருக்கும் பொழுதே பத்திரிகைகளுக்குக் கவிதைகள் எழுதுவான். ஓரிரு இதழ்களில் பிரசுரம் ஆகின. அந்த எண்ணம் ஒரேயடியாக தலைக்கேறி விட்டது.

அதை வளர்த்தவளே இனிமைதான். கல்வியைப் பத்தாவதுடன் நிறுத்தியவள் வேலைக்கான முயற்சிகளில் ஈடுபட்டாள். 'டைப்பிங்' போன்ற தொழிற் நுணுக்கத் தேர்வுகளிலும் வெற்றி கண்டாள். பத்திரிகை அலுவலகம் ஒன்றிலேயே வேலை கிடைத்தது.

சூரியாவிடம் உயிரையே வைத்திருந்தாள் இனிமை. அவனது உலகம் அறியாத குழந்தைஉள்ளத்தை எண்ணுவாள். மனம் சங்கடம் கொள்ளும்.

அவனை எழுதுமாறு ஆர்வம் காட்டியவளும் அவளே. அதுவே அவனைப் பித்தனுக்கிவிடும் என்று கனவிலும் கருதியவள் அல்ல! கிடைத்த பணத்தில் பெரும் பகுதி புத்தகங்களாகவும், காகிதங்களாகவுமே வாங்கி விடுவான்.

பாகிரதி பிள்ளைக்குக் கடிதம் எழுதுவாள், பெரும்பகுதி, குடும்பம் படும் கஷ்டங்களாகவே இருக்கும். சூரியாவை அடுத்த பிள்ளைகள் பள்ளித் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தனர். அவன் மூலமாகவே தங்கள் சிரமங்கள் குறையும் என கனவு கண்டதாகவும், யாவும் கானல் நீராகி விட்டதாகவும், தாரை தாரையாக ஒவ்வொரு வரியிலும் கண்ணீர் கொப்பளித்து நிற்கும்.

அத்துடன் மாதம் தவறினும் தவறும். ஊருக்கு இரண்டு நாட்களாவது செல்லாமல் இருக்க மாட்டான். கிளம்பும் பொழுது அவனிடம் பணம் இருக்காது என்பது இனிமைக்கு நன்கு தெரியும். தன்னுடைய பணத்தை எடுத்துக் கொடுப்பாள். குழந்தைகளுக்கு வேண்டிய துணிமணிகள், மிட்டாய் யாவும் வாங்கிக் கொடுத்தனுப்புவாள். சுருக்கமாகக் கூறினல், சூரியா அக்குடும்பத்துக்கும் ஒரு சுமைப்பொருளாகவே இருந்தான்.

* * *

பாகிரதிக்கும் யாவும் தெரியும். ஊருக்கு வந்தபிள்ளையிடம் சொன்னுள்;

"சூரியா! உன்னிடம் சொல்ல எனக்கு உரிமை உண்டு. பாவம், உன் அத்தை! அவங்களுக்கு நம்மால்என்ன சுகம்? நீ படித்து முடிக்கும் வரை, நம்மிடமிருந்து காலணுகூட வாங்க மறுத்துட்டாங்க. ஆனு...நம்ப இனிமையும்

வீரனே, வீரன்!

"இத்தனை மெடல்களையும் எப்படி வாங்கினீர்களோ?

"அது ரொம்ப சின்ன சமாச்சாரம்!"

"சொல்லுங்களேன், கேட்கலாம்!"

"'எங்கள் தளபதி ரொம்ப அபாயமான ஒரு காரியத்தைச் செய்ய, திரும்பி வர முடியாத ஆபத்தான காரியத்தைச் செய்ய, ஓர் ஆள் தேவை. அவர் ஓரடி முன்னுல் வரவும்' என்று கேட்டுக் கொண்டார்.

"ஓகோ! நீங்கள் உடனே முன்னே சென்றீர்களோ?"

"அப்படியில்லை. என்னைத் தவிர மற்றவர்களெல்லாம் பின்னுல் ஓரடி நகர்ந்துவிட்டார்கள்? அவ்வளவுதான்!"

தங்கக் கம்பி. அதுவும் சம்பாதிச்சு, உனக்குப் பணம் கொடுக்கிறு...'' என்பதற்குள் இடை மறித்திட்டவன் படபடத்தான்;

''யாரம்மா அப்படிச் சொன்னது? அத்தையா?'' என்றுன்.

''சூரியா! அவங்க சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா? நீயும் சம்பாதிக்கிறே. அவங்க வீட்டிலேயே சாப்பிட்டுக்கிட்டு இருக்கே. பிறந்த இடத்தை விட ரொம்பவும் உரிமையாக நினைச்சு இருக்கிறே. அப்படி இருக்கும் பொழுதுதானே உதவி செய்யணும்... அது மட்டுமா! சூரியா! என்னிடம் உனக்குக் கோபம் ஏற்படலாம்; வருத்தமும் கொள்ளலாம்...கதை எழுதற பிழைப்பை அடியோடு விட்டுடு! கதை சோறு போடுமா? உன்னைச் சார்ந்து இப்ப இருப்பது இரண்டுகுடும்பங்கள். கிடக்கிறதை வைச்சுக்கிட்டு கௌரவமா வாழலாம். நீ பட்டணத்திலே கதை எழுதறே! இங்க நான் கடன் வாங்கிச் சாகறேன். இந்த ஏழைங்க கதையை யார் எழுதுவது?'' என்றுள். கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

பெற்றவனின் ஒவ்வொரு சொல்லும் அவன் நெஞ்சத்தைக் கிழித்தன. தலை நிமிர்ந்தான்; ஏழ்மையின் பிரதி பிம்பங்களாகி விட்ட பெற்றவளும், உடன் பிறந்தவர்களும்தான் காட்சி தந்தனர்.

''அம்மா! என்குடும்பம்தான் பெரிது. உள்ளது போதும்; எதுவும் எழுதமாட்டேன்...'' என்று கதறவேண்டும் போன்று இருந்தது!

* * *

இனிமையே தவித்துப்போனுள். இனி சூரியா திருந்தவே முடியாது என்ற முடிவுக்குத்தான் அவளால் வர முடிந்தது. அது மட்டுமின்றி, பல இதழ்களில் எழுதலானுன் அவனும். புகழ் கிடைத்தது. ஆனல் பகல் நேரங்களில் கம்பெனியில் மாடாக உழைத்த பணம் தான் செலவானது. பிறகு அன்பை அளிப்பதாகச் சொன்னுர்கள்.

அத்துடன் திரைப்படத்துக்கான முயற்சிகளிலும் ஈடுபாடு கொள்ளலானுன். நினைத்துக்கொள்வான். திடீர் திடீரென்று அலுவலகத்துக்கு ஓய்வு எழுதிப் போடுவான். புறப்பட்டு விடுவான்.

இனிமையோ தவித்துப்போவாள். மகனின் மாற்றம் இனி ஏற்படப் போவதில்லை என்றே உணர்ந்து கொண்டாள் பாகீரதி. மாதாமாதம் இனிமை அனுப்பி வந்த குறிப்பிட்ட தொகையே அக்குடும்பத்தைக் காப்பாற்றி வந்தது.

''இனிமை! அவன் மனம் அறிந்து நடப்பவள் நீ. வெகு சீக்கிரம் இக் குடும்பப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள, முருகப்பெருமான்தான் கருணைக்கண் காட்டவேண்டும்....'' என்று மனதுக்குள்ளேயே நெக்குருகிப் போவாள்.

* * *

கண்காட்சியிலிருந்து திரும்ப மாலை ஆகிவிட்டது. இடைவழியில் சூரியா, அவளுடன் எதுவுமே பேசவில்லை. ஏதேதோ சிந்தனைகளில் மூழ்கிக் கிடந்தாள்.

''அத்தான் சூரியா!'' என்று செல்லமாக அழைத்தவள், அவனது கையைப் பற்றினுள்.

திடுக்கிட்டுப்போனவன் தன்னை உணர்ந்துகொண்டான். அவளைப் பார்த்திட்டவனின் கண்கள் இரண்டும் கலங்கிக் கிடந்தன.

''அத்தான்!'' என்றுள். இனிமையின் இதயம் தவித்தது.

''ஒன்றுமில்லை இனிமை! அம்மாவின் நினைவுதான் வரவர அதிகமாகுது. இந்த சம்பளத்தில் பாதி கிடைத்தாலும் போதும்; ஊருடனேயே இருந்துவிடுவேன். சென்னைக்கு வந்ததில் நான் பைத்தியமானதுதான் மிகுதி.ஆனுலும் குடும்பத்துக்கு எவ்வித சுகமும் கிடையாது. உடன் பிறந்தவர்களை எண்ணினுல், உள்ளமே உடைபட்டுப் போகிறது. தீராத ஏழ்மையும், ஏமாற்றமும் தானே மிகுதி ஆகிறது...'' என்றவனது வார்த்தைகளில் சோகம் இழையோடி நின்றது.

இனிமையின் கண்ணிமைகளும் ஈரக்கசிவாகிவிட்டன. அவனது உலகமறியாத புனித நெஞ்சினை உணர்ந்தாள். பாவம்! அவனைப் பொறுத்த வரை மேம்பாடு காணவேண்டிய எல்லாவித முயற்சிகளும் தோல்வியையே கண்டன. எத்தனை திரைப்பட ஏற்பாடுகள் வந்தது? எழுத்துக்களை விற்று வயிறு வளர்ப்பவன் இல்லை என்று கூறியவன், இலக்கியப்பைத்தி

யக்காரன்!

"சூரியா! ஏன் வீணுக வேதனைப் படுகிறீங்க! உங்க எழுத்திலே எனக்கு நம்பிக்கை உண்டு. தங்கக்கொடி விளக்கு உங்கள்லட்சியம். அவன் திரி தனைத் தூண்டினேன்.."என்பதற்குள் இடைமறித்திட்டவன் குரல் கம்மச் சொன்னுன்.

"ஆனுலும் சுடர்விட்டு பிரகாசிக்கப் போவதில்லை இனிமை! இடையில் திரி கத்தரித்து விழுந்துவிடலாமே......" என்றுன்.

"வேண்டாம் சூரியா! அப்படியெல் லாம் பேசாதிங்க. நான் இருக்கிறேன். உங்களை எழுத்துலக சிற்பியாக்க ஆசைப்பட்டேன். நீங்கள்எழுதுங்கள்.. எழுதுங்கள். எழுதிக்குவியுங்கள். படித்துப் படித்து ரசித்து பெருமைப் பட்டு மகிழ்ந்து போகிறேன் சூரியா! உங்களை அறிந்துகொள்ளும் காலம் வரை, நான் காத்திருப்பேன்; அது வரை நம் குடும்பங்களை முடிந்தளவு காத்துவிடுவேன். ஆனுலும்..."

"இனிமை!" திணறினுன்! அவளே,

"சூரியா! நீங்கள் கண்கள் கலங் கினுல் என்னுல் எதையும் செய்ய முடியவில்லை. உள்ளத்தை வைரமாக் கிக் கொள்ளுங்கள்; அதுதான் நாம் வாழவேண்டும் என்ற அவசியத்தின் அடிப்படை" என்றுள்.

அவன் மறுமொழி சொல்லவில்லை.

* * *

இரண்டு நாட்களாக சரியான எழுத்துப்பணி. வழக்கம் போன்று அலுவலகத்துக்கு ஓய்வு எழுதிவிட்டு, தன்னையே மறந்த மோன நிலையில் எழுதிக்கொண்டிருந்தான். வளரும் இலக்கிய இதழில் புதிதாக நீண்ட கதை எழுத ஒப்பனை அளித்து இருந்தான்.

"சூரியா!......" என்று அழைக்கும் குரல் கேட்டது. அவன் தலை நிமிரவே இல்லை. கதையின் பாத்திரங்களுடன் தன்னைத் தானே ஒருமித்துக் கொண் டிருந்த ஞானியின் நிலை அது!

"சூரியா! உங்களைத்தான். அம்மா கடிதம் எழுதி இருக்காங்க;" என்றுன். "'அம்மா' என்ற ஒரு சொல்லைக்" கேட் டதும் தான் தாமதம், மின்அதிர்ச்சி கொண்டவன் போன்று ஆனுன்.

"இனிமை! கொண்டா! இங்கே கொண்டா..." என்றவனின் கைகளில் வந்திருந்த கடிதத்தை திணித்தான். ஏனே மெதுவாக விசும்பலானுள்.

சூரியாவின் முகம் ஒரேயடியாக வெளுத்துவிட்டது. அக்கடிதத்தில் பாகீரதியின் கண்ணீர்த்துளிகளே எழுத்துக்களாகப் பரிணமித்தன.

அன்புள்ள சூரியாவுக்கு;

உன் கடிதமும், பணமும் எதிர்பார்த் தேன். வழக்கமான நிகழ்ச்சியே. இனி மையின் இருபது ரூபாய்கள் கிடைத் தன! உனக்குக் குடும்பமே கிடையாது. உடன் பிறந்தவர்களும் கிடையாது. உன்னைப் பெற்றவளும் கிடையாது. கதை எழுதுகிருய். போதாததற்கு சினிமாப் பித்தும் அதிகமாகிவிட்டது. இனிமேல் உனக்கு நான் கடிதம் எழுதப்போவதில்லை. கடன்காரர் களின் தொல்லைகளைத் தாங்கவே முடியவில்லை. இரண்டு பேர்களுக்கும் தேர்வுப்பணமும் கட்டவேண்டும். எங்கே போவது! படிப்பை நிறுத்தி விட முடிவு செய்துள்ளேன். என்னுல் இனி கஷ்டங்களை அனுபவிக்கவே நெஞ்சில் துணிவு கிடையாது. அவர் கள் எங்கானும் உணவு விடுதியில் வேலை செய்யவும் தயார். விதியை மாற்ற முடியுமா?

உன்னிடம் எனக்கு எள்ளளவும் வருத்தம் கிடையாது. ஒன்று மட்டும் நினைவிலே கொள். குடும்பத்திற்குப் பிறகே எதுவும். எழுதி எவரும் உயர்வு கண்டதில்லை; உன் எழுத்தால் என் மானம்— கௌரவம் எல்லாமே மண்ணுகிவிட்டது. குடும்பத்தை விட்டு விடுவாய்! எழுத்தை விட முடியாது!

"சூரியா! இரண்டு நாட்களாக வீட் டில் பட்டினி! எழுதவேண்டும் என்ற நினைவு வரும்பொழுது, அந்தக் கையில் சூடு போட்டுக்கொள். அது நெஞ்சிலே பட்ட வடுவாகும். என்னிட மிருந்து இனி கடிதம் எதிர்பார்க்காதே! இதுவே கடைசிக்கடிதம்"

* * *

"அத்தான்! இங்கே பாருங்க! என்னைப்பாருங்க அத்தான்..." என்ற வளின் விசும்பல் அவன் காதுகளில் விழவில்லை. தன்னையும் மறந்து, சிறு குழந்தை போன்று தேம்பித்தேம்பி அழுதான்.

"இனிமை! வேண்டாம் இனிமை! இனி எதுவுமே வேண்டாம்! எழுத்தும் வேண்டாம்; இலக்கியமும் வேண் டாம்...... அம்மா சொன்னதுதான் சரி! முடியாத கதை என் கடைசிக்

197702

கதை... என் கடைசிக்கதை...'' என்றவன் வெறி பிடித்தவன் [illegible] ஆனான். மேசையின் மீது ஒருபுறம் கிடந்தது புத்தம் புது...''ப்ளேடு''.

''இனிமேல் எழுதமாட்டேன் இனிமை! எழுதவே மாட்டேன்... ஆசையை அழித்துக்கொள்கிறேன்'' என்றவன் எழுதுகோல் பிடிக்கும் கட்டை விரலில் அப்படியே கிழித்துக் கொண்டு விட்டான். குருதியோ அலை கடலாகப் பீறிட்டது.

''அய்யோ அத்தான்! என்ன செய்துட்டீங்க...'' என்றவள் அவனிடம் ஓடோடி வந்தாள். தனது தாவணியின் ஒரு புறத்தை அப்படியே கிழித்தாள். அவனது குருதி பீறிடும் விரலைத் தன்னுடன் பொறுத்திக்கொண்டாள். கண்ணீர் வெள்ளம், காட்டாற்று ஏரி!

* * *

அவனது வெறியின் உச்சநிலைக்கு கட்டை விரல் பலியாகிவிட்டது. முன் பகுதி துண்டாய்விட்டது. இரத்தப் பெருக்கம் தாங்காது, தன் நினைவற்று விட்டான்.

''அம்மா! அம்மா!'' இனிமை அலறினாள். பார்வதியோ ஓடோடி வந்தாள்.

''என்ன இனிமை!'' என்றாள்.

''அம்மா! விதி விளையாடிவிட்டது. அத்தானை பார்த்துக்குங்க—' என்றவள், வீதிப்புறம் விரைந்தாள்.

மருத்துவரின் ஊசியும், விரலைச் சுற்றிய கட்டும் சூரியாவைக் காத்துவிட்டன. இனிமையின் கடிதம் கண்டதும் பறந்தோடி வந்தாள் பாகீரதி. நடந்தவைகளை அறிந்தாள்.

''சூரியா!'' —பெற்ற வயிறுகதறியது.

கண்களைத்திறந்தான். தன்னையே மறந்துபோனான்;

''அம்மா! நல்லறிவைப் போதித்தாய். கடமையை மறந்தேன். யாவரும் நலமா அம்மா?'' என்றான்.

''சூரியா! இப்படியா செய்துடுவாங்க. நான் என்னடா செய்வேன்...'' என்றவள் பேச முடியாமல் குலுங்கக் குலுங்க அழுதாள்.

''அத்தை!'' என்றதும், திடுக்கிட்டுத் திரும்பினாள் பாகீரதி. இனிமைதான் நின்றுகொண்டிருந்தாள்.

''என்னம்மா?'' என்றாள்.

''அத்தான் பட்ட கஷ்டங்களுக்கு வழி பிறந்துவிட்டது. அவரின் இருகதைகளைப் படமாக்க விரும்புகிறார்களாம். நாளை மத்தியானம் வருகிறார்களாம். விடிவெள்ளி முளைத்துவிட்டது. ஆனால் [illegible] கொடுத்த பரிசு...'' என்றவள் பேச முடியாமல் தேம்பினாள். நடுங்கும் கைகளுடன் வந்திருந்த கடிதங்களை சூரியாவிடம் கொடுத்தாள்.

பார்வதியும் வந்துவிட்டாள்.

''இனிமை!'' என்று அழைத்தான், சூரியா.

''அத்தான்!'' என்றவள் தலை நிமிர்ந்தாள். கண்களில் கண்ணீர் ததும்பி வழிந்தது.

''மிகவும் மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னாய் இனிமை! அம்மாவிடம் ஒரு கதைக்கான தொகையைக் கொடுத்துவிடு. எனக்காக நீ பட்ட கஷ்டங்களின் பிரதியாக மற்றொன்றின் அன்பளிப்பை ஏற்றுக்கொண்டுவிடு. நிம்மதி கண்டுவிட்டேன் இனிமை! எனக்கு இதைவிட நிம்மதி! நிம்மதி... அந்த எவருக்கும் கிட்டாத இடம்தான்'' என்பதற்குள் ''அத்தான்!'' என்று 'க்றிச்'சிட்டாள் இனிமை.

''சூரியா!'' என்ற பார்வதியின் குரலில் பாசம் மேம்பட்டு நின்றது. ஏனென்பது போன்று அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''அசடா நீ! ஏன் அம்மா ஊரிலே இருக்கவேண்டும்? இங்கேயே வந்துடட்டும். ஒரே குடும்பமாக வாழ்வோம்...நீ சொல்லு! அதை இனிமை எழுதட்டும்... நடந்தது நடந்துவிட்டது'' என்றாள்.

''ஆமாம் சூரியா!'' என்றாள் பாகீரதியும்.

* * *

அமைதி தவழ்ந்தது.

''அத்தான்!'' என்றாள், இனிமை. கண்களைத் திறந்தான்.

'' இனிமை! 'கடைசிக் கதை' நம்மைப் பொறுத்தவரை வாழ்வின் முதல் பகுதியானது. ஆனாலும் ஊனமாகிவிட்டவனைத் தொட வேண்டாம் இனிமை...'' என்பதற்குள், தனது மலர்க்கரங்களால் அவனது வாயைப் பொத்தினாள்.

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க! என் நெஞ்சத்திலே காலமெல்லாம் ஒலிக்கும் கானமாகிவிட்டீர்கள் அத்தான்! நெஞ்சிலே ஒரு வடு அந்நிகழ்ச்சி'' என்றவள் பேச முடியாமல் திணறினாள். அவளது கண்களிலிருந்து தெறித்த கண்ணீர்த் துளிகளோ, பின்னமான அவனது கட்டை விரலைத் தழுவின!

விஞ்ஞானக்கதை :

விண்கல்

செ.கணேசன்

அட்லாண்டிக் பெருங்கடலில் 'நடமாடும் நகர்' ஒன்று நீந்திக்கொண்டிருந்தது. 'நடமாடும் நகர்' என நான் குறிப்பிடுவது கப்பலைத்தான்.

பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றுக் கொண்டிருந்த அனைத்துலகப் பொருட்காட்சியின் அற்புதங்களைக் காண்பதற்காகவே அக்கப்பலில் ஏராளமானவர்கள் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.

பகல் மணி இரண்டாக இருந்த போதிலும் வெப்பம் சிறிதும் இல்லை ; ஏனென்றால் கடல், கப்பலுக்கு வெண்சாமரம் வீசிக்கொண்டிருந்தது.

கடற்காற்றை அனுபவித்துக் கொண்டும், கடலை நோக்கிக்கொண்டும் கீழ்த் தளத்தில் ஏழு பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ரமேஷ், பிராண்டோ, சுதாகர், ஆஸாத் முதலியோர் ஆண்கள். மார்க்கரெட், வைஜெயந்தி, ஜமீலா முதலியோர் பெண்கள். அகில உலக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த அவர்கள், சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் படிப்பவர்கள்.

'இராமன் விளைவு' பற்றி அவர்களுக்குள் சர்ச்சை நடந்து கொண்டிருந்தது. அதில் தொடங்கிய தர்க்கம் 'லூனிக்' வரை சென்றது.

கடற்பறவைகள் நூற்றுக்கணக்கில் கூட்டங் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. அவைகளைத் தங்கள் 'கேமரா'விற்குள் அடைத்துக் கொண்டனர் பலர்.

வானத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பிராண்டோ தன் நண்பர்களிடம் "அதோ, வானத்தில் ஒரு கருமையான பொருள் காணப்படுகிறதே பாருங்கள் !" என்றான்.

உடனே எல்லோரும் 'பைனகுலர்' மூலமாகவும் 'டெலஸ்கோப்' மூலமாகவும் அந்தக் கறுப்புப்பொருளைப் பார்த்தபோது திடுக்கிட்டனர். "சந்தேகமே இல்லை, அந்தக் கருப்புப் பொருள் விண்கலேதான், அது கப்பலை நோக்கி வந்து கொண்டிருக்கிறது !" என்று எல்லோரும் கத்தினர்.

வானத்திலே சஞ்சரிக்கும் கோளங்களோ, நட்சத்திரங்களோ ஒன்றையொன்று மோதுவதால் சிதறும் இத்தகைய பெரும் பெரும் பாறைகள்தான் விண்கற்கள் எனப்படுவது. அவைகள் காற்று மண்டலத்தின் ஊடே வரும் போதே உராய்வு ஏற்பட்டு எரிந்து காற்றோடு கலந்து விடுவதால் நம் பூமியைத் தாக்க முடியவில்லை. ஆனால் ஏதாவது ஒரு சில சமயங்களில் பிரமாண்டமான விண்கற்கள் காற்று மண்டலத்தின் உராய்விலும் எரிந்தது போக மிகுதிப்பட்டு பூமியைத்தாக்கி விடுகின்றன.

முதலில் தொப்பியைப்போல் காணப்பட்ட விண்கல் கொஞ்ச நேரத்திற்குள் விரித்த குடை போன்று மாறி இப்போது பத்து கெஜ விட்டமுள்ள வட்டம் போல் ஆகிப் பாய்ந்து வந்து கொண்டிருந்தது.

வானம் இருண்டது. கப்பலில் மின் விளக்குகள் போடப்பட்டன. ஏனென்றால் அந்த விண்கல் சூரியனின் ஒளியை மறைத்து விட்டது.

கப்பல் தலைவர்கள் அந்த விண்கல் எந்த இடத்தில் குறிப்பாக விழும் என்பதைக் கணக்கிட்டு, அந்த இடத்தை விட்டு அகலும் பொருட்டு வேமாகக் கப்பலைச் செலுத்தினர்.

இந்த நேரத்தில் கப்பலை முன்னேற விடாமல் பலத்த புயல் எதிர்த்திசையிலிருந்து வீசியது. கப்பலால் நகரக்கூட முடியவில்லை. கப்பல் தலைவர்கள், புயல் தன் வேகத்தால் கப்பலை ஏதாவது ஒரு திசையில் தள்ளிக்கொண்டு போகட்டும் என்று கருதி, சாமர்த்தியமாக இயந்திரங்கள் இயங்குவதை நிறுத்தினர். ஆனால் அப்போது புயலும் நின்று விட்டது. மறுபடியும் கப்பலை இயக்குவதற்குள் விண்கல் மிக

உல்லாசப் பிரயாணம் ஓலக்குரலாக மாறியது! ஆனால்
அபாயத்தின் எல்லையிலும மனிதந்தன்மையை மறக்கவில்லை அவர்கள்!

அருகில் வந்து விட்டது- இப்போது அதன் பருமன் கப்பலின் பருமனில் பாதி இருந்தது.



கப்பல் நரகம் போல் காட்சி அளித்தது. ஒரே பீதி; அழுகுரல். சிலர் அதிர்ச்சியுற்று மயங்கி விழுந்தனர். ஐந்தாறு பேர்கள் இதயம் திடீரென்று நின்றுவிட்டதால் இறந்து போனார்கள்.

கப்பல் உச்சநிலை வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. விண்கல் ஒரு பர்லாங் தூரத்தில் வந்து கொண்டிருந்தது.

விண்கல் விழ இருக்கும் இடத்திலிருந்து கப்பல் இன்னும் விலகவில்லை. ஆனால் தொண்ணூறு சதவீதம் விலகிவிட்டது.

விண்கல் கடலில் விழுந்தபோது கப்பல் தப்பிவிட்டது. கல் விழுந்த இடத்திற்கும் கப்பலுக்கும் இடையிலுள்ள தூரம் இருபது அடி இருக்கும். பிரயா

ணிகள் ஆனந்தத்தால் ஒருவரையொருவர் தழுவி முத்தமிட்டுக் கொண்டனர். துள்ளி ஆடினர்.

ஆனால்...

விண்கல் கப்பலைவிட இரண்டு மடங்கு கனம் உள்ளதாக இருந்ததால், பலத்த அதிர்வும், பெரிய அலைகளும் எழுந்தன.

ஆம்; கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

சிறிது நேரம் கழித்து இரைச்சலும், அலைகளும் ஒடுங்கின ; அமைதி நிலவியது.

சென்னை மருத்துவக் கல்லூரியின் மாணவ, மாணவியர் ஏழு பேரும் நீந்திக் கொண்டிருந்தனர். வைஜெயந்தியும், ஜமீலாவும் அதிகமாக நீச்சல் பயிற்சி இல்லாததால் எல்லோருக்கும் பின்னால் மிகக் களைப்படைந்து நீந்தி வந்து கொண்டிருந்தனர்.

அதனால் ரமேஷும் பிராண்டோவும் வைஜெயந்திக்கு உதவியாக வந்தனர். இருவருடைய தோள்களையும் பிடித்துக் கொண்டு கால்களால் நீந்தி முன்னேறினாள் வைஜெயந்தி. அதைப் போல் ஜமீலாவுக்கு சுதாகரும் ஆஸாத்தும் உதவினர். மார்க்கரெட் சிறிது களைத்தாலும் சளைக்கவில்லை.

ஏதாவது மரக்கட்டைகளோ மீட்புப் படகோ கப்பலோ காணப்படாதா என்று அவர்கள் துடித்தனர். அல்லது திட்டு எங்காவது தென்படாதா என்று ஏங்கினர். அவர்களின் தாகத்தைத் தீர்க்கக் கடல்நீர் துணைபுரியவில்லை. உயிர்ப் போராட்டத்தில் சிக்கி இருந்த அவர்களுக்குப் பசி ஒரு கேடா ?

சுராமீன் அவர்களை விழுங்கக்கூடும். அணு அணுவாகச் சாவதைவிட அப்படியாகிலும் ஒரேநிமிஷத்தில் அவர்கள் இறந்துவிட்டால் நல்லது. அவர்களுக்கு ஏற்பட்ட இந்த இன்னல் அவர்களின் தாங்கும் சக்திக்கு மிக அப்பாற்பட்டது. கற்பனையில் கூட அந்த இடரை சிந்தித்துப் பார்த்திருப்பார்களோ என்னவோ?

வெகு நேரம் நீந்திய பிறகு அவர்களுடைய வேகம் இருபது சதவீதமாகக் குறைந்தது. இரண்டுபேர் உதவி செய்தும் கூட வைஜெயந்தி தளர்ந்துவிட்டாள். மயங்கி விடுவாள் போலத் தோன்றியது. அவர்களைச் சுற்றிலும் அடிவானத்தைத் தவிர வேறு ஒன்றும் தெரியக் காணோம்! மேகமே இல்லாத நீல வானமும் கடலின் நீலமும் அவர்களிடம் பயங்கரக் கதை சொல்லின.

மார்க்கரெட் மிகக் களைப்படைந்ததால் ரமேஷ்,வைஜெயந்தி,பிராண்டோவிற்கும், ஆஸாத் ஜமீலா,சுகாதருக்கும் இடையே புகுந்துகொள்ள வேகமாக நீந்திச் சென்று பிராண்டோவின் தோளையும் ஆஸாத்தினுடைய தோளையும் பற்றிக்கொண்டாள்.

அவர்களுக்கு நம்பிக்கை அற்றுப்போய் விட்டது- இனி சாக வேண்டியதுதான் என்று நினைத்தனர்.

பெண்களின் நிலையைப் பார்த்து ஆண்களும், ஆண்களைக் கண்டு பெண்களும் கண்ணீர் வடித்த பொழுது ஒரு படகு தூரத்தில் தென்பட்டது. அந்தப் படகு மெதுவாகச் சென்று கொண்டு இருந்தது.

எனவே அவர்கள் முன்னை விட வேகமாக நீந்தினர். படகைக் கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கினர்.

“நண்பர்களே!” என்று அழைத்தாள் வைஜெயந்தி, எல்லோரும் பேசக்கூட சக்தி அற்றவர்களாய் அவளை நோக்கினர்.

“நன்றாகக்கூர்ந்து கவனியுங்கள். அந்தப் படகு சிறிய படகு, அதிலோ சுமார் பதினைந்து பேர்கள் ஏறியிருக்கிறார்கள். அந்தப் பதினைந்து பேர்களைச் சுமக்க மாட்டாமல் சுமந்து செல்கிறது படகு. ஆனால் அந்தப்படகு அவர்களைத் தாங்கிச் செல்வதற்குப் போதுமானது. நாமும் அதில் ஏறினால் அது தாக்குப் பிடிக்கக் கூடியதுதான்; என்றாலும் உறுதியாகக் கூறமுடியாது; கவிழ்ந்தாலும் கவிழ்ந்துபோகும். ஆகவே....”

களைப்பு மிகுதியால் பேசமுடியாத வைஜெயந்தி இடையே பெருமூச்சு விட்டுக் கொள்ளும் பொருட்டு நிறுத்தினாள்.

"புரிகிறது வைஜெயந்தி. நாம் அறிவோடு நல்ல பண்பும் படைத்தவர்கள். நம் போட்டி மனப்பான்மையும், சுயநலத் தன்மையும் நமது தோல்விக்கு அடிப்படையாகப் போய் விடக்கூடும். நம்மால் அவர்களும் சாகக் கூடாது, ஆகவே படகில் நாம் ஏறவேண்டாம் என்று தானே கூற வருகிறாய்? அதுதான் எல்லோருடைய எண்ணமும்", என்றனர் யாவரும்.

'நாமும் படகில் ஏறினால் அது பாரம் தாங்கமாட்டாது கவிழ்ந்துவிடும், நம்மால் மற்றவர்களும் சாக நேரிடும் என்று நிச்சயமாகத் தெரிந்து, அதனால் அவர்கள் படகில் ஏறவில்லை' என்றால் அதில் விசேஷமும் இல்லை. உயர்ந்த பண்பும் இல்லை. ஆனால், 'நாம் ஏறினால் படகு தாங்கக் கூடியது தான், ஒருவேளை கவிழ்ந்தாலும் கவிழ்ந்து போகும் என்ற இருமைக் கருத்து தோன்றி-அதில், கவிழ்ந்தாலும் கவிழ்ந்துபோகும் என்ற சிறுபான்மைக்கருத்தே மேலோங்கி முக்கியமானதாகக் கருதப்பட்டு மேற்கொள்ளப்பட்டது' என்பதால் தான் அவர்களின் தியாக சிந்தையும் பெருந்தன்மையும் பரந்த நோக்கும் சேர்ந்து ஒரு மகத்தான பண்பை உருவாக்கி இருக்கிறது என்று கூற முடிகிறது.

அவர்கள் படித்து முடித்தபின் டாக்டர்களாகி ஆயிரமாயிர மானவரைக்காப்பாற்றும் சேவையை மேற்கொள்ள இருந்தவர்கள். ஆனால் அவர்கள் ஆயிரக்கணக்கானவர்களைக் காப்பதை விட இப்போது அவர்கள் செய்திட்ட சேவை சாதாரண உயிரோட்டம் உள்ளது அல்ல: செய்யக் கூடிய சேவையின் பரப்பளவில் இருக்கக் கூடிய சிறப்பை விட, அது எந்தச் சூழ்நிலையில், சாதிக்கப்பட்டது என்பதில் தான் மிக மிகச்சிறப்பு இருக்கிறது.

படகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

அவர்களும் நீந்திக்கொண்டே இருந்தார்கள். ஆனால் அவர்களின் நீச்சல் வேகம் குறைந்து கொண்டே வந்தது. ஆமாம், அவர்கள் நீந்தியபடியே இருந்தார்கள். அவர்களின் சக்தியும் உயிரும் அணுஅணுவாகப் பிரிந்து சென்று கொண்டே இருந்தது!



எங்கும் புகழ்பெற்றதும் யாவராலும் போற்றப்படுவதும்

உயர்ந்த ரகப் புகையிலையினாலும், கைதேர்ந்த ஆட்களைக்கொண்டும் தயார் செய்வதுமான

மங்களூர் லிங்கம் தர்பார் பீடி

எப்பொழுதும் உபயோகியுங்கள்!

தப்பாது ஆனந்தம் தரும்.

விலாசம் :

லிங்கம் தர்பார் பீடி பாக்டரி,

உரிமையாளர்: T. R. தர்மலிங்க முதலியார்]

31, தேவராஜ முதலித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

பிறமொழிக்கதை :

இரண்டாவது தாஜ்மகால்

வங்கமூலம்: வனபூல்

தமிழாக்கம்: இளம்பாரதி

முதல் தடவையாக தாஜ்மகாலைப் பார்ப்பதற்காக ஆக்ரா சென்றேன். ஆக்ரா புகைவண்டி நிலையம் சிறிது தொலைவில்தான் இருப்பதறிந்து வண்டியில் உட்கார்ந்திருந்தவர்கள், "அதோ தாஜ்மகால்!" என்று சொல்லியதைக் கேட்டுத் தலையை நீட்டி வெளியே ஆர்வத்துடன் பார்த்தேன்.

கூப்பிடு தூரத்தில் தாஜ்மகால் தென்பட்டது.

நடுப்பகல்வெளியில் பளிச்சிட்ட தாஜ்மகாலைப்பார்த்து மிக்க வியப்படைந்தேன். இதுதானா, ஷாஜஹானின் தாஜ்மகால்? ஏதோ வெள்ளையடிக்கப்பட்ட ஒரு மசூதியைப் போலத் தோற்றியது. இன்னும் சற்று உற்று நோக்கினேன். எவ்வளவு ஆராய்ந்தபோதும் என் அபிப்பிராயம் மட்டும் மாறவில்லை. அவ்வளவு நேர்த்தியானதா தாஜ்மகால்? எவ்வளவோ உயர்வாகச் சொல்கிறோமே அந்த தாஜ்மகால்தான் அது!

புகைவண்டியின் வேகம் அதிகமானதும் முதலில் மசூதியாகத் தோன்றிய தாஜ்மகால் கண்ணிலிருந்து மறைந்தது.

* * *

அதன் பின்னர் சிறிது நாட்களுக்குப் பின் ஒரு நாள் இரவில் முழு நிலவில் தாஜ்மகாலைப் பார்க்கச் சென்றேன். நான்கு திக்கிலும் தன் கூந்தலை அவிழ்த்து விட்ட வண்ணம் நிலாப் பெண் உட்கார்ந்திருந்தாள்; ஒளியைச் சிதறிச் சிரித்துக் கொண்டிருந்தாள். மெல்லிய உடையணிந்து ஷாஜஹானின் பட்டத்தரசி மும்தாஜ் என்னை அழைப்பது போலிருந்தது அது. உண்மையில் அன்றைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

* * *

பல நாட்கள் கழிந்தன.

தாஜ்மகாலைக் கட்டியதில் யார் யார் எவ்வளவு சம்பாதித்தார்கள், தாஜ்மகாலைப் பார்க்க வந்த யாத்ரீகர்களுக்கு சிற்றுண்டி வினியோகித்து எந்தஓட்டல்காரர் எவ்வளவு பணம் சம்பாதித்தார், ஆக்ரா புகைவண்டி நிலையத்திலிருந்து தொடங்கி யாத்ரீகர்களை 'டாங்கா வாலாக்கள்' எப்படி ஏமாற்றுகிறார்கள்...... இவையெல்லாம் என் வரை அத்துபடியான விஷயங்களாகி விட்டன. நாள் தோறும் ஐந்து தடவையாவது தாஜ்மகால் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறேன். காரணம்—ஆக்ரா அரசாங்க மருத்துவ நிலையத்தில் நான் டாக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறேன்! இப்பொழுது தாஜ்மகால் எனக்கு அவ்வளவு கவர்ச்சியாக இல்லை.

ஒரு நாள்......

தாஜ்மகாலைப் பார்த்துக் கண்ணீர் வடிப்பவர்களே!
இதோ இன்னுமொரு தாஜ்மகால்!

வெளிவேலைகளை முடித்துக்கொண்டு என் வீட்டில் வைத்திருந்த டிஸ்பென்சரிக்கு வந்தேன். அப்பொழுது முஸ்லீம் கிழவனொருவன் உள்ளே நுழைந்தான், முதுகில் மூட்டை ஒன்று இருந்தது. அதைச் சுமக்கமுடியாமல் அவன் ஆயாசப் பட்டுக்கொண்டிருந்தான். ஏதோ விற்றுப்பிழைப்பவன் என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் முதுகிலிருந்து மூட்டையைக் கீழே இறக்கிய பின்னர்தான் உண்மை வெளியாயிற்று. அந்த மூட்டைக்குள் அவனது மனைவி 'பர்தா' அணிந்தபடி இருந்தாள். அந்தக் கிழவன் என்னை வணங்கி, தனது மனைவியின் உடல்.நிலையைச் சோதிக்கவேண்டுமென்று உருதுமொழியில் வேண்டிக் கொண்டான். தான் மிகவும் ஏழையென்றும், 'பீஸ்' கொடுக்க முடியாதென்றும் தெரிவித்துக் கொண்டான். எப்படியாவது கருணை காட்டவேண்டுமென்று காலில் விழுந்துவிட்டான்.

சற்றே அருகில் சென்றேன். கெட்ட நாற்றம்; சகிக்க முடியாத நாற்றம். அவனுடைய மனைவிக்குப் புதுவகையான காய்ச்சலென்று சோதித்தபோது தெரியவந்தது. முகமெல்லாம் அழுகிப் போயிருந்தது. ஒரு பகுதி முக அடையாளமோ தெரியவில்லை. அவளை 'டிஸ்பென்சரி' தாழ்வாரத்தில் உட்காரச் சொன்னேன்.



அங்கிருந்த நோயாளிகளோ அவளைத் தம் அருகில் அண்டவிடவில்லை. கம்பவுண்டர், நர்சு......தோட்டி கூட அவளை அணுக ஒப்புக்கொள்ளவில்லை! படு நாற்றம்! ஆனாலும் என்ன......அந்தக் கிழட்டு முஸ்லீம் தன்னவளை எவ்வளவோ எச்சரிக்கையுடன் கவனித்துக்கொண்டான். எவருக்கும் விருப்பம் இல்லாது போனதால் நான் அந்த முஸ்லீமை அருகில் இருந்த மரத்தடியில் இருக்க வைத்தேன். நான் சொன்னவாறே அவன் தன் மனைவியை அழைத்துப் போய் அந்த மரத்து நிழலில் உட்கார்ந்தான். நானே நேரடியாகப் பரிசோதித்தேன்; மருந்து கொடுத்தேன். இப்படி நாட்கள் கழிந்து

"அப்பா? அப்பா! இது 'வசவச'ன்னு எத்தனை குட்டி போட்டிருக்கு பாருப்பா!"

தந்தை: "? ? ?"

கொண்டிருந்தன,

திடீரென்று ஒரு நாள் அந்த மரத்தடியில் அந்த முஸ்லீம் தம்பதிகள் காணப்படவில்லை.

சில நாட்கள் கழிந்தன.

வெளி வேலைகளை முடித்துக் கொண்டு 'டிஸ்பென்சரி'க்கு திரும்பிக் கொண்டிருந்தேன். தொலைவில் ஒரு வயோதிக முஸ்லீம் தென்பட்டான். அவன் என்ன செய்து கொண்டிருந்தான்? நடுப்பகலில் சுட்டெரிக்கும் வெயில். அந்த வெய்யிலில் என்ன செய்கிறானென்று அறிய முயன்றேன். அருகில் சென்று பார்த்தேன். மருந்து கொடுத்துப் பராமரித்தேனே அதே கிழவன்தான்! சிறு சிறு செங்கற்களை மண் கலவையால் கட்டி அலங்கரித்துக் கொண்டிருந்தான்.

"இதென்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

அவன் வணங்கினான்.

"என் மனைவிக்குக் கோவில் கட்டுகிறேன், பாபு!"

"கோவிலா?"

"ஆமாம், பாபு!"

நான் மௌனமாகி விட்டேன், சிறிது நேரம்.

"நீ எங்கிருக்கிறாய் இப்போது?"

"ஆக்ராவில் பிச்சையெடுக்கிறேன்."

"உன் பெயரென்னவென்று சொன்னாய்?"

பக்கிரி ஷாஜஹான்!"

என் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை!

தந்தி: குமரன் டெலிபோன்: { மில்: 93 / ஆபீஸ்: 583 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P.O. கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... **19,044**

மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... **5,900**

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை சென்னை ஆந்திர மாகாணங்களில் மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. V. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

எதிரியின் பலம்

(வனு. கனு)

ஊருக்கு வெளியே ஒரு மைல்
தள்ளி அமைந்திருந்தது சத்திரம். பெரிய
நகருக்கும் 'திவ்ய க்ஷேத்திரம்' ஒன்றுக்
கும் இடையே நீண்டு கிடந்த சாலே
யில், ஒரு ஓரத்தில் அது இருந்தது.

அந்த ஊருக்கும் நெடுஞ்சாலேக்கும்
நடுவே அழகான பெயரை உடைய ஜீவ
நதி கிடந்தது. அவ்வாறு, பெரும் பகுதி
மணலாகவும் சிறு பங்கு தண்ணீரோ
டும் காட்சி அளித்தது.

ஆற்றின்மீது ஒரு பாலம். நகரம்
என்றும் சொல்ல முடியாத, கிராமம்
என்றும் தள்ளிவிட முடியாத 'சுமாரான
பெரிய' ஊரிலிருந்து வண்டிகளும் பிற
வும் ரயில்வே ஸ்டேஷனுக்கு அந்தப்
பாலத்தின் மேலாகத்தான் போய்வர
வேண்டும்.

'ரயிலடி' ஊரிலிருந்து ஒரு மைல் தள்
ளியும், சத்திரத்திலிருந்து சிறிது விலகி
யும் இருந்தது. ரயில் நிலேயம் செல்லும்
ரஸ்தா ஓரத்தில் சத்திரம் அமைந்
திருக்கவில்லே; ரயிலுக்குச் செல்லும்
பாதையில், ஆற்றிலிருந்து பிரிந்து
போகும் கால்வாய் ஒன்று ஓடுகிறது.
ரோட்டிலிருந்து எட்டிப் பார்க்க வேண்
டிய அளவு பள்ளத்தில் ஓடும் கால்
வாய்க்குக் கரையாகவும், பாதசாரிகளுக்
குப் பாதுகாவலாகவும் இரும்புத்
தண்டவாளங்களாலான வேலிஉண்டு.

இந்த ரஸ்தாவின் மறுபுறத்தில்
வரிசையாகக் கடைகள் பல இருந்தன.
நாகரிகமான ஓட்டல் ஒன்றிரண்டும்,
'சைவாள் காபி அன்ட் டீ கிளப்' ஒன்
றும், பலகை தொங்க விடாமலே பிர
மாத வியாபாரம் நடத்தும பலகாரக்
கடைகள் இரண்டு மூன்றும், பலசரக்
குக் கடைகள் சிலவும், ஷாப்புகள், மரக்
கடைகள், 'சிகை முடி சிங்காரிக்கும்
நிலேயம்' முதலியனவும் இருந்தன.

பகல் வேளேயில் இவ்வட்டாரம்
விழிப்புடன் விளங்கும். இரவில் எட்டு
மணி வரை வெளிச்சம் இருக்கும். அப்
புறம் தூங்கி வழியத் தொடங்கும்.
ராத்திரி பத்து மணிக்கு மேலே ஒரே
சவ உறக்கம்தான்.

தூங்கிக்கிடக்கும் ரயில் பாதையில்
எப்பவாவதுதான் வண்டிப்போக்கு
வரத்து நிகழும். இரவில், பிரயாணி
களுக்கு உதவக்கூடிய ரயில் வண்டி
எதுவும் கிடையாது. எனவே, ரயிலடிக்
குச் செல்லும் பாதையும் தூக்கத்தை
மேற்கொள்வது இயல்புதானே ?

ஆற்றை ஒட்டி, ஆற்றுக்குத் தோழன்
போல, வளேந்தும் நேராகவும் சென்ற
பெரிய சாலே சதா போக்குவரத்து
பெற்று உயிர்ப்புடன் விளங்கக்கூடியது
அல்ல. தூரத்து ஸ்தலத்தில் திருவிழா
என்று ஏற்பட்டால், இந்தச் சாலேயிலும்
கலகலப்பு ஏற்படும். சாதாரண காலங்
களில், பகல் வேளேயில் அபூர்வமாகச்
சில வண்டிகள் போகும். ஒன்றிரண்டு
'பிளஷர் கார்கள்' ஓடினுல், அது அதி
விசேஷ நிகழ்ச்சி என்றே கணக்கிடப்
பெறும்.

ஆகவே, சத்திரம் எப்பொழுதும் கவ
னிப்பற்ற குழந்தை மாதிரி தன்னந்
தனியாக ஒதுங்கியே நின்றது. இரவு
வேளேகளில் ஒருவர் இருவர் படுக்க
இடம் தேடி வந்தாலும் வருவார்கள்.
அங்கே தங்குவதற்கென்று வழிப்போக்
கர்கள் வந்தாலும் வராது போனுலும்,
சத்திரத்தைப் பாதுகாத்துப் பரிபாலிப்
பதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஆள்
ஒருவன் அங்கு எப்போதும்
இருப்பது வழக்கம். யாத்திரிகர்களின்
வசதிக்காகத்தானே அமைக்கப்பட்டி
ருந்தது? உதவி தேடிவருகிற பிரயாணி
களின் தேவைகளேக் கவனிக்க, தேவை
யான சமயத்தில், ஆள் இல்லாது
போனுல் சத்திரத்தின் மதிப்பு என்ன
ஆவது ?

சத்திரத்துக் காவல்காரன் 'புஜபல
பராக்கிரமம்' மிகுந்த வாலிபனுகத்தான்
இருக்கவேண்டும் என்கிற விதி எதுவும்
இல்லே. குறைந்த சம்பளமும் சோம்
பேறிப்பிழைப்பும் வலுவுமிக்க 'இள
வட்டங்களே' வசிகரிக்காத காரணத்
தால், அநேகமாகக் கிழவர்களும்

ஊரே நடுங்கியது, 'காசித்தேவன்' என்ற சொல் கேட்டு! அவனே
எல்லோரையும் போல உணர்வும், பாகமும் கொண்ட
ஒரு சாதாரண மனிதனுக நடந்து கொண்டான்!

சோதாப் பேர்வழிகளும்தான் ஒருவர் பின் ஒருவராக அந்தப் பொறுப்பை நிர்வகித்து வந்தனர்.

காவல்காரன் பலவேசம் கிழடு அல்ல; இளைஞனுமல்ல. அதிக உழைப்பினாலும் வறுமையாலும் உருக்குலைந்து ஓய்ந்துபோன நோஞ்சான் ஆசாமி. அவனுக்கு இந்த வேலை சிறந்த 'வரப்பிரசாதம்' என்றே பட்டது. தூங்குவதற்கும் சோம்பிக்கிடப்பதற்கும் சுகமான வேலை. 'ஒரு வயிற்றை ரொப்புவதற்குப் போதுமான வருவாய் இருந்தது. அவ்வப்போது சத்திரத்துக்கு வந்து போகிறவர்கள் தாராளமாக அள்ளிக்கொடுக்கிற 'மிச்சம் மிஞ்சாடிகள்' எதிர்பாராத உபரி வருமானம் என்ற இனத்தில் சேரும். அதனால் பலவேசம் கவலையில்லாத வாழ்வு வாழ்ந்தான்.

அன்று பிற்பகலில் நன்றாகத் தூங்கிவிட்டு விழித்தெழுந்த பலவேசம் சத்திரத்தின் அறைகளைச்சுத்தப்படுத்துவதாகப் 'பெயர் பண்ணிவிட்டு', அரிக்கன் லாந்தரைப்பார்த்தான். அதன் சிம்னியின் ஒரு புறத்தில் புகை படிந்து கரி ஏறியிருந்தது. 'சனியன் பிடிச்ச திரி சரியாக எரிவதேயில்லே. அதை ஒழுங்காக வெட்டிவிடணும்...ப்சு! நாளைக்குப் பார்த்துக்கிடலாமுங்றேன்!' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

'சிம்னியை இப்ப துடைக்கலாமா? அல்லது நாளைக்கே துடைச்சுக்கிடலாமா?' என்று அவன் உள்ளம் ஊசலிட்டது. 'இன்னிக்கு என்ன அவசரம்? நாளைக்கே துடைக்கலாம்' என்று மனம் வாயிதா போட்டது.

அவன் சத்திரத்துத் திண்ணையில் அமர்ந்து நிம்மதியாகப் பீடி பிடிப்பதில் ஈடுபட்டான்.

அந்திக் கருக்கல் நேரம். ரஸ்தா வெறிச்சோடிக் கிடந்தது. சீறிச் சுழன்ற பெருங்காற்று திடீர் திடீரென்று வேகம் பெற்று, ரோட்டுப் புழுதியை எல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டு இரைச்சலிட்டுக் களிப்பெய்தியது. உயர்ந்து மேடிட்டிருந்த ஆற்றங்கரைமீது இரண்டுபேர் மெதுவாக நடந்து போனார்கள்- பாலத்தின் மேலே வில் வண்டி ஒன்று போய்க்கொண்டிருந்தது. தூரத்துக் கடைகளில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகள் ஒளி பெற முடியாது மினுக்கின. வேகமாக வந்த ஒரு கார், 'எதையோ பறிகொடுத்துவிட்டுப் பதறியடித்து ஓடுவதுபோல' — அல்லது எங்கோ பற்றிக் கொண்ட தீயை அணைக்கப் பாய்ந்து போகிற மாதிரி— கண்மூக்குத் தெரியாமல் மண்ணை வாரி வீசியபடி ஓடிப் புழுதிக்குள் மறைந்தது. அது கிளப்பிவிட்டுச்சென்ற ரஸ்தா மண் மேகப்படலம் போல் கவிந்து நின்றது.

'தூ!' என்று காறித் துப்பினான் பலவேசம். 'என்ன கொள்ளையோ எளவோ! ஏன்தான் இந்தப் போக்கு போறுங்களோ தெரியலே... சவத்துப் பய காத்து ரோட்டு மண்ணை எல்லாம் சத்திரத்துக்குள்ளேயே வீசியடிக்கிறது போதாதுன்னு, கார்க்காரன் வேறே அள்ளி வீசிக்கிட்டுப் போறான்!' என்று முனங்கினான். தாமாக மூடிக்கொண்ட கண்களை விரல்களால் துடைத்துவிட்டான்.

'ஐயா, ராத்திரிப் பொழுதை இங்கே கழிச்சிட்டுப் போக இடமிருக்கா?' என்று யாரோ கேட்கவும், நன்றாக விழித்துப் பார்த்தான் அவன்.

நடந்து நடந்து அலுத்துப் போன ஒரு உருவம் நின்றது. நாற்பது வயசுக்கு அதிகம் இருக்கலாம். அவ்வளவாக நெட்டை என்று சொல்வதற்கில்லை. உடம்பில் சதைப் பிடிப்பு இல்லாததனால், உயரம்போல் தோன்றியது. நரை கறுப்பும் கலந்து குட்டையாக வெட்டிவிடப்பட்டிருந்த தலைமீது ஒரு பொட்டணம் இருந்தது. ஏதோ ஒரு மரத்திலிருந்து வெட்டி, மேல் தோலியைச் சீவி விட்டதால் 'வெள்ளை வெளேர்' என்று பளிச்சிட்ட ஒரு கம்பு — மிகப் பருமனானதுமல்ல—அவனுக்குக் கைத்தடியாகப் பயன்பட்டது. வேட்டியை 'தார் பாய்ச்சிக் கட்டி'யிருந்தான். கால் செருப்புகளும் கணுக்கால்வரை பாதங்களும் புழுதி படிந்து வெளுத்துக் காணப்பட்டன. அவன் வெகு தூரம் நடந்து வந்திருக்கவேண்டும் என்பதை அவனுடைய தோற்றமே எடுத்துக் காட்டியது.

அவனை மேலும் கீழுமாகப் பார்த்த பலவேசம் பல்லைக் காட்டினான். 'சத்திரமே அதுக்காகத்தானே இருக்கு? வாரும் வாரும்... நிறையவே இடம் கிடக்கு... இன்னிக்கு உம்மைத் தவிர

வேறு யாருமே வரலே' என்றான்.

வழிப்போக்கன் உள்ளே புகுந்தான். பலவேசமும் அவனைப் பின் தொடர்ந்து சென்றான். வந்தவன், ஒரு மூலையில் தனது முட்டையை வைத்து விட்டு, கீழே உட்கார்ந்து சுவரில் சாய்ந்தான்.

'இருபது மைல் நடந்து வந்தாச்சு. இன்னும் பதினெட்டுக் கல்லு போகணும். ராத்திரி நேரத்தை இங்கேயே கழிக்கலாம்னு தான்...' என்று இழுத்தான் அவன்.

அரிக்கன் லாந்தரை ஏற்றி, திரியைச் சிறிதாக இறக்கி வைத்துவிட்டு பலவேசமும், ஒரு தூணருகில் அமர்ந்தான். பிரயாணியின் ஊர், அவன் போய்ச் சேரவேண்டிய இடம் பற்றி எல்லாம் விசாரித்தான். அவன் பெயர் பாண்டியன்பிள்ளை என்றும் தெரிந்து கொண்டான்.

'நான் சாப்பாடு கொண்டாந்திருக்கேன். புளியஞ்சோறும், தயிர்ச்சோறும். ரெண்டுபேருக்கும் தாராளமாய்ப் போதும். முதல்லே நான் வாய்க்காலுக்குப் போயி சாப்பிட்டு விட்டு வாரேன்,' என்று பாண்டியன் பிள்ளை அறிவித்தான்.

பலவேசத்தின் மகிழ்ச்சியும் நன்றியும் அவன் முகத்தில் மலர்ச்சியுற்றுத் திகழ்ந்தன, 'அப்படியே செய்யும்!' என்று அனுப்பி வைத்தான் அவன்.

பாண்டியன் பிள்ளை மெதுவாகத் தான் திரும்பி வந்தான். அப்பொழுது நன்றாக இருட்டி விட்டது.

ஆற்றின் பக்கமெல்லாம் பார்வைப் புலனுக்கு எதுவுமே தென்படாத விதத்தில் கன்னங்கரேலென்று இருள் கவிந்து கிடந்தது. தூரத்துப்பாலமோ, நீண்டு செல்லும் ரஸ்தாவோ, ஓங்கி நின்ற மரங்களோ தெரியாதவாறு இருள் கனத்துவிட்டது. சில கடைகளிலும் இருட்டு குடியேறியிருந்தது' காற்று 'மரா மரா' என்று பேயிரைச்சலோடு வீசுக்கொண்டிருந்ததால், மற்றுமுள்ள கடைக்காரர்களும் கடையை மூடிவிட்டு வீடு செல்ல ஆயத்தம் செய்யலானார்கள்.

பாண்டியன்பிள்ளை கொடுத்த சாதத்தை வாங்கிக்கொண்ட பலவேசம் 'இதை நான் இங்கே வைத்தே வாயிலே போட்டுக்கிடுறேன்' என்று சொல்லி, ஒரு பக்கமாகப் போனான்.

அரிக்கன் லாந்தர் தூண்டிவிடப் பட்டிருந்தது. திரி சமமாக எரியாமல், ஒரு ஓரத்தில் பெரிதாக எரிந்தது. அங்கு தீ செந்நாக்கு நீட்டி கரிப்புகை ஊதிக் கொண்டிருந்தது.

நேரம் மெதுவாக ஊர்ந்தது. காற்று அதிகரிக்க, அதிகரிக்க வாடையும் குளிரும் வந்தன. துணியை இழுத்துப் போர்த்திக்கொண்டு' சுவரோடு ஒண்டிக் கை, கால்களை முடக்கிய படி படுத்துக்கிடப்பதே சுகமாக இருக்கும் என்று பலவேசத்துக்கும் பாண்டியன்பிள்ளைக்கும் தோன்றியது.

பலவேசமும் விளக்கை மிகவும் சிறிதாக இறக்கிவைத்துவிட்டு, வெளிக் கதவை பூட்டப்போகிற சமயத்தில் ஒரு ஆள்வந்து நின்றான். படுக்க இடம் தேடித்தான்.

சாரல் காலத்துச் சிறு தூற்றல் சிணுசிணுக்கத் தொடங்கியது. வானத்தில் பூத்துக்கிடந்த ஒரு சில வெள்ளிகள் கூட இல்லாது போயின. மேகக் கூட்டம் கவிந்து கொண்டது; குளிர் அதிகரித்தது.

'வெளியே ரொம்ப மோசமாகத் தானிருக்கும்' என்று முனங்கினான் பலவேசம்.

'ஊங்! காத்து பேயாத்தான் அடிக்கி. விறையல் வேறு உடலைக் குலுக்குது' என்று பதிலுக்கு முணுமுணுத்தான் புதிதாக வந்தவன்.

அவனை உள்ளே அனுப்பிவிட்டு, கதவைப் பூட்டிக்கொண்டு தனது இடத்துக்குப் போனான் பலவேசம். உள்ளே சுவரில் சாய்ந்திருந்த பாண்டியன்பிள்ளை, 'வந்தது யார்'? என்று கவனிக்கும் நோக்கு ஒன்றை வீசினான்.

சாதாரணமான ஆள்' ரொம்ப தூரம் நடந்து வந்தவனாகவும் தெரியவில்லை. வாடைக்காற்றுக்குப் பயந்து புகலிடம் தேடியவனாகத் தோன்றியது. இப்படி எடைபோட்ட பாண்டியன்பிள்ளை திருப்தியோடு தலையாட்டினான்.

புதியவன் நடுவில் நின்று அங்கும் இங்கும் பார்த்தான். கைகளை உயர்த்தி, உடலை நீட்டி வளைந்துச் சோம்பல் முறித்தான். 'உவோவ்' என்று ஊளையிட்டுக் கொட்டாவி விட்டபடி, ஒரு மூலையைத்தேடிப்போனான். கீழே படுத்து, நன்றாகப் போர்த்துக் கொண்டு, உடம்பை முடக்கியபடி கிடந்தான்.

அமைதி பயங்கரமாகக் கொலுவிருந்

தது. காற்றின் ஊளை அதனோடு கோரமாகத் தொனித்தது. எங்கோ செல்லும் ஒரு கட்டை வண்டியின் சக்கரம் 'கடக்-கடக்' என்று எழுப்பிய ஓசை தெளிவாகக் கேட்டது. நாயின் குரைப்பு லேசாக மிதந்து வந்தது. ஆற்றின் மதகிலிருந்து வாய்க்காலில் வந்து விழுந்த தண்ணீரின் 'தட தட' ஒலியும், அது தொடர்ந்து ஓடும் சலசலப்பும் ஓயாத பின்னணி நாதம் போல் இசைத்தன. இவற்றுடன் இணைந்தும் இணையாமலும் ஒலி செய்தது, கொசுக்களின் ரீங்காரம்.

'இங்கே கொசு மனிதனைத் தூங்கவிடாது போலிருக்கே!' என்றான்



பாண்டியன்பிள்ளை.

'ஆமா. கொசுக்கடி அதிகம்தான்' என்று ஒத்து ஊதினன் பலவேசம்.

புதியவன் ஒன்றுமே சொல்ல வில்லை.

'அதுக்குள்ளாகவா தூக்கம் வந்துட்டுது இவனுக்கு? இப்பதானே கட்டையைக் கெடத்தினுன்!' என்று பாண்டியன்பிள்ளையின் மனம் குறை கூறியது. தொடர்ந்து பேய்களைப் பற்றியும், பிசாசுகளின் 'சொக்காரன்கள்' மாதிரி அலைகிற களவாணிப்பயல்கள் பற்றியும் அதுஎண்ணக்காற்றுடி பறக்க விடுவதற்கு ஏற்ற சூழ்நிலையும் காலமும் அப்போது அங்கே இருந்தன. திடீரென்று நினைவு வந்தவனுய் அவன் குரல் கொடுத்தான்.

'வே! தூங்கிட்டீரா? வந்து...! 'தூக்கமாவது மண்ணுவது' தூக்கம் எங்கேய்யா வருது? கொசுவும், குளிரும் சேர்ந்து மனுசனைப்பாடாப் படுத்துதே' என்று புலப்பத்தில் ஈடுபட்டான் காவல்காரன்.

'வந்து, இந்த வட்டாரத்திலே காசித்தேவன்னு ஒரு கொள்ளைக்காரன் பிரபலமாயிருந்தானே, அவனைப் புடிச்சிட்டாங்களா? இதைக்கேட்கத்தான் உம்மைக் கூப்பிட்டேன்' என்று பாண்டியன்பிள்ளை சொன்னுன்.

'காசித்தேவனையாவது பிடிக்கிறதாவது!' என்று கூறினுன் பலவேசம் அவன் குரலில் வியப்பும் ஒருவித மதிப்பும் கலந்திருந்தன.

'அவ்வளவு பெரிய ஆளா அவன்?'

'ஓ! ரொம்பப் பெரிய ஆசாமின்னு தான் சொல்லணும். அவனைப்பிடிச்சிடணும்—கட்டாயம் பிடிச்சே போடணும்னு கச்சை கட்டிக்கிட்டுத் திரிஞ்சவங்களுக்கெல்லாம் கடுக்கா கொடுத்துட்டு அலைகிறவனுச்சே அவன்!'

'நீரு அவனைப் பார்த்திருக்கீராவேய்?

'நான் பார்க்கலே. ஆனுல் அவனைப் பார்த்தவங்க பலபேரும் சொல்லியிருக்காங்க. எதுக்கும் அஞ்சாத சிங்கமய்யா அவன்...'

'மூன்னலே சம்புலிங்கம், சம்புலிங்கம்னு ஒருத்தன் இருந்தானே, அவன் மாதிரியின்னு சொல்லும்!' என்ருன் பாண்டியன்பிள்ளை.

'சம்புலிங்கமா! அட, அவன் ராசா இல்லே. அவனுக்குப்பிறகு எவன்யா இந்தச்சில்லாவிலே அப்படி 'செயம் செயமி'ன்னு போட்டு அடிச்சான்? அவன் மாதிரி ஆகணுமின்னு அப்புறம் ஒண்ணு ரெண்டு பேரு தலையெடுத்தானுக. ஆனு முடியுமா? காசித்தேவனும் செம்புலிங்கம் மாதிரிப் பேரெடுக்கணும்கிற ஆசையிலே தான் எல்லாம் செய்யருன்னு தோணுது...'

'இவன் பள்ளிக்கூடத்திலே படிச்சவன். படிக்கிறபோது, புஸ்தகத்தில் வந்த எதையோ படிச்சு மனசு மாறிட்டுதாம், எங்கோ ஒரு தேசத்திலே-சீமையிலேயோ எங்கேயோ-ஒருத்தன் இருந்தானும். நம்ம சம்புலிங்கம் மாதிரித்தான். பணக்காரனுகளைக்கொள்ளையடிச்சு ஏழைகளுக்கு உதவுறது. அவனைப்போலே தானும் வரணுமின்னு காசியும் கிளம்பிவிட்டானும். இப்படி நெடுகப் பிரஸ்தாபம்!'

'இருக்கும் இருக்கும்' என்று ஆர்வமாக பக்கபாட்டுப்பாடினுன் பலவேசம்.

அந்த வட்டாரத்திலே திடீரென்று தோன்றி, குறுகியகாலத்தில் எல்லோர் கவனத்தையும் கவர்ந்தவன். காசித்தேவன். சிறு சிறு திருட்டுக்களில் ஆரம்பிக்காமல், எடுத்த எடுப்பிலேயே பெரிய இடங்களில் கொள்ளைஅடித்துப் பணமும் புகழும், பெற்றவன்...கல்யாணத்துக்குச் சென்று கொண்டிருந்த வண்டிகளை மறித்து, வண்டிகளில் இருந்த பெண்களிடமுள்ள நகைகள் பூராவையும் திருடிவிட்டான்....வல்லநாட்டு மலையடிவாரத்தில் ரஸ்தாவோடு போன சர்வீஸ் பஸ்ஸை வழிமறிச்சு அமைதியாகக் கொள்ளையிட்டான். பட்டப்பகலில். நடுரோடு. அவன் பயமே இல்லாமல் வந்து துப்பாக்கியை நீட்டினுன். டிரைவர் என்ன செய்வான்? பேசாமல் காரை நிறுத்திவிட்டான். காசி ஒவ்வொருவரையும் க்ஷேமம் விசாரிப்பதுபோல், கேட்டு எல்லாவற்றையும் கறந்து விட்டான்..."

வல்லநாட்டு மலைக்குகையிலேதான் காசித்தேவன் வசிக்கிருன் என்று பலரும் நம்பினுர்கள். அங்கு போலீஸ் வீரர்கள் முற்றுகையிட்டார்கள். காசியையோ, அவன் ஆட்களையோ பிடிக்க முடியவில்லை...அங்கிருந்து ஆதிச்சநல்லூர் பரம்புகளுக்குப்போய்

'வரன்' அருள்வாய்!

விடுவான். அங்கே பதுங்கிக்கிடக்க அருமையான இடம் உண்டு.

கலெக்டர் துரை காரையே மறிச்சு நிறுத்தினவன். அவன் 'ஓகோ, நீங்க தான்கலெக்டர் துரையா?ஸலாம்,ஸார்! அதுக்காக நான் என் தொழிலைச் செய்யாமல் இருக்கலாமா? எடுங்க ஸார் பணத்தை!' என்று கையை நீட்டினான். இன்னொரு கையில் துப்பாக்கி. துரை என்ன செய்வாரு? பேசாமல் பணம், கைக்கடிகாரம் எல்லாத்தையும் எடுத்துக் கொடுத்திட்டாரு. 'சந்தோஷம் ஸார்! நீங்க உங்க ஆபீஸ் சேர்ந்ததும் உங்க 'டூட்டி'யை செய்யலாம். என்னைப்பிடிக்க ஆட்களை அனுப்புங்க' என்று சொல்லிச் சிரித்தான் காசி. பிறகு, 'ரிசர்வ்' போலீஸ் நிறையவே வந்தது. என்ன பிரயோசனம்? காசி எங்கே மறைந்து விட்டானோ, யாருக்குத் தெரியும்?...

இத்தகைய கதைகள் நிறைய உலவின சுற்றுப்புறங்களிலே. காசித்தேவன் ஒரு வீரபுருஷனாகவே கருதப்பட்டான். கிராம மக்களால் அவன் பெயர் அந்தப் பிரதேசத்தில் பயத்தையும், பக்தி என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு மரியாதையையும் எழுப்புகிற மந்திரமாகத் திகழ்ந்தது.

பாண்டியன் பிள்ளையும் பலவேசமும் இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் பேசிப்பரிமாறிக் கொண்டார்கள். தூக்கம் கண்களைச் சொருகவே, தானாகவே தம்மை மறந்து துயிலில் ஆழ்ந்து விட்டார்கள்.

எங்கும் பயங்கரமான அமைதி. கொசுக்களின் ஓயாத கீதமும், மதகு நீரின் 'தட தட' ஒலியும் இரவின் பயங்கரத்தை அதிகப்படுத்தவே உதவின. இருளில் எங்கோ குடியிருந்த ஏதோ பூச்சிகள் எல்லாம் விபரீதமான ஒலிகளை எழுப்பியவாறு இரவுக்கு ஆராதனை செய்து மகிழ்ந்தன. காற்று, குடிவெறியனைப் போல் சீட்டி அடித்துக்கொண்டு தள்ளாடியது.

'விடிவதற்குக் கொஞ்ச நேரமே இருக்கும்' என்று தோன்றிய போது பாண்டியன்பிள்ளை விழித்தெழுந்தான்.

'என்னய்யா அதுக்குள்ளாறே எழுந்திரிச்சிட்டீரு?' என்று பலவேசம் கேட்டான்.

'பொடி நடையாக நடந்து போக இந்த வேளை தான் சுகமாக இருக்கும்.' என்றான் வழிப்போக்கன்.

'வழியிலே எங்காவது காசித்தேவன் பதுங்கி நிற்கப்போகிறான் வேய்! சாக்கிரதை!' என்று பாதி விளையாட்டாகவும் பாதி மெய்யாகவும் எச்சரித்தான் காவல்காரன்.

நிக்கட்டுமே! நின்னால் தான் என்ன?...கும்பிடு வருது அண்ணாச்சி! மடியிலே கனமிருந்தா நான் இப்படி வருவேனா தேவரே? உம்மிடம் காசு இருந்தால் பலகாரச் செலவுக்கு; ஏதாவது கொடுமின்னு கேட்பேன். எனக்கு ஏங்கேன் பயம்?; என்றான் பாண்டியன்பிள்ளை.

பலவேசம் சிரித்தான். 'சரியான ஆளய்யா நீரு...ஆமா- அப்படி நீரு கேட்டால் காசித்தேவன் என்ன செய்வான்னு நெனைக்கீரு?' என்றான்.

இதற்கு பாண்டியன்பிள்ளை பதில் சொல்லவில்லை. அவனுக்கு முந்திக் கொண்டு, .'மடியிலே காசு இருந்தால் காசி கட்டாயம் கொடுத்திடுவான். ஆமா. கண்டிப்பாகக் கொடுப்பான்' என்ற திடமான பதில் கொடுத்தான் மற்றொரு மூலையில் கிடந்தவன்.

அவன் எழுந்து உட்கார்ந்திருந்ததை அப்பொழுது தான் பலவேசம் கவனித்தான். அவன் பேச்செடுப்பதற்கு முந்தி, புதிய நபரே தொடர்ந்து பேசினான்.

'ஒருவனுடையபலவீனம்' இன்னொருவனுக்கு அதிக பலம் அளிக்கிறது. பலபேருடைய பக்தியும் கும்பிடும் தான் ஒரு மனுசனை மற்றவர்களைவிடப் பெரியவனாகவும் சக்தி மிகுந்தவனாகவும் ஆக்கிவிடுது. நமது கோழைத்தனம் எதிரிக்கு அதிகமான பலம் கொடுக்கிற கருவியாகும். உண்மையிலே காசித்தேவன் சாதாரணமான ஆள்தான். ஜனங்களின் பயந்த சுபாவமும் மரியாதை நிறைந்த பண்பும் தான் அவனைப் பெரிய சூரனாகப் பேரெடுக்கும்படி செய்து விட்டன...'

'உமக்குக் காசித்தேவனை தெரியுமோ?' என்று, சற்றுக் கோபமாகவே கேட்டான் பலவேசம்.

மற்றவன் சிறிதுநேரம் மௌனமாக இருந்தான். அவன் விரல்கள் மடியைத்துழாவின. உலர்ந்திருந்த வெற்றிலையையும் வேறு சில பொருள்களையும் வெளியே எடுத்தன.

அவன் எழுந்து, பாண்டியன்பிள்ளை அருகே போனான். 'இந்தாரும் வே! இதைப் பிடியும். இப்போ என்கிட்டே ஒரு ரூபாதான் இருக்கு. நீரு வயிறு முட்டப் பலகாரம் சாப்பிடும்...நான் தான் காசித்தேவன்...'

இதற்குள் பலவேசம் வெளிக் கதவை திறந்து வைத்திருந்தான். எனவே, காசி மேற்கொண்டு அங்கே நிற்காமல் வேகமாக வெளியேறுவதற்கு வசதியாக இருந்தது.

பாண்டியன்பிள்ளை அவன் போன திசையையே பார்த்தபடி வாய்பிளந்து நின்றான்!

'அடாடா! எழவெடுத்த லயிட்டு அணஞ்சி போயிட்டுதே! வெளிச்சம் இருந்தா, தேவரு முகத்தை நல்லாப் பார்த்திருக்கலாமே!, என்று பலவேசம் வருத்தப்பட்டான்.

'நாம ராத்திரிப்பேசியதை எல்லாம் கேட்டுக்கிட்டே கிடந்திருக்காரே. அவரு பெரிய ஆளுதான்!' என்று முணுமுணுத்தான் பாண்டியன்பிள்ளை.

பலவேசம் முனங்கினான், 'தங்கமான மனசு அவருக்கு!' என்று.

விசன கவிதை!

சின்ன சந்தேகம்!

'நண்பா!
வீட்டுக்கு வந்திடு, விருந்தினைக் கொண்டிடு'
என்றனே. ஆஹா! இனித்தது; வந்தேன்.
பாயசம். வடை பலப்பல கறிகள்
கண்டேன். உண்டேன்!

அன்றிரவு.
அய்யகோ, அடியேன்
வயிற்று வலியின் வேதனை தன்னை
எல்லைப் படுத்த சொல்லே இல்லை!
ஓயா வேதனை!
ஓயாத் துன்பம்!
ஓடினேன் டாக்டரிடம்!
கொடுத்தார் மருந்து; குத்தினர் ஊசி!
கரைந்தது பத்துக் காகித ரூபாய்.
முன்பொரு நாள்.
கடனாக நீயே உடனே கேட்டாய்.
'இல்லை' என்றேன்.
இல்லாத நானே!
அதற்குப் பழியோ,
ஐந்துக்குப் பத்து ஆக்கிய செலவு?

துப்பறியும் கதை:

துளசிங்கம் துப்பறிகிறார்!

புதுமைச்சித்தன்

கணகணத்தது டெலிபோன் மணி. திடுக்கிடும் சம்பவங்கள் மலிந்த, மேனாட்டு பயங்கரக் கொலைநாவல் ஒன்றில், அதி சுவாரஸ்யத்துடன் லயித்திருந்த துப்பறியும் நிபுணர் துளசிங்கத்தின் செவிகளை வண்டுபோல் குடைந்தெடுத்தது, டெலிபோன் மணியின் ரீங்காரம்!

நாவலைக்கீழே வைக்க மனமில்லை. பச்சை இரத்தத்தைப் பரிமாறச் செய்யும் பயங்கரக்கொலை; பக்குவமாக நடக்கும் கட்டம்; கதையின் ஆத்மா! டெலிபோன் செய்தியை விடவும் மனமில்லை! கொலை, கொள்ளை விஷயமாகத் துப்புத் துலக்க வரச்சொல்லும் அழைப்பாக இருந்தால்? தொழிலுக்கும் புகழுக்கும் அஸ்திவாரமாயிற்றே!

ரீங்காரம் தொடர்ந்தது!

அரை மனதுடன் பக்கத்தின் மூலையை மடித்து புத்தகத்தை மூடி மேஜைமேல் போட்டார். ரிஸீவரைக் கையிலெடுத்தார். "ஹலோ... ஹலோ..." என்றார்.

"உஸ், அப்பாடா! தொண்ணூற்று நான்கு!"

"தொண்ணூற்று நான்கா? என்ன அது?"

"உங்களுக்குப் ஃபோன் பண்ணி, 'ஹலோ-ஹலோ' என்று தொண்ணூற்று நான்கு தடவை அலறியாகி விட்டது. இந்த இரண்டு ஹலோக்களையும் சேர்த்துக்கொண்டால், 'நைன்ட்டிஸிக்ஸ்!' அதாவது தொண்ணூற்று ஆறு!"

இனிமைக்குப் பஞ்சமில்லாத இளம் பெண் குரல்! 'குரலுக்குடையவள் இருபது வயதுக்குட்பட்டவளாகவே இருக்க வேண்டும்!'-துப்பறியும் மூளை, துரிதமாகக் கணக்குப் போட்டது.

"த்ஸோ...மன்னிக்க வேண்டும்; கொஞ்சம் பிஸி!"

"ம்...யார் பேசுவது?"

"நான்தான்!"

"நான்தான் என்றால்? எங்கள் வீட்டில் 'டெலிவிஷன்' இல்லை சார்!"

"நீங்கள் யாருடன் பேசவேண்டும், அம்மணி?",

"து-து!"

"என்ன காரித்துப்புகின்றீர்கள்?"

"துப்பவில்லை; து-துவுடன் பேச வேண்டுமென்றேன்!"

"து-துவுடனா?...ம்...யாரது?"

"துப்பறியும் நிபுணர் துளசிங்கம் என்று நீட்டி முழக்குவானேனென்பதால் துப்பறியும் என்பதில் ஒரு 'து'வையும், துளசிங்கம் என்பதில் மற்றொரு 'து'வையும், வெட்டிச்சேர்த்து விட்டெறிந்தேன் உங்களிடம், 'து-து' வென்று!"

"ஓஹோ! அப்படியா?" என்ற துப்பறியும் நிபுணர், 'மகா குறும்புக்காரி போலும்!' என்றெண்ணிக்கொண்டார்.

"நீங்கள் யார்?"-அவள் கேள்வி.

"நான்தான் நீங்கள் பேச விரும்பும் 'து-து'!"

"அடே! நிஜமாகவா?"

"ஆமாம்!"

"நமஸ்காரம், துப்பறியும் நிபுணர் சார்!"

"நமஸ்காரம்...நீங்கள் யார்? பெயரென்ன? எந்தத் தெரு? ஏன் அழைத்தீர்கள்? என்ன விசேஷம்?"

"இப்படிக் கேள்விகளை வீசினால்? ஒவ்வொன்றாய்க்கேள்விகளை வீசுங்கள் சார்!"

"சரி... உங்கள் பெயர்?"

"வல்லி!"

"வெறும் வல்லியா? அல்லது கலாவல்லி, கமல்வல்லி, காதல்வல்லி, காமவல்லி என்பதுபோல், ஏதாவது...!"

"ஆமாம்; கதாவல்லி!"

"தொழில், கதை எழுதுவதோ?"

"இல்லை, கதை படிப்பது!"

"கதை எழுதுபவர்கள்தான் புனை

கொலையைத் துலக்கச்சென்றவர் நிலை குலைந்து சிலையானார்!

பெயர் வைத்துக்கொள்வது வழக்கம்; கதை படிப்பவர்களும் புனைபெயர் சூடிக்கொள்வதை இன்றுதான் கேள்விப்படுகிறேன்!''

"என் பெயர் வல்லி! கதை படிப்பதில் அபாரப் பிரியம். அதனால், கதா வல்லி என்று வைத்துக்கொண்டேன். கதை எழுதுபவர்கள்தான் புனைபெயர் சூடிக்கொள்ள வேண்டுமா? ஒரு புதுமை! கதை படிப்பவர்களும் புனைபெயர் சூடிக்கொண்டால் ஆகாதோ?''

"ஏன் ஆகாது?...ம்...ஏன் அழைத்தீர்கள்?''

"ஒரு கொலை!''

"ஐயோ!'' திடுக்கிட்டார் துப்பறியும் நிபுணர்! அவள் குரலில் பதட்டமிருந்தது. அவர் கோபத்தால் கொதித்தார், கிண்டலும் கேலியும் பேசிவிட்டு சாவகாசமாகக் கொலைச்செய்தியைச் சொல்கிறாளே என்பதால்!

"கொலையா?'' மீண்டும் கேட்டார். மனம் சந்தேகத்தைப் பூசிக்கொண்டது. ஏதாவது 'கலை' என்பதற்குப் பதிலாகக் 'கொலை' என்று நாக்குழறி உச்சரித்து, சொல்லைக் கொலை செய்துவிட்டாளோ என்ற சந்தேகம்!

"ஆமாம், கொலைதான்!''

"நிஜமா?''

"நிஜந்தான் சார். பயங்கரக்கொலை, படுகொலை சார்!''

"எங்கே? எப்பொழுது? யாரால்?''

"நேரில்வந்தால் நலமாக இருக்கும்!''

"ம்...''

"போலீசைக் கூப்பிட்டு குழப்பிக் கொள்ளும் உத்தேசமில்லை!''

"ம்...தெரு பெயர்?''

"ஆஞ்சநேயலு வீதி; மாருதி பில்டிங்ஸ்!''

"நீங்கள் ஹனுமான் உபாசகரா?''

"இல்லை, சார்!''

"வீட்டின் இலக்கம்?''

"முப்பத்தாறு!''

"உடனே வருகிறேன், அம்மணி!''

"மிக்க சந்தோஷம்...மெத்த நன்றி!''

'காதலுக்காகக் கொலை நடந்திருக்கிறது போலும்!' என்றெண்ணிக் கொண்டே உடையணிந்தார். சூடாக ஒரு தம்ளர் 'ஸ்டிராங்' டீயை உள்ளே ஊற்றிக் கொண்டார். சிகரெட்டைப் பற்றவைத்தார். 'ஸ்ட்ராங் டீ'யும், சிகரெட்டும் இல்லையென்றால், துப்பறியும் நிபுணரின் மூளை வேலைநிறுத்தம் செய்துவிடும்!

கைத்துப்பாக்கி, மூக்குக் கண்ணாடி, பேனா, டைரி, காமரா, சிகரெட் பாக்கெட், தீப்பெட்டி சகிதம் புறப்பட்டார். அவரைச் சுமக்க நேர்ந்த மோட்டார் சைக்கிள், 'டப-டப' வென்று வீறிட்டலறியது!

ஆஞ்சநேயலு வீதி! 'மாருதி பில்டிங்ஸ்' என்ற எழுத்துக்களும், கதவில் பளிச்சிட்ட எண் முப்பத்தாறும் அவர் பார்வையில் மோதின. இறங்கினார்.

'இந்தப் பங்களாவில் இருப்பவர் இராமதூத பக்தராக இல்லாவிட்டாலும், இதைக் கட்டியவனாவது நிச்சயம் இராமதூதனாக இருக்க வேண்டும்; இல்லாவிட்டால், ஆஞ்சநேயலு வீதியில் வந்து மாருதி பில்டிங்ஸை ஏன் கட்டவேண்டும்?'-விசித்திரமாக எண்ணியது மனம்!

* * *

பங்களாவின் நுழைவாயிலை நோக்கி நடந்தார். நல்லவேளை; அங்கு, 'நாய்கள்-ஜாக்கிரதை' என்று பங்களா சம்பிரதாயப்படி பயமுறுத்தல் பலகையோ, அல்லது நிஜமாகவே பயமுறுத்தித் தொலைக்க நாய்களோ, காணப்படவில்லை! ஒருவேளை, ஆஞ்சநேயலு வீதி 'மாருதி பில்டிங்ஸ்' என்ற திருநாமங்களுக்கேற்ப, நாய்களுக்குப் பதில் இரண்டு குரங்குகளையே கட்டிப்போட்டிருப்பார்களோ என்ற ஐயம்! சந்தேகப் பார்வை, எங்கும் சல்லடையாகச் சலித்தது. அப்படியெல்லாம் எதுவுமில்லை!

நுழைவாயிலைக் கடந்து பங்களாவை நோக்கி நடந்தார்; நாற்புறமும் விழிகள் சுழன்றன, பிரமாண்டமான மஞ்சள் நிறக் கட்டிடம்; பம்பாய் 'மோஸ்தர்.'

'துப்பறியும் நிபுணரை 'போன்' செய்து துரிதமாக வரச்சொன்னவர்கள், அவரை வரவேற்க வாயிற்படியில் துடித்து நிற்கவேண்டாமா? தூங்குமூஞ்சிகள்! தூசிகள்! துப்புக்கெட்டதுகள்!' என, வரவேற்க யாருமில்லாததால் கொதிப்படைந்த அவர் உள்ளம் மோனை முத்தமிழிலேயே திட்டிக்கொண்டிருக்கையில், "வந்துவிட்டீர்களா?'' என்ற குளிர் இசைக்குயில் குரல், கொதிப்பை ஆற்றிக்குளிரவைத்தது!

எதிரில் நிற்கும் எழிலாளைப் பார்த்தார்!

குரலைக் கொண்டே 'இளவயது' என்று, அவர் கணக்குப் போட்டது தவறவில்லை. பதினெட்டு வயது தான்! செல்வநிலையும், பருவ மலர்ச்சியும், அவள் மேனியழகைப் புத்தம் புதுவெள்ளி நாணயம்போல் பளபளக்கச் செய்தன! வானத்து முழுநிலவும் வண்ணத்தாமரையும் ஒன்று சேர்ந்து பெண்ணுருப் பெற்று வந்ததுபோல் ஒளிர்ந்தாள்!'இதைப்போல் ஒரு பேரழிக்காக, ஒருவன் ஒரு கொலை என்ன, ஒன்பது கொலைகூடச் செய்வானே!'-பேரழகைக் கண்டு பெருவியப்படைந்த நெஞ்சைத்தொட்டுவிட்டுச் சென்ற இந்த எண்ணத்தை தூரமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு, "நீங்கள் தான்?" என்று இழுத்தார்.

"ஆமாம்...நான் தான் போனில் பேசியவள்!"

"அதாவது...கதாவல்லி! இல்லியா?"

"ஆமாம், சார்!"

நடந்தனர் இருவரும். பங்களாவினுள் ஆள் அரவமே கிடையாது. கொலை

நிகழ்ச்சியை ஊர்ஜிதம் செய்வதுபோல் பயங்கர மய்மான மௌனம் நிலவியது. உயர்ந்தரக சோபாக்களும், மேஜை நாற்காலிகளும் நிறைந்த விசாலமான ஹால்; அங்கு துப்பறியும் நிபுணரை ஒரு சோபாவில் அமர்த்திவிட்டு. அவள் மாடியை நோக்கித் தாவியோடி மறைந்தாள்! அவர் 'ஹாலை'ச் சுற்றி நோட்டம் விட்டுக்கொண்டிருந்தார். மறைந்தவள், விரைவில் மீண்டும் தோன்றினுள், வெறுங்கையுடன் அல்ல; உயர்ந்தரக மேனுட்டு பிஸ்கோத்து களும் தேநீரும் கொண்டதொரு பெரிய வெள்ளித்தாம்பாளத்தை ஏந் தியவாறே! அதை அவர் முன் வைத் தாள்; "சாப்பிடுங்கள்" என்ருள், எழில் குலுங்கும் அந்தக் கதாவல்லி.

"என்ன இது?"–அவர் கேட்டார்.

"சிற்றுண்டி!"–அவள் சொன்னுள்.

"இப்பொழுதா இதற்கு அவசரம்? முதலில் கொலையை...!"

"வந்த களைப்புத் தீரட்டும் முதலில்!"

'இதமறிந்த பெண்!' என்று மனதிற் குள் பாராட்டிக்கொண்ட அவர், "உங் கள் பெற்ருேர்கள் இல்லையா?" என்று பிஸ்கோத் ஒன்றைச் சுவைத்தவாறே கேட்டார் துப்பறியும் நிபுணர் துளசிங் கம்.

"வெளியூர் சென்றிருக்கிருர்கள்!"

"வேலைக்காரர்கள்?"

"எங்காவது மறைவாகத் தூங்கிக் கொண்டிருப்பார்கள்!"

"ம்...சமையற்காரி?"

"இன்றுமட்டும் நான்தான் சமையற் காரி"

"ஏன்?"

"தன் மகனுக்கு உடம்பு சரியில்லை யாம்; அதனல், இன்று வர முடியா தென்று சொல்லிப் போய்விட்டாள், சமையற்காரி!"

"உங்கள் பெயர்?"

"அதைத்தான் ஃபோனில் சொன் னேனே!"

"ஆமாம்...வல்லி; இல்லை. இல்லை... கதாவல்லி!"

"ஆமாம்!" என்ற சொல், ரோஜா வின் மலர்ச்சியை ஒத்த புன்னகைக் கிடையில் உதிர்ந்தது. சிற்றுண்டி முடிக் தது. "சரி...வந்த காரியத்தைக் கவ னிக்கலாம்!" என்று, சிகரெட்டிற்கு அக்கினி வார்த்தார் துப்பறியும் நிபு ணர்.

"ஒரே நிமிஷம்...இதோ வந்துவிடு கிறேன்!" என்ற கதாவல்லி, மீண்டும் மாடிப்படிகளில் தாவி மறைந்தாள். அவள் பேச்சும் செய்கையும், அவருக்கு வியப்பாகவும் மர்மமாகவும் இருந்தன.

'கொலை, மாடியில்தானே!'

வியப்புகளும் மர்மங்களும், கொலை நிகழ்ச்சியில் பின்னிக் கிடப்பதற்குக் கேட்கவா வேண்டும்? மாடியை விட்டு அகலவில்லை, அவர் பார்வை! கொடி மின்னலைப்போல் அவர் முன் வந்து நின்ருள், கதாவல்லி. தன் கையிலிருந்த காகிதக் கற்றையை துப்பறியும் நிபுண ரிடம் கொடுத்தாள்.

"என்ன இது?" என்று கேட்டார் அவர்.

"இது ஒரு துப்பறியும் நாவலின் கையெழுத்துப்பிரதி. என் சிநேகிதி ஒரு பிரபல கதாசிரியை. இந்த நாவல் அவள் எழுதியது. இந்த நாவலில், மூன்று வில்லன்கள் வருகின்றனர். கதாநாயகியின் அழகிற்காகவும் 'ஐஸ் வர்ய'த்திற்காகவும், நேசிக்கிருர்கள். மூன்று வில்லன்களில் யாரோ ஒரு வில்லன், அவள் தந்தையைக் கொன்று விட, பழியும் கொலைக் குற்றமும் கதா நாயகனின் தலையில் விழுகின்றன. இத் துடன் கதை நின்றுவிடுகிறது. மூன்று வில்லன்களில் யார் கொலைகாரனென் பதைக் கண்டுபிடித்துச் சொல்லவேண் டும்! எனக்கும், என் சிநேகிதிக்கும் நூறு ருபாய் பந்தயம்; பணத்தைப்பற்றி கவலை இல்லை! கண்டுபிடித்துச் சொல்லவில்லையென்ருல், எனதுஇலக் கியத் திறனை, அவள் மிகத் தாழ்வாக எடை போட்டுவிடுவாளே! சாதாரண வாசகியாக இருக்கவும் நான் தகுதி யற்றவளென்று மதிப்பிட்டுவிடுவாளே! சார்..துப்பறியும் நிபுணர் சார், உங்கள் மனம்போல் சன்மானம் அளிக்கிறேன். சார்! தயவு செய்து நீங்கள் கதை முழு வதையும் கவனமுடன் படித்து, கொலை காரன் யாரென்று கண்டுபிடித்துச் சொல்லு...."

இதற்குமேல் அவள் – கதாவல்லி பேசியது-எதுவுமே துப்பறியும் நிபுணர் ஸ்ரீமான், துளசிங்கத்தின் காதில் விழ வில்லை. அவர்தான் மூர்ச்சித்து சோபாவில் சாய்ந்து கிடந்தாரே!

என் மனைவி

—நிலக்கோட்டை சங்கரசுப்பு—

1. பொங்கிவரும் பால்நிலவு!
புன்னகைக்கும் குமுதமலர்!
செங்கரும்புச் சுவைநிகர்த்த
சிற்றிடையாள் என் மனைவி.

2. முல்லை வனத்திடையே
மோதுகின்ற மென் தென்றல்!
கொல்லை தனில் பழுத்த
கொவ்வைக்கனி என் மனைவி.

3. பசும்புல் வெளிதனிலே
பாய்ந்தோடும் மான் குட்டி!
வசந்த மலர்வனத்து
வண்ணமயில் என் மனைவி.

4. அசைந்துவரும் பொற் சிவிகை!
அலை கடலின் வெண்முத்து!
இசைபாடும் பூங்குயிலி!
எழிலரசி என் மனைவி.

5. தித்திக்கும் மதுக் கிண்ணம்!
தெவிட்டாத தெள்ளமுதம்!
தத்தை மொழி பேசும்
தமிழ்க்குமரி என் மனைவி.

கவலையெல்லாம் மறப்பேன்!

—பரதூர் ராமு—

கன்னல் தரும் சுவையோ—உனது கன்னத்து முத்தச் சுவை
என்ன வென்று சொல்வேன்—என்னன்பே உன்னிதழின் சுவையை!

மின்னல் தரும் ஒளியோ—உனது கண்கள் தரும் ஒளியும்
பொன்னிறம் போன்றதடி—செல்லம்மா மின்னிடும் உன் மேனி!

இன்னல் எலாம் நீக்கி—மனதின் இருளெலாம் போக்கிடுமே;
என்னிற மானாலும்—எனக்கே இன்னுயிர் நீதானே!

நிலவு தரும் குளிர்ச்சி—உனக்கு நிகர் என்றும் ஆகாதடி!
உலகத்தில் என் மகிழ்ச்சி—செல்லம்மா உன்னருகில் இருத்தல்!

நெஞ்சு கலந்தாள்!

— புதுமதியன் —

அல்லிக் குளத்தருகே—சென்றுநான்
அந்தியிலே இருந்தேன் ;
மல்லிகைப் பூவிரிந்தே—தென்றலில்
மண்டும் மணம் நுகர்ந்தேன்!

வட்ட நிலவுதித்தே—மெல்லக்கீழ்
வானில் எழும்புகையில்
மெட்டி குலுங்கிடவே—அங்கேயோர்
மின்னல் வருகை கண்டேன் !

கெண்டை விழியிரண்டும்—துள்ளியே
காதுடன் வாது செய்யும்!
சண்டை நிறுத்தியபின்—என்னுடன்
சரசமாடினவே !

கட்டில் அடக்கி வைத்த—மார்பின்மேல்
கண்கள் எனதிரண்டும்
பட்டுத் திரும்பியபின்—மீண்டும்
பாவை முகம் நாடும்!

கொஞ்சும் அவள் விழிகள்—கூறுமோர்
கொள்கை புரிந்து கொண்டேன் !
நெஞ்சங் கலந்து சில—வார்த்தைகள்
நேர்ந்து களித்திருந் தேன் !

சுட்டுவிரல் முனையால்—சேலையைச்
சுற்றித் தலைகுனிந்தாள் !
ஒட்டுக் கனியவள் தான்—எனக்கே
என்று களித்திருந் தேன் !

வேலின் விழிகளினல்—என்மன
வேட்கை கிளறிய பின்
காலின் விரல்களினல்—நிலத்தைக்
கன்னி கிளறி நின்ருள் !

வட்ட முகக் குளத்தில்—புன்னகை
வாசமலர் விரித்தாள் !
தொட்டிழுத் தேயணைத்தேன்—கொஞ்சமும்
தோகை மறுக்க வில்லை !

துன்ப அலைகளில்லா(து)—உள்ளதோர்
தூயவாழ் வேரியிலே
இன்பக் கொலுவிருந்தே—ஊர்ந்திட
ஏறும் படகானுள் !

சிட்டுக ளாகிநின்ருேம்—இன்பத்தைச்
சேர்ந்து நுகர்ந் திருந்தோம் !
ஒட்டி உயிர் வாழும்—அன்றிலாய்
ஒன்றிக் களித் திருந்தோம் !!

சொல்க அத்தான்!

— ஷேரலி —

அவள் :

மாலைதன் வேளை தன்னில்
மங்கையர் பலரி னோடு
வாலைநற் பருவத் தாள் நான்
வைகையின் ஓரம் செல்ல
சாலையின் பண்டம் கொத்த
சரிந்ததான் வரும்ப ருந்தாய்
வேலிது பாலோர் நாரை
வந்ததேன் சொல்க அத்தான் !

அவன் :

அந்தநாள் அடியேன் சொன்ன
அழகுசொல் 'கேலி' என்றாய் !
இந்தநாள் 'சொல்க அத்தான்'
என்றுநீ சொல்லு கின்றாய் !
உந்தனின் கண்ணை நாரை
'உயிர்க்கயல்' என்று நம்பி
உந்தன்பால் வந்தி ருக்கும்
உணர்ந்திடு எந்தன் கண்ணே !

அவள் :

தங்களின் வரவிற் காக
தாளெலாம் நோக நானும்
அங் கொரு சோலை தன்னில்
அயற் வொடு நின்றி ருக்க
இங்கிதம் தெரிந்தி டாத
எழிலொரு தும்பி எந்தன்
செங்கனி இதழைக் கோதிச்
சென்றதேன், சொல்க அத்தான்?

அவன் :

தேன்துளி மிகவும் ஊறிச்
சிதறிடும் உதடு தன்னில்
காந்தமும் கலந்து வைத்துக்
கவர்ந்தனை என்னை என்க
ஏன்கவி பாடு கின்றீர் ;
இவைகள்வீண் புகழே' என்றாய்!
சென்றஅத் தும்பி என்சொல்
சரியெனப் பார்த்த தன்பே !

சிறைப் பறவை!

— நாதன் —

மொட்டல்ல; மொட்டல்ல; முத்தமிழாள் இன்று,
மோகனப்பெண் ணுகிவிட்டாள் மலர்ந்ததுவே பெண்மை!

சிட்டெனவே சிறகடித்துப் பறந்ததொரு காலம்;
சிங்காரப் பருவத்தில் சிறைப்பட்டாள் அன்று!

வட்டமிட்ட தோழியர்கள் வரமாட்டார், மற்ற
மனமொத்த வெளியுலகை மறக்கவேண்டு மன்னுள்!

கட்டுண்டு காவலிலே இருக்கவேண்டு மென்றே,
காரிருளில் தள்ளிவிட்டார் காரணங்கள் இன்றி!

சிறகடித்துப் பறந்தகிளி சிக்கலிலே வீழ்ந்து;
சிந்தனையில் இன்பக்கனு சிறிவரத் தன்னே,

பிறருடனே ஒப்பிட்டுப் பார்த்திடுவாள் நித்தம்;
பிறிவரும் சோகமதில் வருந்திடுவாள் சித்தம்!

...'உறங்குவதும் உண்பதுமே உனக்கொத்த'...தென்றே,
உற்றவர்கள் செப்பிவிட்டார் உலகமதில் நன்று!

சிறந்ததொரு சுதந்திரத்தால் செகத்தினையே காண,
சிறகொடிந்த பறவையென அடைபட்டாள் கூண்டில்!

பருவமெனும் புதுமெருகும் பாவையிடம் மீற;
பகலிரவாய் கைதியைப்போல் அகச்சிறையில் சிக்கி,

வருபவரைக் கண்டுவாசல் கதவடைத்தே ஓட;
வாழ்க்கைதனில் இன்பமின்றி வறட்சிகொண்டாள் நாளும்!

சிறுவயதின் செயலெல்லாம் சிந்தனையைக் கீற;
சிறைபட்ட பைங்கிளியும் மனமுருகிக் கண்ணில்,

பெருகிவரும் நீர்த்துளியைப் பெற்றவர்கள் தானும்,
பொருத்துணரார் பூவைதனைப் பூட்டிவைத்தார், பாவம்!

பண்போடு வாழவேண்டிப் பழந்தமிழோர் செய்த;
பாகுபாடு இந்நாளும் இருக்குதிங்கே என்னே?

எண்ணற்ற பெண்களினம் இக்கதிக்குள் பட்டு,
இருக்கின்ருர், இத்ரையும் உணராத வெட்கம்!

புண்பட்ட வாழ்வினின்று பூப்பதெப்போ இன்பம்?
புருஷனவன் வந்தால்தான் தீருமிந்தத் துன்பம்!

கண்கண்ட கணவனவன் வரும்வரையும் அன்னுள்
கன்னியிலே 'சிறைப்பறவை,' வீழ்ந்தகதி தானே!



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

IC 424

நகைச்சுவைக் கட்டுரை:

நாய் ஜாக்கிரதை

கே. ரகுபதி

நன்றி என்ற வார்த்தையைச் சொன்னவுடனேயே நமக்கு நாயின் நினைவுதான் வரும்! அந்தமாதிரி நாயின் உடன் பிறந்த குணமாக நன்றி இருக்கிறது என்பது 'ஐஸூம் மரத்தூளும் போல' இணைபிரியாத விஷயமாகும்.

தெரிந்தவரோ, தெரியாதவரோ, யாராக இருந்தாலும் சரி, ஒரு பிஸ்கோத்துத் துண்டைப் போட்டால் போதும், கண்டிப்பாக அந்த நாய் –அது தெரு நாயாக இருந்தால் கூட- நன்றியுடன் வாலை ஆட்டும்!

பகுத்தறிவு படைத்த மனிதன், செய்த உபகாரங்களை மறந்து விடுகிறான். வேலை தேடித் தந்தவரை, சில காலம் கழித்துக் கண்டால், தெரியாதவன் போலப் போய்விடுகிறான். வாங்கிய கடனை சொன்னபடி கொடுப்பதற்கு முடியாமல், குடையை ஒரு புறம் சாய்த்துக் கொண்டு, ஒளிந்து ஒளிந்து போய் விடுகிறான். ஏன்? எந்த மாணவனாவது, தான் படித்த உபாத்தியாயரிடம் பிற்காலத்தில் நன்றிதெரிவித்ததுஉண்டா?

இந்தக்குணமெல்லாம், ஐந்தறிவு மட்டுமே படைத்த நாயினிடம் இல்லை. எப்போதோ நீங்கள் ஒருவர் வீட்டுக்குப் போனபோது அங்கிருந்த நாய் முதலில் குரைத்து, பின்னர் அறிமுகமாகி இருக்கலாம். நீங்கள் அதை மறந்திருந்தால் கூட, அடுத்த தடவை பார்க்கும்போது - அது எவ்வளவோ நாட்களுக்குப் பின்னர் என்றாலும்கூட- ஞாபகம் வைத்துக் கொண்டு, வாலை ஆட்டி வரவேற்கும்!

சில வீடுகளில் - தப்பு, தப்பு - பங்களாக்களில் 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற பலகை வாசலில் இருக்கும். உண்மையில் அந்த வீட்டில் ஒரு நாய்க் குட்டி கூட இருக்காது! வீட்டு எஜமானர்தான் 'வள்' ளென்று வந்து விழுவார், ராஜபாளையம் மாதிரி!

நாய் இல்லையேஎன்ற குறைஅவர், குணம் மூலம்தீர்ந்து விடும்!

நாய்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம், தெரு நாய், வீட்டு நாய் என்று!

தெரு நாய் சுதந்திரப்புருஷன். "சத்திரா போஜனம், மடா நித்திரா" என்ற சொல்லிற்கிணங்க கண்ட இடங்களில் கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டு நடு ரோட்டிலே படுத்து ஆனந்த நித்திரையில் ஆழ்ந்திருக்கும்! சமயங்களில் பஸ் பூதமோ, லாரி யமனோ, கத்துக்குட்டி ஓட்டும் காரோ அவைகளை சிவலோகப் பிராப்திக்காளாக்குவதும் உண்டு! அல்லது நகராட்சியினரின் நாய் பிடிக்கும் வண்டியிலே வரும் வளையம் போட்ட கம்பிகளைக் கொண்ட கழிகளுடன் யமதூதர்கள் வந்து தூக்கிச் செல்வதும் சகஜமான விஷயமே!

'நாய்த்தூக்கம்' வேடிக்கையானது. எந்தெந்த சமயங்களில் விழித்துக் கொண்டுவிட வேண்டும் என்பது அவைகளுக்கு மிக நன்றாகத் தெரியும்! அதிலும்'லைசன்ஸ்'இல்லாத நாய்களைப் பிடிப்பதற்கென்றே வரும் நகராட்சியினரின் நாய்வண்டியையோ, அல்லது கூடவரும் யமகிங்கரர்களையோ மிகச் சுலபமாக அடையாளம் கண்டு கொண்டு பதுங்கி விடுவதில் நாய்களுக்கு இணையாக வேறு எதையுமே சொல்ல முடியாது!

அதனால்தான் நாய்களுக்கு மோப்ப சக்தி அதிகம் என்கிறார்கள் போலும்! அந்த மாதிரி மோப்ப சக்தி மனிதர்களுக்கு இருந்துவிட்டால் எவ்வளவு சௌகரியம்! தினமும் ஏதாவது எழுத

லாம் என்று உட்காரும் சமயம் பார்த்து தன் பிரதாபங்களை அளப்பதற்காகவே வந்து 'போர்' அடிக்கும் அடுத்த தெரு அண்ணாசாமி, தெருக்கோடியில் வரும் போதே தெரிந்து கொண்டு ஒளிந்து கொண்டு விடலாமே?

கொலை வழக்குகள், திருட்டுகள் முதலியவைகளுக்கு நாய்கள் ஆற்றும் பணி மகத்தானது; ஆச்சரியமானதும் கூட. கிடைக்கும் சிறு தடயத்தை தன்மோப்ப சக்தியால் ஆராய்ந்து எவ்வளவோ தூரத்துக்கு ஓடிவிட்ட குற்றவாளியை தேடிக்கண்டு பிடிப்பது என்ற-துப்பறியும் நிபுணர்கள்கூட திணறும் காரியத்தை-நாய்கள் செய்து முடிக்கின்றன. நாய்களில் இரண்டாவது வகை வீட்டு நாய்கள். அவைகள் சுதந்திரமற்றவைகள். இயற்கையின்தேவையை கவனிப்பதற்குக்கூடவீட்டு எஜமான் வெளியில் அவிழ்த்துவிடும் நேரத்தில்தான் முடித்துக் கொள்ள வேண்டும்! போடும் உணவைத்தான் உண்ண வேண்டும்.

தயிர்சாதமே போட்டு வளர்க்கப்படும் வீடுகளில் நாய்களும், அந்த புத்தியுடனேயே வளருகின்றன. அவை எஜமான விசுவாசம் என்ற நல்ல குணத்தோடு, இதர விஷயங்களிலும் சாதுவாகவே இருந்து விடுகிறது! யாராவது வந்தால்கூட குரைக்காது!

சில வீடுகளில் வாரத்திற்கொரு நாள் 'மிலிடரி' சாப்பாடு போடப்படும். அதற்கென்று தனியாக ஒரு பையன் போட்டு, ஏற்பாடுகள் விசேஷமாக நடக்கும். அது சைவர் வீடாக இருந்தால்! அந்தப் பையன் நாளுக்கு நாள் பருத்துப் போவான். நாய் மெலிந்தே இருக்கும்! காரணம் சொல்லவா வேண்டும்?

'அசைவர்' வீடாக இருந்து விட்டால் கவலையே இல்லை. நாய்களுக்கு வேட்டைதான். ரோசமுள்ளதாக, வேற்று மனிதர் வீட்டில் நுழைந்தால் தாவிப் பாய்ந்து ஒரு ராத்தல் சதையை கடித்து விடக்கூடிய, பௌருஷமுள்ளதாகஇருக்கும் சமயங்களில் வெறிபிடித்து, வீட்டு நபரைக் கடித்துக் குதறி விடுவதும் உண்டு.

'நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், அது வாலைக் குழைத்துக் கொண்டு குப்பை மேட்டையே நாடும்' என்று, விசுவாசம் காட்டாத நாயினால் தான் பழமொழி ஏற்படுத்தி இருக்க வேண்டும். திருடர்கள் சமயங்களில் போடும் எலும்புத்துண்டை லஞ்சமாக ஏற்றுக்கொண்டு வீட்டு எஜமானன் வயிற்றைக் கட்டி, வாயைக்கட்டி சேர்த்து வைத்திருக்கும் சொத்தைக் கொள்ளையடிக்க உடந்தையாக இருந்து விடுவதும் நாய்கள்தான்! எல்லாமே அப்படியில்லை! மனிதரிலும் சிலர் நல்லவர்களாக இருப்பது மாதிரி, நாய்களிலும் சில விசுவாசமில்லாதவைகளாக இருந்துவிடுகின்றன. பேச்சு ஒன்றுதான் வரவில்லையே தவிர மற்றபடி மனித பாஷைகள் யாவையுமே நாய்கள் நன்றாகப் புரிந்து கொண்டு விடுகின்றன.

'சீ' என்ற சொல் நாய்க்குப்பிடிக்காத பதம். குரைக்கும் நாயைக் கண்டு ஓடாமல் தைரியமாக நின்று 'சீ' சொல்லி விட்டால் அவை நம்மைத் துரத்துவதுமில்லை; கடிப்பதுமில்லை!

இட்ட வேலையைத் திறமையாகச் செய்து முடிக்கிறது நாய். ஆங்கில 'சீரியல்' படங்களில் 'ரெக்ஸ்' என்ற குதிரையுடன் 'ரின்டி' என்ற நாய் செய்யும் சாகசங்களை நாம் பார்த்திருக்கிறோம். ஏன்? சமீபத்தில் சில தமிழ்ப் படங்களில் கூட நாய்கள் நன்றாக நடித்தன!

ரஷ்யா விட்ட செயற்கைச் சந்திரனில் பிரயாணம் செய்து உயிர்த் தியாகம் செய்த 'லைகா' என்ற நாய், அந்த இனத்துக்கே ஒரு பெருமையையும் புகழையும் வாங்கித் தந்து விட்டது. இவ்வளவு ஜீவராசிகள் இருக்கும் போது நாயைத் தேர்ந்தெடுத்தார்களே, முதல் வானவெளி யாத்ரீகராக அந்தப் பெருமையை என்னவென்று சொல்வது?

குழந்தைகளுக்கு ஒரு நல்ல பொழுதுபோக்கு, நாய். அவைகளைப் பொறுத்த வரையில் 'தோ, தோ' என்று கூப்

ரசம்!

"அடாடா! இந்தக் கதை எவ்வளவு ஸ்வாரஸ்யமா இருக்கு தெரியுமா!"

கணவன்: ? ? ?

பிட்டு நாயும் தன்னுடன் ஆவலாகச் செய்த ரஸம் சாதத்தையோ, பருப்புஞ் சாதத்தையே பங்கு கொள்வதையே பெரிதும் விரும்புகின்றன. தெரு நாய்கள் இந்த மாதிரிக் குழந்தை நண்பர்களால்தானே பெரும்பாலும் வயிறு வளர்க்கின்றன?!

மேல் நாட்டு ஸ்திரீகள்ஒரு நாய்க்குட்டியை கையில் வைத்துக் கொண்டிருப்பதையே நாகரிகமாகவும் பெருமையாகவும் கருதுகிருர்கள். நல்லவேளை அந்த நாகரிகம் நம் பெண்களுக்கு வந்துவிடவில்லை! அப்படி வந்தால் ஒரு பெண் நாயை வைத்துக்கொண்டு வீதியிலே நிற்க, அந்த நாயைப்பற்றி புகழ்ந்து பேசியே அவள் காதலை ஒரு வாலிபன் பெற்று விட்டதாகக் கதைகள் சட்டென்றுஆரம்பித்து 'பட்'என்று முடியும் பத்திரிகைகளில் வந்து விட்டதா?

பிரசவவைராக்யம்,ஸ்மசான வைராக்யம் என்றுகூட வேடிக்கையான ஒரு விஷயம் சொல்வார்கள் பெரியவர்கள். இனிஎச்சல் இலையைத்தொடுவதில்லை என்ற வைராக்கியத்துடன் மோனத் தவத்தில் ஆழ்ந்திருக்கும் தெரு நாய், 'தொப்' பென்ற சப்தம் கேட்டவுடன் ஓடிப்போய் இலையில் விழுந்து புரண்டு விட்டு, யதாஸ்தானம் திரும்பி வந்ததும், 'அடடா, நாம் தவறு செய்துவிட்டோமே, இனி எச்சல்இலையைத்தொடுவதில்லை என்ற கொள்கையுடன் இருந்தோமே' என எண்ணி வருந்துமாம்.

கல்யாண வீட்டில் அத்தனை இலைகளையும் ஒரு கூடையில் எடுத்துவந்து குப்பைத் தொட்டியில் கொட்டுவார்கள். பெரிய நாய்கள் ஒரே பாய்ச்சலாகப் பாயும். ஒன்றுக்கொன்று சண்டை போட்டு கடித்துப் புரளும்! இந்த சந்தடியில் நோஞ்சானன நாய் ஒன்று நிதானமாக அந்த இலைகளை நக்கிக் கொண்டிருக்கும்!

"ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக் கொண்டாட்டமாம்" என்பது இந்த நாய்த் தத்துவத்தை ஒட்டி ஏற்பட்ட பழமொழியாகத்தான் இருக்க வேண்டும். அண்ணன், தம்பி தகராறில் கோர்ட் வரையில் போய் சந்தியில் நின்று 'மத்தியஸ்தம்'பண்ணுகிறவர்கள் சொத்தைச் சாப்பிட்டு விடுவதுபோல!

சில பெரிய மனிதர்களிடம் நமக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டுமானல், அவர்கள் வீட்டு நாயை 'காக்காய்' பிடித்தாக வேண்டும். அவர்களுக்கு மரியாதைக் குறைவாக நாம் நடந்து கொண்டால்கூட மன்னித்து விடுவார்கள்; அவர்கள் வீட்டு நாய்க்கு மதிப்பு துளி குறைந்தாலும் அனர்த்தம் தான்!

இதிலும் 'நக்ஷத்திர நாய்'களுக்கு மதிப்பு ரொம்ப அதிகம். பிரபல சினிமா நக்ஷத்திரம் வளர்க்கும் நாயைத்தான் சொல்லுகிறேன். அவளைத் தன் படத்தில் நடிக்க வைப்பதற்காக முனையும் படாதிபதி முதலில் அவள் வளர்க்கும் நாய்க்கு உயர்ரக பிஸ்கோத்தோ, வேறு ஏதாவதோ வாங்கிக் கொடுத்து சிநேகம் செய்து கொண்டாக வேண்டும்! நாயின் பூர்வஜென்மப் புண்ணியத்தை ஒத்தது அதுவளரும் இடம்! அது காரிலே சவாரி செய்து கொண்டு, "நாய்க்கு உடம்பு சரியில்லாவிட்டால் செட்டுக்கு வர முடியாது" என்று சொல்லும் நடிகையின் ஆதரவில் வளருவது அதன்அதிர்ஷ்டத்தைப் பொருத்தது.

ஒவ்வொரு வேளை உணவுக்கும் என்னசெய்வது என்ற வகையறியாமல் குப்பை மேட்டிலும், சாக்கடையிலும்

காலந்தள்ளி, அந்த நாய் வண்டியில் அடைபட்டுச்சாவது நாய்செய்தபாவம்!

மனிதனுக்கும் நாய்க்கும் தொடர்பு அதிகம். நாயிடம் அன்பு செலுத்துகிருன் மனிதன். மனிதனிடம் விசுவாசம் காட்டுகிறது நாய்!

ஒரு மனிதன் ஒரு அமானுஷ்யமான மலையடிவாரத்தில் இறந்து விட்டான். ஆனல் அவன் வளர்த்த நாய் அந்த எலும்புக் கூட்டின் அருகிலேயே நெடுநாள் அழுதுகொண்டிருந்தது - இந்த நிகழ்ச்சியைப் புத்தகத்தில் நாம் படித்திருக்கலாம்.

அன்ருட வாழ்க்கையில் நாயின் பெயர் அதிகம் அடிபடுகிறது. அந்த வகையில் மனிதன் சதா சுவானத்தையே ஸ்மரணை செய்து வருகிருன்.

"சீ நாயே" என்று குழந்தையைக் கொஞ்சுகிருேம். "கிடக்கிருன் நாய்ப் பயல்" "திறந்த வீட்டில் நாய் நுழைகிற மாதிரி நுழைந்து விட்டான்" "துளிக் கூட நன்றி இல்லாத நாய்" "நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைக்கிறபடி அவனுக்கு இந்த உதவியைச் செய்தேன்" — இப்படியெல்லாம் பேச்சுகளிலே "பைரவபூஜை" செய்தபடியே நம் அன்ருட வாழ்வு கழிகிறது!

அதோ தெருவிலே ஒருவர் நாயைச் சங்கிலியால் கட்டி இழுத்துக்கொண்டு போகிருர். வெள்ளையாக, அழகாக இருக்கிறது. அந்த மாதிரி நாமும் நாய் வளர்க்க வேண்டும் என்பது என் ஆசை. "ஐய, அது உள்ளெல்லாம் வந்துவிடும். வேண்டவே வேண்டாம்" என மனைவி கூச்சலிடுகிருள். அதனல் தாம்பத்யக் கலகம் வந்து "நாயும் பூனையுமாக" இருக்கிற நிலை வர நான் விரும்பவில்லை.

ஆகவே நாய்களைப் பற்றிய கட்டுரையை இத்துடன் கண்ணியமாக நிறுத்திக்கொள்கிறேன்! என்ன, நான் சொல்வது சரிதானே!

போன்: 88 தந்தி: VEEVEEYES

வே. வ.

சண்முக நாடார் & சன்ஸ்

விருதுநகர்.

★

எங்களிடம் தயாராகிற
நயம் நல்லெண்ணை,
நயம் உளுந்து, துவரம்
பருப்புகளை
வாங்கி உபயோகியுங்கள்.

ASP

சிக்கரி கலந்த
காப்பித் தூள்

★

தயாரிப்பாளர்:

A.S.P. அய்யம்பெருமாள் நாடார்,
விருதுநகர்.

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணுடி சாமான்கள், பீங்கான், எனுமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதருஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR .... P.T. MADRAS.

BAROO/-

கிளை ஆபீஸ் : 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்—3.
7, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண பீடிகள்

P.R. ஆறுமுகநாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

நெடுங் கதை :

மனத்தட்டு

[**கதை பிறந்த கதை:** டாக்டர் நிரஞ்சனனை உங்களுக்குத் தெரிந்து இருக்காதுதான். பெற்ற பட்டங்களுக்கு வட்டி போட்டு முதல் எடுக்கும் மருத்துவர்கள் நிறைந்துவிட்ட இந்தக்காலத்திலே, டாக்டர் நிரஞ்சனன் ஒரு தனிப்பிறவி! பயங்கரமான பெயர்களை உச்சரித்து, புரியாத எழுத்திலே கொள்ளை விலை விற்கும் மருந்துகளை வாங்கச் சீட்டு எழுதிக் கொடுத்து, ஊசி முனை குத்தக் கூடிய இடமெல்லாம் ஊசியைக் குத்த மறக்காது, 'பில்' போடுவதிலே நட்சத்திரய்யனை நினைவு படுத்திக்கொண்டு வாழும் இப்பெருமக்களிடையே தப்பிப் பிறந்தவர் டாக்டர் நிரஞ்சனன்!

சாதாரண டாக்டர்களே சக்கைப் போடு போடும் இந்தக் காலத்திலே 'ஸ்பெஷலிஸ்டுகள்' ஏராளமாகச்சம்பாதிப்பது இயற்கைதானே? காசநோய் விசேட மருத்துவர்களிடம் 'கரன்ஸி' விளையாடுவதும், 'ஹார்ட் ஸ்பெஷலிஸ்டி'டம் எல்லாச் செல்வங்களும் குவிந்து கிடப்பதும் சாதாரணமாக நாம் அறிந்ததே.

டாக்டர் நிரஞ்சனன், இந்த 'ஸ்பெஷலிஸ்ட்டு'களைப் போல பல பட்டங்கள் பெற்றவர்தான்; மேனுடுகளில் பல பல்கலைக் கழகங்களில் சிறப்பான ஆராய்ச்சிகள் செய்தவர்தான்; ஆனல் அவர் மனம் ஏனே நோய்களையும் உடல் உறுப்புக்களையும் ஆராய முற்படாது, இந்நோய்களுக்கு மூல காரணமான மனத்தையே பற்றி நின்றது! ஆம்! அவர் ஒரு மனத்தத்துவ மருத்துவர்!

நானும் டாக்டர் நிரஞ்சனனும் நண்பர்களாகச் சந்தர்ப்பம் வாய்த்தது ஒரு ரசமான சம்பவத்தால். அந்தவிசித்திரக் கதையைப் பிறகு ஓர் சமயம் உங்களுக்குச் சொல்கின்றேன்!

நகரத்தில் நான்கு இடங்களில் 'டிஸ்பென்சரி'களைத் திறந்து வைத்துக்கொண்டு, காரில் அங்கும் இங்கும் பறந்து அவரும் சம்பாதித்திருக்கலாம், மற்றவர்களைப் போல.

ஆனல்அவர் அப்படிச் செய்யவில்லை. எளிய முறையில் அமைந்திருந்த அவரது வீடும், 'டிஸ்பென்சரியும்' நகரத்துக்குச்சற்றுவெளியேஅமைந்திருந்தன.

அவர், ஆலயத்தின் கோபுரத்தில் பிரகாசித்த ஆயிரக்கணக்கான விளக்குகளைப் போல ஒளி வீசும் டாம்பீக வாழ்க்கையை விரும்பாதவர். கர்ப்பக்கிருகத்தில் ஆண்டவனது திருமுகத்தை அடியார்களுக்கு விளக்கப்படுத்தும் சேவையில் ஈடுபட்டிருக்கும் தூங்காவிளக்கிற்கு அவரை ஒப்பிடுவதுதான் பொருத்தம்!

நீண்டகாலமாக, அமைதியாக அதிக விளம்பரமில்லாது சேவை செய்து வருகிறார் டாக்டர் நிரஞ்சனன்.

அவரது முறைகள் — மனத்தைக் குணப்படுத்தி, உடலை நேராக்கும் அபூர்வ சிகிச்சை வழிகள்.

ஒருநாள் — அலுவலகத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன்.

இயந்திரம் போன்று திட்டமிட்டபடி செயல்புரிகிறதா, மாயமனம்?

எதிரே இருந்த காகிதங்கள் மறைந்தன. திடீரென்று நண்பர் நிரஞ்சனன் நினைவு பூத்தது.

'அவரைச் சந்தித்து உரையாடினல்... எத்தனையோ நாட்களாகி விட்டன... வீட்டிலும் அவள் இல்லை...அவர்

வீட்டிலேயே இன்று தங்கிவிட்டு'...இப்படி ஓடியது சிந்தனை.

'தொலைபேசியை எடுத்து டாக்டரை அழைக்கலாம்' என்று எண்ணினேன். அதே நிமிடத்தில்...

'டிரிங்...டிரிங்' என்று ஒலித்தது அக்கருவி. கை வ்ழக்கப்படி உடனே அதை எடுக்கத் தாவியது!

'மணியம் ஹியர்...யாரு...டாக்டர் நிரஞ்சனு! என்ன ஆச்சரியம்! டாக்டர்! நானே ஒரு விநாடி முன்னுல் உங்களை அழைக்க நினைத்தேன்... நமது மனங்கள் ஒரே தராசின் இரண்டு தட்டுக்கள் டாக்டர்...டாக்டர்...டாக்டர்!'

திடீரென்று உற்சாகமாகக் கேட்டுக்கொண்டிருந்த நிரஞ்சனனின் குரல் நின்று போயிற்று! மலைக் குகைகளில் வண்டுகள் முரலுவது போல 'நொய்....... நொய்.......' என்ற சப்தமே அங்கு கேட்டது!

அவர் 'ரிஸிவரை' வைத்துவிட்டாரா? இல்லை 'லைன் 'கட்'டாகிவிட்டதா? 'போனை'க் கீழே வைத்துவிட்டு டாக்டரது நம்பரைச் சொல்லி 'கனெக்ட்' செய்யுமாறு, அலுவலக தொலைபேசி பணிப்பெண்ணுக்கு உத்தரவிட்டு விட்டு அமர்ந்தேன்.

ஐந்து நிமிடங்கள்! தலைக்கு மேலே சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியை விட ஆயிரம் மடங்கு வேகமாக என் மனம் சுழன்று கொண்டிருந்தது!

மீண்டும் தொலைபேசி ஒலித்தது! 'எக்ஸ்கியூஸ் மீ ஸார்! அந்த நம்பரிலே யாரும் ஃபோனை எடுக்கவில்லை ஸார்!' பணிப்பெண் பேசினுள்.

என் மனம் மேலும் குழம்பியது! 'டாக்டர்...ஏன் அவ்வாறு நடந்து கொண்டார்?' என்ற கேள்விக்கு என்னுல் விடைகாணவே முடியவில்லை.

மாலை வரை நேரம் கல்லாகக் கனத்தது. ஒரு வழியாக வேலைகள் எல்லாம் முடிந்தது; மணி நான்கடித்ததும் வேகமாக வெளியே புறப்பட்டேன். டாக்டர் நிரஞ்சனனைப்பார்க்கத்தான்!

'டிரைவர்...நேராக கிண்டிக்குப் போ...டாக்டரைப் பார்க்கவேண்டும்!' என்று உத்தரவிட்டு விட்டு காரிலே சாய்ந்தேன்.

'ஸ்பீடா மீட்டர்' நாற்பதைக் காட்டியது.

'சீக்கிரம் போப்பா! அறுபதிலே போ...'

வண்டி தவழ்ந்து, பாய்ந்துசென்றது. அழகிய கிண்டிப் பெருவழியைப் பத்து நிமிடங்களில் அடைந்தோம்.

நகரின் எல்லை; நாகரிகத்தின் எல்லை; கிராமியத்தின் துவக்கம். பண்பாட்டின் ஆரம்பம்; அழகு போர்த்து இலங்கியது டாக்டர் நிரஞ்சனனின் தனி இல்லம்.

'போர்டிகோ'வில் காரைக் காணவில்லை! எனக்கு மனம் 'திக்'கென்றது.

வேலைக்காரன் ஷண்முகம் என்னை எதிர்பார்த்திருந்தது போல ஓடிவந்தான்.

'ஐயா...மத்தியானம் அவசரமா ஊருக்குப் போயிட்டாங்க... இந்தக் கடிதாசியையும், கவரையும் நீங்க வந்ததும் கொடுக்கச் சொன்னுருங்க'...

'நான் வருவது அவருக்குத் தெரியுமா?'

'உங்ககூடப் போனிலே பேசினருங்களே?...நான் அப்போ பக்கத்திலே தான் இருந்தேன்... ஆனு திடீரென்று 'போனே' வைச்சுப்பிட்டாருங்க.... அப்புறம் அவர் நடந்துகிட்டது எல்லாம் ரொம்ப ஆச்சரியமா இருந்ததுங்க... எல்லா வேலேக்காரங்களேயும் 'லீவு' கொடுத்து அனுப்பிட்டு, புறப்பட்டுட்டாரு...' வர ஒரு மாசமாவது ஆகும்னு சொன்னரு...!'

'என்ன ஆச்சரியமாயிருக்கிறது!' என்று எண்ணியவாறே கடிதத்தைப் பிரித்தேன.

'நான் வருகிறேன், ஷண்முகம்! வீட்டைப் பார்த்துக்கொள்!'

கார் நகர்ந்தது. கடிதம் என் விரல்களில் படபடத்தது.

எழுத்தாளரே! நண்பரே!

மன்னித்துக்கொள்ளவும். 'மனத் தட்டு' அழைத்துவிட்டது. போகிறேன். விளக்கம் நேரில். கவரில் உள்ள குறிப்புக்கள் சிறிது தெளிவு படுத்தும். படித்துவிட்டு, பத்திரமாக வைத்திருக்கவும்.

அன்பன்,
நிரஞ்சனன்.

புதிர் மேலும் புரியாததாயிற்று! வீட்டிற்குச் சென்று உடைகளே மாற்றிக் கொண்டு காப்பியை அருந்திவிட்டு, சோபாவில் சாய்ந்தேன்.

டாக்டர் நிரஞ்சனனின் கவரைப் பிரித்தேன். கதை பிறந்தது!

1. உடல்களல்ல! உள்ளங்களே கலந்தன!

நான் ஒரு எழுத்தாளனு, இல்லே, இலக்கிய கர்த்தாவா? இரண்டும் இல்லே; மனத்தத்துவ மருத்துவன். பிறகு ஏன் இந் நிகழ்ச்சியைக் கதை போல எழுதுகின்றேன்?

இரண்டு காரணங்கள்—ஒன்று மருத்துவ உலகிற்குப் பயன்படும். அதன்மூலம் மனித இனத்திற்கு உபயோகமாகும்!

இரண்டு, தூய்மையான காதல், சோதனேயால் சாகாத காதல், கொவ்வையிதழையும், மதிமுகத்தையும், வல்லியிடையினேயும், அன்ன நடையினேயும் படுக்கை அறையிலே பலியாக்கிக்கொள்ள வேண்டும் என்ற இயல்பூக்கங்களேயே மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பிறக்காத தூய காதல், உலகிலே இன்றும் சாகவில்லே—உயிரோடு இருக்கிறது என்பதை நான் அறிந்துகொண்ட மகிழ்ச்சி என்னே எழுதத் தூண்டுகிறது!

அப்பப்பா! இவர்கள் என்ன விசித்திரமான காதலர்கள்! 'மாக்ஸ் பாக்ட்' ருக்கும், 'நைலா'னுக்கும் காதலே அர்ப்பணிக்கும் நாகரிக யுவதிகள் மத்தியிலே இவள் ஒரு செந்தாமரை தான்!

அவன் மாத்திரம் என்ன? குறைந்தவனு? "கிடைத்ததை முடித்துவிடு" என்ற சித்தாந்தம் தலேக்கேறி போதை நடைபோடும் இளேஞர் சமுதாயத்திலே அவன் ஒரு தனிப்பிறவி! பூமியிலே வாழ்ந்து, ஆனுல் வான வெளியிலே தோய்ந்து நிற்கும் மலேச்சிகரம்!

சிலமாதங்களுக்கு முன்னுல்...காலே வேளே. வழக்கம் போலக்காலே உலா சென்று விட்டுத்திரும்பிக் கொண்டிருந்தேன்.

சூரியனுக்கு அன்று கொஞ்சம் சோம்பல்; அவனது படுக்கை அறைகளாம், மேகங்கள் விலகாமலே கிடந்தன.

சூரியனது விரோதியான காற்ரே, 'சூரியன் சோர்ந்து விட்டான்; நான் விழித்துவிட்டேன்' என்று களியாட்டம் போட்டுத்துள்ளிக் கொண்டிருந்தான்!

மின்சார ரயில்வண்டிகள் ஒவ்வொன்ருகப்போய்வர ஆரம்பித்தன. 'நொய்' என்ற சப்தத்தோடு அவைகள் விரையும் காட்சியைப் பாலத்தின் மீதிருந்து சிறிதுநேரம் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தேன்.

'ஐயா!'

குரல் கேட்டுத் திரும்பினுல் ஷண்முகம் நின்று கொண்டிருந்தான்.

'என்ன?'

'யாரோ ஒரு வாலிபருக்கு மனநிலே சரியில்லேயாம். அழைத்து வந்திருக்கிருர்கள்'

'சரி-நீ போ...நான் வருகிறேன்'

சாதாரணமாக என்னேத்தேடி சிகிச்சைக்காக யாரும் காலேயில் வருவதில்லே. பச்சையாகச் சொல்ல வேண்டு

ஸ்ரூல், எனது புதிய முறைகளும் ஆராய்ச்சிகளும் நோயாளிகளை என்னிடம் வரவிடாது தடுத்துக்கொண்டிருந்தன!

யாராவது, நண்பர்கள் சிபாரிசினுல் ஒன்றிரண்டு சிக்கலான 'கேஸ்'கள் வருவதுண்டு. அரசாங்க ஆஸ்பத்திரிகளையும்,பிரபல டாக்டர்களையும் தாண்டிக்கொண்டு என்னிடம் அவை வருகின்றன என்ருல் அவற்றின் சிக்கல் அதிகம் என்று பொருள்! நானும் அவற்றை அதற்காகவே ஏற்றுக்கொள்வது பழக்கம்!

என்னை, ஆண்டவன் நல்லவேளையாகப் பரந்த செல்வம் ஈட்டிய ஒருவரது ஒரே மகனுகப் படைத்திருந்தான். இல்லாவிட்டால் ஆராய்ச்சிக்காக 'இன்ஸ்டிடியூட்' நடத்திக்கொண்டு இருக்க முடியுமா?

ஒருவழியாக வீட்டை அடைந்தேன். பெரிய கார்கள் இரண்டு நின்றுகொண்டிருந்தன. ஒன்று கருப்பு; அடுத்தது நீலவர்ணம்.

கருப்புக்காரினுள்ளே மூன்று,நான்கு பெண்கள் அமர்ந்திருந்தனர் என்பது தெரிந்தது. முக்காடிட்ட உருவங்கள்.

உள்ளே சென்றேன்; 'ஹா லி'ல் இரண்டு பெரியவர்களும், ஒரு இளைஞனும் இருந்தார்கள்.

'நோயாளி யார்'? என்பது பார்த்தவுடனே புரிந்துவிட்டது.

கலைந்து கிடந்த கிராப்புச்சுருள்கள் நெற்றியிலே விளையாடிக் கொண்டிருந்தன. விரல்கள் சட்டையின் நுனிகளைப் பற்றித் துவண்டு கொண்டிருந்தன. கண்கள், வளைவுகள் நிறைந்த ரஸ்தாவில் இரவு நேரத்தில் செல்லும் காரின் 'ஹெட் லைட்டு'கள் போலப்'பளிச்' சிட்டுக் கொண்டு இருந்தன!

எடுப்பான நாசி; கவரும் கண்கள்; அழுத்தமாக மடிந்த உதடுகள்: அழகிய முகம்.

மெலிந்த, உயர்ந்த உருவம்; ஆண் அழகன்தான். அவனுக்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு பெரியவர்களும் அமர்ந்திருந்தனர்.

சாதாரணஉடையில்,கவர்ச்சியின்றிக் காட்சியளித்த என்னைக் கண்டதும் அவர்கள் 'நான் டாக்டர்' என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. பைத்தியக் காரர்களின்மருத்துவர்கூடப் பகட்டாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறது சமுதாயம்!

நானே பேச்சைத் துவக்கினேன். 'நான்தான் டாக்டர் நிரஞ்சனன், தாங்கள் எல்லாம்'?' என்றிழுத்தேன்...

பரபரப்புடன் இரண்டு பெரியவர்களும் எழுந்தனர். உயரமாகவும், ஒல்லியாகவும் இருந்த பெரியவர் பேசினுர். 'நான்தான், எம்பெருமானுர். சைனுபஜாரில் நகைக்கடை வைத்திருக்கிறேன்... இவர் எனது சம்மந்தி நம்மாழ்வார்... திருச்சியிலே வைர வியாபாரம்... பையன் எனது மூத்த பிள்ளை...பெயர் கமலவண்ணன்...!'

'நம்மாழ்வார்' என்று அறிமுகப் படுத்தப்பட்டவர், எம்பெருமானுரின் வார்த்தைகளை ஆமோதிப்பதைப் போலத் தலையை இடை இடையே ஆட்டிக்கொண்டு இருந்தார்.

'சந்தோஷம்... உட்காருங்கள்!' என்றேன். சண்முகம் நான்கு கோப்பைகளில் காப்பியைக் கொண்டு வந்தான்.

'எடுத்துக் கொள்ளுங்கள்' என்றேன். கமலவண்ணன் மாத்திரம் அசையாதிருந்தான்.

'தம்பி! எடுத்துக்கொள்ளு' என்று அன்பான குரலில் கட்டளையிட்டேன்.

அவன் கண்கள் சிறிதுநேரம் என் மீது பாய்ந்தன. சில வினுடிகளில் திரும்பிக்கொண்டன.

காப்பியை அவன் தொடவேயில்லை. 'யார் சொன்னுல் கேட்கிருன்!' என்று கேட்டேன்.

'சில வேளைகளில் அவனது மனைவி கூறினுல் கேட்பதுண்டு; சிலசமயம் அதுவும் கிடையாது' என்ருர் எம்பெருமானுர்.

'ஓகோ... அவர்கள் வந்திருந்தால் அழையுங்கள் ... என்ன செய்கிருர் என்று பார்க்கலாம்!'

நம்மாழ்வார் எழுந்து வெளியே சென்ருர். சிறிது நேரத்தில் மாநிறமுள்ள ஒரு பெண் தொடரத் திரும்பினுர்.

'என் மகள்... கமலவண்ணன் மனைவி அம்புஜம்' என்று அறிமுகப் படுத்தினுர்.

அம்புஜம் கரம் கூப்பினுள்... நானும் வணக்கம் தெரிவித்தேன்.

'அவரைக் காப்பி சாப்பிடச் சொல்

லுங்கள்’ என்று அம்புஜத்தைக் கேட்டுக்கொண்டேன்.

சிறிது .. ...தயக்கத்தோடு, கமலவண்ணனின் பக்கம் நகர்ந்தாள் அம்புஜம்.

‘சாப்பிடுங்க..’ என்று



கோப்பையை எடுத்து நீட்டினாள். அவன் சிலையாக அமர்ந்திருந்தான். அம்புஜத்தை ஒருபால் அழைத்தேன்.

‘சிலவேளைகளில் நீங்கள் என்ன, சொன்னால் அல்லது செய்தால் அவர் கேட்கிறார்?’

கண்களைத் துடைத்துக் கொண்டு தயங்கியவாறு நின்றிருந்தாள் அவள்.

எம்பெருமானார் சொன்னார்: ‘டாக்டர் ஐயாகிட்ட தைரியமாக எல்லாம் சொல்லம்மா!’

‘இந்துமதிக்காகச் சாப்பிடுங்கள் என்று சொன்னால் கேட்பார்.

‘இந்துமதியா? அது யார்?’

அது எனக்கும் தெரியாது! அவள் பெயரை

அவர் உறக்கத்தில் உச்சரிப்பதைச் சில நாட்கள் கேட்டேன். அதனுல்தான்'...

'ஓகோ! சரி... இப்பொழுது அதைக் கூறி அவரைச் சாப்பிடச் சொல்லுங்களேன்!'

'இப்பொழுதா?' அவள் மிகவும் தயங்கினுள். கணவனது குறைபாட்டை தனது தந்தையும், மாமனுரும் கூட அறிவது அவளுக்குப் பிடிக்கவில்லை' என்று புரிந்து கொண்டேன்.

'சரி. நீங்கள் போய்க் காரில் இருங்கள் '

அம்புஜம் வெளியேறினுள். ஒருதுண்டுக் காகிதத்தை எடுத்தேன்.

அன்பே!

காப்பி சாப்பிடாமலிருக்கலாமா? இந்துமதிக்காக எனக்காக உடனே சாப்பிடுங்கள். -இ-

என்று எழுதி, கமலவண்ணனிடம் கொடுத்தேன்.

கடிதத்தைப் படித்தான். கண்கள் சுடர் விட்டன!

'தபாலில் வந்ததா!' என்று என்னிடம் கேட்டான்.

'ஆம்' என்று தலையசைத்தேன்.

'ஓகோ...அப்போ காப்பி சாப்பிடுகிறேன்' என்று சொல்லிவிட்டு ஒரே மூச்சில் கோப்பையை உறிஞ்சினுன்.

எம்பெருமானுர், நம்மாழ்வார் ஆகிய இருவரும் சொன்னவற்றிலிருந்து கமலவண்ணனைப்பற்றி நான் அறிந்த விவரங்கள் இவைதான்.

எம்பெருமானுரின் ஒரே செல்வ மகன் கமலவண்ணன்; மிக நல்ல பையன்; இளமையில் இருந்தே ஆழ்ந்த சிந்தனையில் அடிக்கடி ஆழ்ந்து காணப்படுவான்; நண்பர்களைவிடத் தனிமையையே நாடினுன்.

பி. ஏ. படித்து முடித்த பிறகு, விடுமுறையில் திடீரென்று மனநிலை தடுமாற்றம் ஏற்பட்டு விட்டது. உணவு, உட்கொள்ளாது உறக்கமே இல்லாது ஒரே இடத்திலே சிலையாக அமர்வது என்று ஆரம்பித்தான். மற்றப்படி பிறரைத் தொந்தரவு செய்வதில்லை.

பெற்றவர்கள் அவசரப்பட்டுத், திருமணம் செய்வதால் சரியாகிவிடும் என்று முறைப்பெண் அம்புஜத்தை மனைவியாக்கினுர்கள். திருமணத்தை இரகசியமாக நடத்தினுர்கள்; அப்பொழுதும் பலனில்லை!

வைத்தியம், மந்திரம் ஒன்றும் இதுவரை பலிக்கவில்லை!

நான் சொன்னேன்:'மூன்றே மாதங்களில்கமலவண்ணனைக் குணப்படுத்த முடியுமென்ற நம்பிக்கை எனக்குண்டு; நான் செய்கிறேன்; உங்கள் ஒத்துழைப்பு மட்டும் தேவை!'

எம்பெருமானுர் எழுந்து வந்து என் கைகளைப் பற்றிக் கொண்டார்.

'எங்கள் குலதெய்வம் போலச் சொன்னீர்கள்!'

'சரி... நீங்கள் போய் வரலாம்.. கமலவண்ணன் என்னுடன் இருக்கட்டும்... அம்புஜத்திடம் சொல்லி நாளை வரும்பொழுது அவரது குறிப்புப்புத்தகங்கள், பெட்டி போன்றவற்றை இங்கே அப்படியே எடுத்துவாருங்கள்!'

அவர்கள் விடைபெற்ருர்கள்! கமலவண்ணன் ஆடாது, அசையாதிருந்தான்.

'உளவசிய நிலை முறை'யைப் பயன்படுத்த நான் திட்டமிட்டேன்.

'ஷண்முகம்! 'ஹிப்னுடிஸ டேபிளை' த் தயார் செய்து விட்டுவா...இவரைக்கவனித்துக்கொள்...நான் குளிக்கவேண்டும்!'

2. விழித்திரையல்ல! மனத்திரை!

'ஹிப்னுடிஸ டேபிள்' தயாராகி விட்டதென ஷண்முகம் அறிவித்துச் சென்றுன்.

கமலவண்ணனைப் பற்றியிருந்த கலக்கம் என்ன? என்பதை ஓரளவு நான் ஊகித்து விட்டதால், அன்றே சிகிச்சையை ஆரம்பித்து விடலாம் என்று திட்டமிட்டேன்.

குளித்துவிட்டுச் சுத்தமாக 'ஹாலில்' நுழைந்தேன்.

கமலவண்ணன் வடித்து எடுத்த சிலையாக அமர்ந்திருந்தான்.

'கமலவண்ணன்'!

ஒரு நிமிடகாலம் அவன் விழிகள் என்னைத்தடவின. பிறகு மீண்டும் பல கணி வழியே பாய்ந்து பரந்த வான

வெளியிலே பதிந்தன.

ஏதோ இமய மலைச்சாரலிலே ஆழ்ந்த நிஷ்டையில் இருக்கும் யோகியைப்போல அவன் வீற்றிருந்தான். விழிகள் நிலைத்தபடி நின்றன.

சில வினாடிகளுக்கு ஓர் முறை முறுவல் ஒன்று உதடுகளை இலேசாக



விரியச்செய்தது. அச்சமயம் கண்களும் சிறிது அசைந்தன. சிறு கூழாங்கல்லை எறிந்ததும் தாமரைக்குளத்தில் ஏற்படும் சிறு சலனத்தை அக்காட்சி நினைவூட்டியது.

எல்லையற்ற வானவெளியிலே, நாமெல்லாம் பார்க்கமுடியாத எந்தக் காட்சியை அவன் பார்த்து ரசிக்கிருனே?

'கமலவண்ணன்... எழுந்திரப்பா... அங்கே 'இந்து' வந்து காத்திருக்கிருள்... நீ...என்னப்பா''

'இந்துவா... எங்கே? எங்கே இருக்கிருள்?'

''என்னுடன் வா...காட்டுகிறேன்''

குழந்தைபோல எழுந்து தொடர்ந்தான் கமலவண்ணன்.

* * *

'சிகிச்சை அறையிலே எல்லாம் சரியாக உள்ளனவா?' என்று நோட்டம் இட்டேன்.

கருப்புத்துணியால் சுவர்கள் முழுவதும் போர்த்தப்பட்டு இருந்தன. அறையின் மத்தியில் பரந்த, பெரிய வசதியான படுக்கை அதன்மீது பிரகாசமான விளக்கு ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சி நின்றது.

'எங்கே இந்து, சொல்லுங்கள்!'

'அதோ... அந்த மேஜை மீது படுத்துக்கொள் காட்டுகிறேன்.

தாவிப்பாய்ந்து சென்று, மேஜை மீது படுத்துக்கொண்டான், அவ்வாலிபன்,

'சரி... அதோ அந்த விளக்கையே பார்... அதிலே இந்துவின் முகம் தெரியவில்லை?!

சற்றுநேரம் விளக்கையே உற்றுப் பார்த்தான் கமலவண்ணன். பிறகு திடீரென்று, 'ஆமாம்... ஆமாம்! அது இந்துவேதான்! ஆகா! சூரியனைப் போல சுடர்விடும் விழிகள்!அப்பப்பா... நிலவைப்போலப் பிரகாசமான மந்தகாசம்...! ஒரே ஒளிமயம்... ஒளிமயம்! நண்பரே! அவள் தெய்வப் பிறவி... என் இந்து, தேவதை, நண்பரே... தேவதை! அவளது முகத்திலேதான் என்ன அருள்...!'

உள்ளத்தின் மகிழ்வாலும், ஒளி வீசும் விளக்கையேபார்த்துக்கொண்டு 'இருந்ததாலும் அவனது கண்களில் நீர் தாரை, தாரையாக வந்தது! எனது கண்களும் என்னையும் மீறி நனைந்தன!

நான் மேஜைக்கருகில் நகர்ந்தேன். மெதுவாக எனது கரத்தை நீட்டி அவனது முகத்தையும், மார்பையும் தடவலானேன்.

'கமலவண்ணன்!'

'உம்...'

'தூங்கு...'

'உம்'

நீ தூங்கப்போகிருய் .. தூங்க ஆரம்பித்து விட்டாயே!... உம்... தூங்கியே விட்டாய்!'

கமலவண்ணன் தூக்கத்திற்கும் நினைவிற்குமாகப் போராடினுன். சிறிது நேரத்தில் வசியம் வென்றது. 'அறிதுயில் நிலை'யிலே ஆழ்ந்தான்.

'கமலவண்ணன், இந்த ரோஜா மலரைப்பார்.' என்று சொல்லி என் கையிலிருந்த கைக்குட்டையைக் கொடுத்தேன்.

அவன் கரங்களை நீட்டி வாங்கிக் கொண்டான்.

'அது எவ்வளவு வாசனையை வீசுகிறது, பார்த்தாயா?'

அவன் கைக்குட்டையை எடுத்து முகர்ந்து பார்த்தான்.

'ஆகா! என்ன அழகிய மலர்..எவ்வளவு நறுமணம்!'

'சரி...மலரை இப்படிக்கொடு...எழுந்திரு...என் பின் வா!'

இயந்திரமாக நடந்தான் அந்த இளைஞன்.அடுத்த அறையை அடைந்தோம். காற்ரேட்டமான, வசதியான அறை அது.

'உட்கார்'—உட்கார்ந்தான். எனது மனத்திண்மையினுல் அவனது மனதைத்தொட்டு, 'பூர்ண சம்யோகம்' ஏற்படுத்தி, 'நினைவற்ற சன்னி நிலை'க்கு கொண்டுவந்தேன். பிறகு நேர்ந்துள்ள இந்த 'உறக்கச் செயல் நிலை'யில்தான் அவனது மனத்தின் இரகசியங்கள் அறிந்தாகவேண்டும்!

'கமலவண்ணன்! இந்துமதி வந்திருக்கிருளே...தெரியவில்லை.......அவளுடன் பேசு!'

எதிரே இருந்த சுவரைச் சுட்டிக் காட்டினேன், 'இந்துமதி' என்று!

'பேசுவதா... அவளுடன் எப்படிப் பேசுவது? நான் இதுவரை அவளுடன் பேசியதே கிடையாதே? நான்

ஒரு முட்டாள். முட்டாள்... அவளுடன் பேசியிருந்தால் என்றோ அவளது கணவனாயிருப்பேனே? இந்து... இந்து...!'

'என்ன? நீ இதுவரை அவளுடன் பேசியதே கிடையாதா? ஆச்சரியமாக இருக்கிறதே?'

'ஆச்சரியம்தான்...ரொம்ப...ரொம்ப ஆச்சரியமான சமாச்சாரம் தான்... ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டு, அசட்டுச் சிரிப்பை வழிய விட்டபடி பேசிக்கொள்ள முயற்சிக்கும் இளைஞர், யுவதிகள் கூட்டத்திலே இது மிகவும் ஆச்சரியமான விஷயமே தான்... என்ன இந்து! நாம் அவ்வளவு கோழைகள்! கொஞ்சம் துணிச்சலோடு நாம் பழகியிருந்தால்...இந்து... ஐயோ...இந்து!'

'கமலவண்ணன்...இந்துவை முதலில் சந்தித்தது நினைவிருக்கிறதா...உங்களுக்கு!'

'ஐயோ! அதை எப்படி மறப்பேன் நண்பரே... எப்படி மறப்பேன்? அந்த நாள்...என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாததுதான்...'கண்டதும் காதல்' என்பதும் அங்கே கதைகளில்தானே பிறக்கிறது? வாழ்க்கையிலே...ஒன்றுகப்பழகவாய்ப்புக்கள் கிடைக்கையிலே தான் அன்பு பிறக்கிறது...நானும் கண்டவுடனே காதல் கொள்ளவில்லை. இந்துவை ஒருநாள் பார்த்தேன்...மின்சார ரயிலுக்காகக் காத்திருக்கும் போது...அதற்கு முன்பும் பல நாட்கள் பார்த்திருக்கிறேன். ஆனால் அப்பொழுதெல்லாம் எனது விழித்திரைகள் அவளைப் பதிவு செய்தனவே தவிர, மனத்திரையிலே அவள் நிழலாடவில்லை. எத்தனையோ அழகிய பெண்களைப் பார்க்கிறோம், தினந்தோறும்... அவர்களை எல்லாம் நெஞ்சில் ஏற்று, நினைவிலே தேக்கியா வைத்துக் கொள்கிறோம்...இல்லையே... அவர்களில் ஒருத்தியாகத்தான் இந்துவையும் நினைத்திருந்தேன் அன்று வரை... ஆனால் அன்று...அந்தக் குறிப்பிட்ட நாளில் அவள் என் விழித்திரையைக் கடந்து மனத் திரையிலே படமானாள்... அதையும் கிழித்து...உயிரிலே ஒன்றானாள்...என்ன...இந்து! நான் சொல்வது சரிதானா...?'

'அவள் தலையசைப்பதை நீங்கள் பார்க்கவில்லையா...'

'ஆம்...அவளுக்கும் அந்த அனுபவம் அப்படித்தான் இருந்திருக்கவேண்டும்...அவள் விழிகள் அதைக் கூறின.. கலக்கமும், மருட்சியும், இன்பமும், ஏக்கமும் பின்னணி கூட்டிய அந்த விழிகள்.. அவை எவ்வளவு பெரியவை! என்னைக் கொல்லுவதிலே எவ்வளவு தேர்ந்தவை! பிறரறியாது எனக்கு மட்டும் செய்திகளை வழங்குவதிலே எவ்வளவு கற்றவை! அப்பப்பா! ஒரே ஒரு வினாடி...அந்த வினாடியில் அவள் விழியிலே என்னை வெந்த நீறாக்கிவிட்டாள்.. நானும் அப்படித்தான் பார்த்திருக்கவேண்டும்...வண்டி நகர்ந்தது... எனது உயிரே போய்விட்டதாக உணர்ந்தேன்!'

'பிறகு?'

'பிறகென்ன...எனக்குப் பித்தம் பிடித்தது...எங்கும், எதிலும் அவள் முகம் தெரிந்தது...நான் ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்தால் அவள் கண்புதைக்கப் பின் வருவாள். புத்தகத்தை விரித்தால், அதன் பக்கங்களில் நின்று அவள் முகம் நகைக்கும். கண்கள் கவிதைகளைக் கூறும்! நாவு, காவியங்களை நவிலும்! தனிமையாக நடந்துகொண்டிருக்கும் பொழுதோ, அவள் என்னுடன் அருவமாக நடந்து வந்தாள்...நான் சிரித்தால் அவள் மகிழ்ந்தாள்...நான் வேதனைப்பட்டால் அவள் இரத்தக்கண்ணீர் வடித்தாள்... வீட்டிலே ஜன்னலிலே உட்கார்ந்து கொண்டு வான வெளியை நோக்குவேன்...தூயவானத்திலே அவளது முகத்தை மாத்திரமே காண்பேன். வானவெளி அளவு பெரிதாக அவள் வியாபித்து நின்றாள்...அவள் எனக்கு உலகம்...அவளையே எனது உலகமாகக் கொண்டேன்...?'

'அவள் ஏதாவது கடிதம் எழுதினாளா? நீயாவது எழுதினாயோ?'

'கடிதமா...அவ்வளவு எளிதாக எழுதிவிட முடியுமா? இதென்ன சினிமாவா? இல்லை...நாடகமா? நினைத்தவுடனே 'கண்ணே! பொன்னே!' என்று எழுதிக் குவிப்பதற்கு? பித்துற்ற நிலையிலும் நான் நிதானமிழக்கவில்லை., கடிதமெழுதத் துடிப்புண்டு...ஆயின் அவளுக்கு ஆபத்து வரலாம் என்று

எண்ணி அதை அடக்கிக் கொண்டேன்...ஆனால்...ஒன்று என் மனம் அவளுக்கு ஆயிரம், ஆயிரம் கடிதங்களை எழுதியிருக்கவேண்டும். .அவள் மனம் எனக்கு அனுப்பிய செய்திகளில் இருந்து அது எனக்குத் தெரிந்தது !,

'என்ன...நீ என்ன சொல்கிறாய்... புரியவில்லையே?'

'புரியாதுதான்.....நண்பரே....எங்கள் இருவர் மனங்களும் ஒரே தராசின் இரண்டு தட்டுகளாக மாறிவிட்டன! கடிதங்கள் எழுதாமலே, நாங்கள் செய்திகளை அறிந்தோம்! நான் அவளை எதிர்பார்த்து ஓரிடத்திற்குப் போனால், நிச்சயமாக அவள் அங்கிருப்பாள்! அவளை ஒரே ஒரு முறை பார்க்க, சில நாட்கள் நள்ளிரவில் அவளது வீதி வழியே சென்றதுண்டு ! ஊர் உறங்கும் அந்த வேளையிலே அவள் உறங்காது எனது மனக்கடிதத்தின் செய்தியால் நான் வருவது அறிந்து, பலகணியிலே காட்சி தருவாள்! சக்தியின் சந்நிதானத்திலே நான் நிற்கும் அந்த ஒரு விநாடிக்காகவே ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரங்களையும் செலவிடுவேன். 'வருகிறேன்.... வருகிறேன்...!' என்று என் மனம் செய்தி அனுப்பும்...'வா...காத்திருக்கிறேன்' என்று பதில் வரும்...இந்தத் துடிப்பிலேயே நாள் முழுவதும் கழிந்து விடுவதுண்டு....நான் 'பைத்தியம்' என்ற பட்டத்தையும் இதனால்தான் பெற்றேன் !'

'அந்தத் தனியான சந்திப்புக்களில் கூட நீங்கள் பேசியதில்லையா?'

'என்ன அசட்டுத்தனமான கேள்வி! நாங்கள் ஏன் பேசவேண்டும்? உள்ளங்கள் உறவாடும்பொழுது, உதடுகளினால் என்ன உபயோகம்? தூய்மையான உள்ளத்தோடு தியானத்திலே ஆழ்ந்துவிட்ட பக்தன், மந்திரங்களை முணுமுணுப்பதுண்டோ? உயிர் நீங்கிய கூடாக அவள் பலகணியிலே சாய்ந்து நிற்பாள்! அவளது உயிரைத் தான்நான் சிறைப்பிடித்து என்னோடு கொண்டு வந்து விடுவேனே! பிறகு எங்கு தோன்றுகிறதோ, அங்கே உட்கார்ந்து அவ்வுயிரோடு பேசுவேன்! பாலமோ, மரத்தடியோ, இரயில் நிலயமோ, ரஸ்தாவோ, வீடோ எதுவாக இருந்தாலும், மழையோ, காற்றோ, இரவோ, பகலோ எப்படி இருந்தாலும் அங்கேயே பேசுவோம்! பேசாமல் பேசுவோம்! நாவசையாது! உயிரசையும்! உதடு திறக்காது! உள்ளங்கள் உறவாடும் !'

நீண்ட நேரம் பேசிய களைப்பாலோ —பேசாமல் பேசிய பேச்சுக்களை எண்ணிய அதிர்ச்சியாலோ—கமலவண்ணன் களைத்துக் காணப்பட்டான்.

மீண்டும் அவனை 'ஹிப்னடிஸ' அறைக்கு அழைத்துச் சென்று மேஜையில் படுக்கவைத்தேன்.

'விழித்துக்கொள்-எழுந்திரு...உறங்கியது போதும்' என்று தடவிக்கொடுத்தேன்.

'அறிதுயில்நிலை' அகன்றது உள்ளம் உறங்கப்போயிற்று ! உடல் விழித்தது !

அறிவுள்ள கமலக்கண்ணன், காதலன் கமலக்கண்ணன் உறங்கிப் போனான்! பைத்தியம், கமலக்கண்ணின் விழித்தான் ! 'பர, பர' வென்று முழித்தான்!

3. கடிதமல்ல! அவள் கைபட்ட காகிதம்தான்!

மறு நாள் காலை. 'செர்ப்பாசில்,' சிகிச்சை அளித்து, உறக்கம் உண்டாக்கும் மருந்தையும் செலுத்தி இருந்ததால், கமலவண்ணன் ஆழ்ந்து உறங்கிக்கொண்டு இருந்தான்.

நேற்றைய 'ஹிப்னடிஸ' சிகிச்சையின்பொழுது கமலவண்ணன் பேசியவற்றை 'டேப்ரிகார்ட்' வழக்கம்போலச் செய்திருந்தோம். அதைப் போட்டுப் பார்த்து, தட்டெழுத்தில் அடித்து உதவியாளர் வைத்திருந்தார். அதைப் படித்துக்கொண்டிருந்தேன்.

அம்புஜம் வந்தாள். கருப்புச்சேலை ! கருப்பு ரவிக்கை ! சோகச்சித்திரமாகக் காட்சி அளித்தாள், அவள்.

அவளைக் கண்டதும் எனது மனப் போராட்டம் அதிகமாயிற்று. 'கமலவண்ணனின் பித்தம் தெளிந்தால், அவன் என்ன செய்வான்? 'இந்து எங்கே?' என்று தேடிப் போவானா?

அல்லது அம்புஜத்தோடு வாழ்க்கை நடத்துவாளு? அந்த வாழ்க்கையில் அமைதியும், அன்பும் நிலவுமா?'

அம்புஜம், 'காலை வணக்கம்' தெரிவித்தாள். எதிரே இருந்த சோபாவைச் சுட்டிக் காட்டினேன். அமர்ந்து கொண்டாள். பரீட்சை முடிவை எதிர்பார்க்கும் மாணவனைப்போல என்னை ஆவலோடு பார்த்தாள்.

'அம்புஜம்! உங்கள் கணவர் விரைவில் குணமடைவார்! அதுபற்றிக் கவலை வேண்டாம். ஆனல் குணமடைந்த பிறகுதான்...சரி...அதைப் பிறகு பார்க்கலாம்...நான் சில கேள்விகள் தங்களிடம் கேட்கவேண்டும்... ஒளிவு, மறைவின்றிப் பதிலளிப்பீர்களா?'

'ஆகட்டும், டாக்டர்!'

'மிகவும் நல்லது...அம்புஜம்! உங்கள் திருமணம் நடந்தேறி எவ்வளவு நாட்களாகின்றனவோ?'

'ஆறு மாதங்கள் சுமாராக...'

'உம்...அதற்கு முன்பே அவரைத் தெரியுமா?'

'அவர் எனது 'அத்தை மகன்' ஆயிற்றே? நன்ருகத் தெரியும்...திருமணத்திற்கு ஒரு ஆண்டு முன்பாகக் கூட பார்த்திருக்கிறேன்!'

'எங்கே பார்த்தீர்களோ?'

'திருச்சிக்கு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தபொழுது!'

'ஓகோ! பல நாட்கள் தங்கியிருந்தாரா?'

'ஒரு வாரம் இருந்தார்!'

'சரிதான்...நன்கு நெருங்கிப் பழகி இருப்பீர்கள்!'

'இல்லை...அப்படிச் சொல்ல முடியாது...இரகசியமாகக் கூடப் பேசியதே இல்லை...பார்த்துக்கொண்டது கூடக் கிடையாது...ஒருநாள்...அவர் தனியாக இருக்கும்பொழுது காப்பி கொண்டு கொடுத்தேன்..அப்பொழுது அவர் விரும்பியிருந்தால் பேசியிருக்கலாம்...நானும் அவர் ஏதாவது பேசுவார் என்றே இருந்தேன்...ஆனல் அவர் பேசவில்லை...'

'சரிதான்..திருமணம் நடந்தபொழுது அவரது மனநிலை சரியில்லை என்று எப்படித் தெரியும்?'

'முதலில் எனக்கும் தெரியாது தான்..பிறகு..பிறகு'சற்றுத் தயங்கினுள் அம்புஜம்.

'தயங்காது கூறுங்கள்...'

'ஒன்றுமில்லை.. திருமணமான அன்று இரவு நெடுநேரமாக அவர் ஜன்னல் அருகிலேயே நின்று வானத்தையே பார்த்துக்கொண்டு இருந்தார்...நானும் நின்றுகொண்டே இருந்தேன்...திடீரென்று திரும்பிப் பார்த்து நான் இருப்பதை உணர்ந்துகொண்டவர்போல் என் அருகில் வந்தார்...''நீ...இங்கேயா இருக்கிருய்,..நான் அங்கே தேடிக் கொண்டிருக்கிறேன்?'' அன்று மெதுவாகக் கூறினர்...பிறகு என் கையை மெதுவாகப் பற்றி அழைத்துச் சென்று விளக்கருகில் என் முகத்தை உற்றுப் பார்த்தார்...பார்த்துவிட்டு, 'நீ...இந்து இல்லை...இந்து...இல்லை...அ ம் பு ஜ ம்' என்ருர்...எனக்கு ஏதோ எல்லாம் பிரமையாக இருந்தது...மீண்டும் அவர் என்னை விட்டுவிட்டுப் படுக்கையில் சென்று சாய்ந்தார். சிறிது நேரம் கழித்துத் தூங்கிவிட்டார் என்று தெரிந்தது...நான்...நான்...'

'அம்புஜத்தின் கண்களில் நீர் துளிர்த்தது. சில நிமிடங்கள் அமைதி. பிறகு நான் கேட்டேன்; 'குறிப்பாக என்னிடம் தாங்கள் ஏதாவது சொல்ல நினைக்கிறீர்களா?'

அம்புஜம் சில வினடிகள் யோசித்த பிறகு சொன்னுள்! 'விசேடமாகப் பிறகு எங்களிடையே எதுவும் நடக்கவில்லை...அவரது மனத்திலே 'இந்து' என்ற பெண் இடம் பெற்றிருப்பதை மட்டும் அறிந்தேன், அவளை நான் பொருமைக்கண்ணேடு பார்க்கவில்லை. அவருக்கு மனநிலை குணமாக அவளைத் தேடிக் கண்டுபிடித்து மணமுடிக்கக் கூட முயன்றேன்...ஆனல் 'அவள் யார்?' என்றே தெரியவில்லை...'

'ஓகோ! அவரது குறிப்புப் புத்தகங்கள், பெட்டி, சாமான்களைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?'

'அவற்றில் ஏதாவது புகைப்படமோ, கடிதமோ, அவள் விலாசமோ இருக்குமா? என்று நான் ஏற்கெனவே தேடிப் பார்த்துவிட்டேன்...ஒன்றுமே கிடைக்கவில்லை......குறிப்புப்புத்தகமும் காலியாகவே இருக்கிறது...இதோ... இந்தக் காகிதம் ஒன்றுதான் பத்திரமாகப் பெட்டியின் அடியில் இருந்தது.

காகிதம்-கசங்கிய காகிதம் என்னிடம் தரப்பட்டு... கையில் எடுத்ததும் 'சென்ட்' வாசனை 'குப்'பென வீசிற்று. கடிதத்தில் 'கமல்...கமல்...கமல்...' என்று பத்துப் பன்னிரண்டு முறை கோணல், மாணலாக எழுதப்பட்டிருந்தது! வேறு ஒன்றுமே இல்லை!

அம்புஜம் சொன்னாள்!' இது அவள் எழுதியதாக இருக்கவேண்டும்.இதைப் பெரிய பொக்கிஷம்போல அவர் பாதுகாப்பாக வைத்து இருந்தார்!'

'சரி...இது என்னிடம் இருக்கட்டும் அவ்வளவுதான்...!'

அம்புஜம், கமலவண்ணன் அறைக்குச்சென்று அவனைப்பார்த்து விட்டுச் சென்றுவிட்டாள்.

° * *

மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து 'ஹிப்னுடிஸ்'ச் சிகிச்சை கொடுக்கத் தீர்மானித்தேன். இரண்டு நாட்களும் கமலவண்ணன் எவ்விதத் தொந்திரவும் கொடுக்கவில்லை.

இரண்டாவது சிகிச்சையின்போது நான் கேட்டேன்:

'இந்துமதி கமல்...கமல்' என்று எழுதிய காகிதம் உங்களுக்கு எப்படிக்கிடைத்தது!?

'அதுவா...ஒருநாள்..,மின்சார வண்டி நிலையத்தில் நாங்கள் காத்திருந்தோம். அன்று எனக்கு ஒரு துடிப்பு. எப்படியாவது அவளுடன் பிரயாணம் செய்ய வேண்டுமென்று. எனது பிரயாணமோ எதிர்த்திசையில்... என்ன செய்வது என்று புரியவில்லை,.. அவளோ தனது விழிகளால் என்னைப் பைத்தியமாக அடித்துக்கொண்டிருந்தாள். கடைசியில் அவர்கள் செல்ல வேண்டிய வண்டி வந்தது. எல்லோரும் ஓடிப்போய் ஏறினர்கள்...அவள் மெதுவாக வண்டிவரை சென்றுவிட்டுத் திரும்பி விட்டாள். எனக்குக் குற்ருல அருவியில் குளிப்பதுபோல இருந்தது... நானும் பக்கத்திலேயே நின்றிருந்தேன். ஆனல் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.,. பிறகு அடுத்தவண்டியிலே அவள் சென்ருள்,... சென்ற பிறகு அவள் அமர்ந்திருந்த இடத்தில் இக்காகிதத்தைக் கண்டேன்.!'

'ஓகோ! உங்கள் பெயர் அவளுக்கு எப்படித்தெரியும்?!

,அதுதான் ஆச்சரியம்! அவளோ கல்லூரி மாணவி.,.நானே... கல்லூரி மாணவன், அவள் பெயரை நான் ஒரு நாள் அவள் தோழியை அழைத்துக் கேட்டேன்! அதுபோலவே அவளும் அறிந்திருக்கலாம்!'

'அவள் விலாசம் தெரியுமா?'

'ஓ! தெரியுமே! எண் 7, அம்மன் கோவில் வீதி, நுங்கம்பாக்கம்...!'

அன்று அத்துடன் சிகிச்சையை நிறுத்திக்கொண்டேன்.

* * *

ஒருவாரம் ஆழ்ந்து சிந்தித்தேன். ஒன்று—இந்துவை அழைத்து வந்து அவளைக் கமலவண்ணனுடன் இணைத்து விடவேண்டும், அல்லது-'இந்து'என்றசித்திரத்தை அவன் மனதிலிருந்து அழிக்கவேண்டும்.!

இந்த இரண்டில் எதையாவது செய்தால் அவனது மனம் தெளிவடையும்!

இரண்டும்கடினமான, வழிகள்தான். இந்துவை அழைத்துவருவதும் அவளை இணைத்துவைப்பதும் எளிதா?இல்லை-கமலவண்ணன் உயிரிலேயே, கலந்துவிட்ட உருவத்தை அழிப்பதுதான் இலேசா? இரண்டும் மிகச்சிரமமான வழிகளே! என்ருலும் இந்த உண்மைக் காதலர்களுக்குக்குறுக்கே நாம்நிற்பதும் கூடாது; எனவே முதல் வழியைப் பார்க்கலாம் என்று நினைத்தேன்!

இந்துவைத் தேடிப்புறப்பட்டேன். அவள் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனல் அதிர்ச்சியும் ஆச்சரியமும் எனக்காக காத்திருந்தன!

4. வென்றதோ விஞ்ஞானம்! தோற்றதோ காதல்!

இந்து மதியின் வீட்டைத் தேடிக் கண்டுபிடிப்பது எளிதாகவே இருந்தது.

மத்தியதர வர்க்கத்தினரின் தெரு. அதிலே முன்புறம் ஒரு சிறிய தோட்டம் அழகான சிறிய வீடு...ஆனல் ஏழாவது எண் என்று குறிப்பிடப்பட்டிருந்த அந்த வீட்டு வாயிலிலே ஓர் பூட்டு 'நந்தி'யாகத்தொங்கிக்கொண்டிருந்தது!

எனது 'முதல்வழி' இவ்வாறு அடைபட்டுவிட்டது; என்ருலும் அந்தப்பூட்டு ஏன் அங்கே தொங்கியது! என்ற கேள்

விக்கு உரிய சாவியை எதிர்க்கடை ஒன்றிலே நான்கண்டு பிடித்தேன்.

'அந்த வீட்டிலே யாரும் இல்லையா, பெரியவரே!' என்று கடைக்காரரைக் கேட்டு வைத்தேன்.

அவர் என்னை மேலும், கீழுமாகக் கண்ணோட்டம் எடுத்தார்.

'நீங்கள்... வரதராஜஅய்யரின் சொந்தக்காரரா?'

"ஆமாம்...ஆமாம்... நான் அவருடைய மைத்துனன்...சிங்கப்பூரில் இருந்து வருகிறேன்.! என்று ஒரு 'போடு' போட்டேன்! அதற்குப்பலன் கிடைத்தது!

'ஓகோ! உங்களுக்குத்தகவலே தெரியாதா... அந்தப் பெண்...!'

'யார்... இந்துமதியா ?'

'ஆமாம்... அது பாவம்... திடீரென்று ஒரு மாதிரி... பிரமை பிடித்தமாதிரி ஆகி...!'

'என்ன...பைத்தியமா,?

'ஆமாம்... வெளியூருக்கு அழைத்துப்போயிருச்கிருர்கள்!'

எனக்கு மூச்சே நின்றுவிடும் போலிருக்கிறது. 'இது என்ன விந்தை! காதல் என்ருல் இதுவன்ரோ காதல்! கண்டார்கள்;பேசியதில்லை; பார்த்தார்கள்; பார்க்குகளிலே சந்திக்கவில்லை! நேசித்தார்கள்; கடிதங்கள் எழுதிக் கொள்ளவில்லை! உயிர்கலந்தார்கள்-என்கிருர்கள்... ஒரே தராசின் இரண்டு தட்டாஞர்கள்... ஒன்றிலே தாழ்வு ஏற்பட்டதும், அடுத்ததிலே தாழ்வு... அப்போ...ஆச்சரியம்! ஆச்சரியம்!,

'மனத்தத்துவ நிபுணர்' என்று பெயர் பெற்ற எனக்கே இது பெரிய அதிர்ச்சியாகி விட்டதே!

கடைக்காரர் எனது கலக்கத்தை'உறவினர், என்ற முறையில் ஏற்பட்டதென எண்ணிக்கொண்டார்! 'எந்தஊருக்குச் சென்றிருக்கிருர்கள்!, என்ற என் வினவிற்கு விடைபகர இயலாத நிலையில் இருந்ததற்குத் தம்மைத் தாமே மிக நொந்து கொண்டார்.

நன்றி கூறிவிட்டு நகர்ந்தேன்.

* o

முதல் வழி அடைபட்டு விட்டது; எனது வருத்தம் மிகுந்த மனப்.போராட்டத்திற்கு இடையே இந்துமதியின் உருவத்தை, கமலவண்ணன் நெஞ்சிலிருந்து அகற்ற ஆரம்பித்தேன்.

கொடுமையும், வஞ்சனையும் நிறைந்த அந்த வழியில் சிகிச்சை செய்தபொழுது எனக்கே நெஞ்சு விண்டு விடும்போல இருந்தது.

'ஹிப்னுடிஸ' முறையில் கமலவண்ணன் 'அறிதுயில்நிலையில்' இருக்கைகையில் 'இந்தத் திருட்டு வேலை' நடந்தது!

'இந்துமதியா? அப்படி யாருமே கிடையாதே?' என்று முதல் நாள் கூறியதும், அவனது மனம் 'கிடு, கிடு' என ஆடிவிட்டது! திடீரென்று 'அறிதுயில் நிலை' கலைந்தது! மலை உச்சியில் இருந்து சரிந்தவன்போல உணர்ந்திருப்பான். பாவம்! மயக்கமாகப் படீரென்று கீழே சாய்ந்தான்!

இம்மாதிரி 12 முறைகள்! 'பன்னிரெண்டு கண்டங்கள்' என்றுதான் சொல்லவேண்டும்! பிறகு மெதுவாக களைத்துப்போன அவன் மனம், என் கட்டளைகளை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தது!

இவ்வாறு, இரண்டு மாத கடுமையான போராட்டத்திற்குப்பிறகு மெதுவாக அவன் என்வழிக்கு வந்தான்!

ஒரு நாள்: 'சிகிச்சை' நடைபெருத நேரம்: 'கமலவண்ணன்! என்ன வரனத்தை அப்படிப் பார்க்கிறீர்கள்? என்று கேட்டேன்.

—'டாக்டர்' (சில நாட்களாக அவன் என்னை அவ்வாறு அழைக்கக் கற்றுக்கொண்டிருந்தான்!) இதென்ன கேள்வி! இயற்கை அழகிலே மனதைப் பறிகொடுத்து இருக்கிறேன்! பாருங்கள்! எவ்வளவு அழகிய மேக நட்சத்திரங்கள்!'

வானத்திலே அவனுக்குக் காட்சி தந்த இந்துமதி அழிந்து விட்டாள்! இல்லை...இல்லை...பாதகனுகிய என்னுல் அழிக்கப்பட்டுவிட்டாள்! விஞ்ஞானம் வென்று விட்டது! தோற்றது, உண்மைக் காதல்!

அம்புஜத்தை மெதுவாகப் பழகவிட்டேன். அடிக்கடி அவள் வந்து போனுள்.

'இந்துமதியைப் பற்றியோ, கமலவண்ணனது கடந்தகால மனநிலை பற்றியோ சிறு குறிப்புக்கூட அவனுக்கு கொடுக்கக்கூடாது!' என்று எல்லோருக்கும் கடுமையான கட்டளை இட்டிருந்தேன்!

"கட்டபொம்மன் யார்?"
"சிவாஜி கணேசன்!"

எம்பெருமானும், நம்வாழ்வாரும் என்னை ஏதேதோ புகழ்ந்தார்கள்! 'கலியுக தன்வந்திரி!' என்றார்கள்;

விரைவில் அவனை வீட்டிற்கும் அழைத்துப்போனார்கள். கமலவண்ணன் எனது அறிவையும், தெளிவையும் எடுத்துச்சென்று விட்டான்!

நான் பைத்தியமாகி விட்டேன். எனது மனச்சான்று என்னைப் பித்தனாக்கி விட்டது!

[கதைமுடிந்த முறை: அந்த இடத்திலே, டாக்டர் நிரஞ்சனனின் கதை முடிந்துவிட்டது. என்றால் ஏதோ குறைச்சொப்பனத்தில் எழுந்து உட்கார்ந்தவனைப் போன்ற ஒருவனது மனநிலையைப்போல, என் மனம் ஆகி விட்டது!

ஆனால், ஒன்றைப் புரிந்து கொண்டேன்! 'மனத்தட்டு' என்ற ஓர் வார்த்தையைக் கேட்டதும், அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணத்தை!]

கண்களைத் துடைத்துக் கொண்டேன்! 'கமலவண்ணன்—இந்துமதியின் தூய அன்பிற்காக என் இதயம் அளித்த ஆசித்துளிகள் அவை!

'டாக்டர் எங்கே போனாரோ?' என்றும் கேள்வி இட்டது மனம்!

* * *

சில வாரங்கள் ஓடிச்சென்றன! நானும் வாழ்க்கை ஓட்டத்திலே எல்லாவற்றையும் மறந்து விட்டேன்!

ஒரு நாள்—அலுவலகத்திலே அமர்ந்து வேலைபார்த்துக்கொண்டிருக்கும் பொழுது—'படா', ரென்று கதவு திறந்தது!

டாக்டர் நிரஞ்சனன்!

தாடியும், மீசையுமாக, அலங்கோலமாக நின்றிருந்தார், டாக்டர்!

'டாக்டர்!'

'மணியம்!'

எனதருகிலே வந்து குழந்தைபோல கட்டிக் கொண்டார்!

6. மனத்தட்டுக்களே வென்றன!

நேரடியாகவே டாக்டர் ஆரம்பித்து விட்டார். 'மணியம்! தோற்றது விஞ்ஞானமா? அன்பா? என்று முடிவைப் பார்க்கவே இங்கு வந்திருக்கிறேன்! நேராகக் காரிலேயே பம்பாயிலிருந்து!'

'பம்பாயா? அங்கே எங்கே போனீர்கள் ?'

'மன அமைதியை நாடி. அங்கே என்னுடன் அமெரிக்காவில் உடன் பயின்ற டாக்டர் குமார்ஸென் இருக்கிறான். நான் அவனைப்பார்க்கத்தான் போனேன்! ஆனால் அவனது 'டிஸ்பென்ஸரி'யில் அவளைப்பார்த்தேன்!'

'யார்? இந்துவையா?!

ஆம். அவளைத்தான்! ஆனால் நானும், குமார்ஸென்னும் கலந்து பேசி சிகிச்சை செய்தும் அவள் பிழைக்கவில்லை! தெளிவு ஏற்பட்டு வருகையில்—ஒரு நாள்—மாடியிலிருந்து, மேலே வானத்தை நோக்கிப்பாய்ந்து விட்டாள்! 'கமல்...கமல்!' என்று கூவியபடி!'

'என்ன?—'நெஞ்சு 'துரிதகதி'யிலே இயங்கியது எனக்கு!

'இது எப்பொழுது நடந்தது?'

'இரண்டு நாட்களாகின்றன! உடனே எம்பெருமானுக்குக் கமலக்கண்ணனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுமாறு கூறி அவசரத் தந்தி அனுப்பி விட்டு, விமானத்தில் இடம் கிடைக்காததால் ஓட்டோடியும் காரிலே வருகிறேன்...புறப்படுங்கள்! போய்ப் பார்க்கவேண்டும்!"

* * *

எங்கள் காரைப்போலவே இதயங்களும் பறந்துகொண்டிருந்தன, கமலவண்ணனின் வீட்டை நோக்கி!

அங்கே—சுடுகாட்டின் அமைதி!

'நடுஹாலி'லே எம்பெருமானார் முகத்தைத் துணியால் மூடி விசித்தபடி அமர்ந்திருந்தார்!

ஓசை கேட்டதும், நிமிர்ந்தார்! 'டாக்டர்...டாக்டர்! உங்கள் தந்தியை முந்தி விட்டான் பாவி! டாக்டர்! குலதெய்வம்போல நீங்களிருந்தும் மண்ணை வாரிப்போட்டுவிட்டான் டாக்டர், டாக்டர்!' என்று குலுங்கிக் குலுங்கி அழுதார்!

வானமே தரையில் இறங்குவது போல இருந்தது எங்களுக்கு!

சரியாக...எந்த நேரத்தில் பம்பாயில் இந்துமதி வானத்திலே இருந்து கமலவண்ணன் தன்னை அழைப்பதாக எண்ணிக்கொண்டு மாடியிலேயிருந்து குதித்தாளோ, அதே நேரத்தில் சென்னையில் கமலவண்ணனும் தன்னை இந்து அழைப்பதாகக் கூறியிருக்கிறான்.

இரண்டு நிமிடங்கள் கழித்து நெஞ்சு வலிப்பதாகச் சொன்னான். அவ்வளவுதான்!

'இந்து...இந்து' என்ற முனகலோடு ஆவி பிரிந்து விட்டது!

அதில் ஓர் ஆச்சரியம்! 'இந்து' என்ற பெயரையே டாக்டரின் சிகிச்சைக்குப் பிறகு உச்சரிக்காதவன், அன்றுதான் முதல், முதலாக அதைக் கூறியிருக்கிறான்!

அம்புஜம் வந்தாள்! அக்காள் இந்துமதியைப் பற்றிய தகவலுண்டா?' என்று அந்த புத்திசாலிப்பெண், துக்கத்தை அடக்கியபடியே கேட்டாள்!

'மனத்தராசின் இரண்டு தட்டுகளும் முறிந்து விட்டன அம்மா!' என்று சொன்னார் டாக்டர்!

எல்லோர் இதயங்களும் பொங்கின! எல்லோரது விழிகளும் நீரைச் சிந்தின!

புடவை போலீஸானால்!
தே! தே! என்ன இது? திடீர்னு தடியாலே அடிக்கிறே?
ஒண்ணுமில்லே... இன்னிக்கி "தடியடி ப்ரயோகம்" ஐ எப்படி செய்யணும்னு கத்தக் கொடுத்தாங்க! அதை இங்கே பழகிப் பார்க்கிறேன்!
நிசத்தை சொல்லு! திடீர்னு உனக்கு ஏது இவ்வளவு பணம்?
என்ன நீ! வரவர என்னை கூட சந்தேகப்படறே!..
தலையெழுத்து அண்ணே என் தலையெழுத்து!
என்ன அண்ணே?
என் சம்சாரம் போலீஸ்லே சேர்ந்து இப்போ "சப் இன்ஸ்பெக்டர்" ஆகி நானிருக்கிற ஸ்டேஷனுக்கே வந்திருக்கு! நான் தினமும் என் சம்சாரத்துக்கே "ஸல்யூட்" அடிக்க வேண்டியிருக்கே! என் தலையெழுத்து!
இதோ பார்! இன்னிக்கு சாயந்திரம் "ரௌடி ரங்கன்" ஆறு மணிக்கு சினிமாவுக்கு வரப்போறானாம் - நாம் அங்கே ரகசியமாகப் பேசியிருந்து அவனைப் பிடிக்கணும்----
ஐயையோ!-- பொம்பளைங்க கிட்டே எந்த ரகசியத்தையும் சொல்லக் கூடாதுன்னு சொல்லுவாங்களே- தெரியாமெ சொல்லிட்டேனே--
வைரம்

என்-அவர்

நா. அனந்தகிருஷ்ணன்

காற்று மெல்ல வீசுகிறது. தென்னையோலை சலசலக்கிறது. இந்த மேகங்களுக்குத்தான் என்ன வேகம்! அவ்வளவு அவசர அவசரமாக யாரைப் பார்க்க ஓடுகின்றன. ஒருவேளை அவறறுக்குக் காதலர்கள் ?... இருக்கும் இருக்கும். வெள்ளை மேகம் காதலி, கார்மேகம் காதலன், இரண்டின் சேர்க்கையிலேதானே ஆகாசம் ?

அதோ அந்தத் தென்னை மரத்திலே கிகி என்று ஒலிக்கிறது ஏதோ ஒரு பறவை. சிறகு அடித்துக் கொள்ளும் சப்தமும் கேட்கிறது. இன்னும் இறுக அணைத்துக் கொள்கிறது போலிருக்கிறது. தன் இணையை. இருக்கட்டும்... இன்பமாகச் சேர்ந்து வாழட்டும்... இணைந்து வாழ்வதுதானே இன்பம்... அதிக தூரம் போவானேன் .இதோ இதோ இந்தத் தென்னை மரமும் மண்ணும் எப்படிச் சேர்ந்து இருக்கின்றன ! அவற்றிடையேதான் என்ன பற்று ! என்ன பிடிப்பு ! பாசம் !

அவர் !

எவர் என்று கேட்கிறீர்களா ? அவர் தான். யாரென்று சொல்லி உங்களுக்குப் புரிய வைப்பது ? அவர் என்றால் அவர்தான். என்னுடைய கற்பனையிலும் கனவிலும் நனவிலும் உள்ளும் வெளியும் நான் உருவகித்துள்ள அவரை நான் உங்களுக்கு எப்படிச் சொல்வது. 'என் அவர்' என்பதற்கு மேல் எதுவும் சொல்லத் தெரியவில்லை.

உங்களுக்கு அவர் வெகு ஸாதாரண மனிதராகத் தெரியலாம் சதையும் எலும்பும்தானா மனிதன் ? உள்ளே ஏதோ ஒன்று—மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்ற அந்த ஒன்று—அந்த தனித்வம் அது இல்லையா ?

என்னைப் பொறுத்த மட்டில் அவர் மனிதரே இல்லை. ஏன் ? உருவமுள்ள ஒன்றே அல்ல என்பேன். சாந்தம், அடக்கம், பொறுமை, தீவிரமான புத்தி, சாதுர்யம் இத்தகைய குணங்களின் தொகுப்பு அவர். அவர் முகத்தை இல்லை இல்லை நானே தவறு செய்கிறேனே. சதையிலும் எலும்பிலும் என்ன இருக்கிறது, முகம் என்றால், முகம் என்று நீங்கள் சொல்லுகின்ற அந்தப் .பிரதேசத்தில் — தவழுகின்ற சாந்தம் அதை என்னவென்று வருணிப்பேன் ? கண்கள் அல்ல அவை. கீதம் எழுப்பும் வீணை—தன் சோக வரலாறு முழுவதையும் குரலிலே குழைத்துத் தருகின்ற குயில்... இப்படியெல்லாம் சொல்லலாம் அவற்றை, ஆழ்ந்த துயரத்தின் சாயை படிந்திருந்தது அவற்றில். சிரிப்பு துள்ளி விளையாடியது. தீர்மானம் தொனித்தது, சலனத்தின் அலைகள் வீசின. மொத்தத்தில் அது ஒரு புதிர். அந்தக் கண்கள் என்றும் புரியாத புதிர்.

வீணை என்று சொன்னேனே - அது வாஸ்தவம்தான். வாசிக்கத் தெரியாதவர்கள் — ஏன் அரைகுறையாக வாசிக்கத் தெரிந்தவர்கள் என்று கூடச் சொல்லலாம் - வீணை நரம்புகளில் எப்படியோ கைவைத்து ஒன்றுகிடக்க மற்றொரு சப்தம் வரும்படிச் செய்வார்களே அந்தமாதிரி...புரியாத ஒலி அலைகளை எழுப்புவதாக வீணையில் குற்றம் காண்பது போல் அவருடைய கண்களின் வாசகத்தை எப்படி எப்படியோ புரிந்து கொண்டேன் நான். சிறு குழந்தையால் வேதத்தைப் புரிந்து கொள்ள முடியுமா ?

என் இளம்வயதில் எத்தனைபேரிடம் பழகி இருக்கிறேன். எங்கள் வீட்டுப் பசுங்கன்று......நெற்றியில் வெள்ளைப் புள்ளியோடு அது துள்ளிக் குதித்து ஓடும்பொழுது சேர்த்துக் கட்டிக் கொண்டு அதற்கு எத்தனை முத்தங்கள் அளித்திருக்கிறேன். மலர்ந்த ரோஜா புஷ்பம்...அப்பொழுது பறித்த தாமரை இவற்றைக் கண்டால் எனக்கு ரொம்ப ஆசை. அவற்றை முகர மாட்டேன். முத்தமிடுவேன்......என்

அண்ணாவின் குழந்தை - அழகு - கொள்ளை அழகு. அதை முத்தமிட்டு முத்தமிட்டு......குழந்தை அழ ஆரம்பிக்கும் வரையிலும் விடமாட்டேன்.

இந்த உலகத்தில் எனக்கு வேறு எதுவும் வேண்டாம். வேறு யாரும் வேண்டாம். அவர் — அவர்தான் வேண்டும். என்னை விழுங்கிவிடுகிற மாதிரி பார்ப்பாரே அந்தப் பார்வை - அது வேண்டும். மது-நான் குடித்தது கிடையாது. அது நாவில்பட்டதுமே மண்டை சுழலுமாமே. கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இதே இவருடைய பார்வை. மது இதைவிட வலிமையுடையதா? இருக்காது.

'யாரடீ அது?' அம்மாவின் குரல்

'நான்தான் அம்மா'

'யாரு நீயா? இந்த நேரத்தில் இங்கே என்னடீ செய்திண்டிருக்கே?'

'சும்மா உட்கார்ந்திண்டிருக்கேன்'

'சும்மா உட்கார்ந்திண்டிருக்கிறதுக்கு இடம் கிணற்றுக் கைப்பிடிச் சுவரா?'

'சும்மாத்தான்மா உட்கார்ந்திண்டிருக்கேன்'

'நன்னா இருக்குபோ'

நிழலாடுகிறதே அப்பாவா?

'யாரு கிட்டடீ பேசிண்டிருக்கே?'

'நம்ம இவகிட்டதான்...உங்க பெண்'

'இந்த நேரத்திலே இங்க என்ன செய்யறா?'

'ஒன்னுஞ் செய்யலே அப்பா'

'அவனை நெனச்சிண்டே இருக்கயோ? அப்படி என்னடீ இருக்கு அவனிடம்? நானுந்தான் பார்த்திருக்கிறேனே, தோலும் துருத்தியுமா'....

'அப்பா....'

அந்த இடத்தைவிட்டு எழுந்து உள்ளே சென்றேன்.

நட்சத்திரங்களின் லாவண்யத்தை கோடிக் கணக்கான மைலுக்கப்பால் வாழும் பாமரனால் அறிய முடியாது.

ஆனால் அவர்....

தென்றல் வீசும் பொழுதும் நிலவு திகழும் பொழுதும் நீல வானத்தில் வெண்முகில் குழந்தைகள் தவழ்ந்து செல்லும்பொழுதும், சாயங்காலமும் சந்தியா காலமும் கூடும்பொழுதும், பச்சைக் கிளிப்பிள்ளைகள் குரல்காட்டிச் செல்லும்பொழுதும் மல்லிகை மலர்கள் பூத்துக் குலுங்கும் காலத்திலும் யாருடைய நினைவு என் உள்ளக் கடலில் பேரலைகளை எழுப்புமோ. அந்த நாதஸ்வரூபம், அந்த ஒளிக் குவியல் அந்த நறுமண உருவம்.....

ஆம் அவர், இனிய குரல்களின், நல்ல வார்த்தைகளின் தொகுப்பு — நல்ல காட்சிகளின் தொகுதி-இப்படித்தான் எனக்குப் பட்டார் அவர். அவர்..... என் அவர்...என் கைகளுக்கு எட்டாத இடத்தில், என் ஒலிக்கு எதிரொலி கொடுக்க இயலாத தூரத்தில், என் கண்களால் காணமுடியாத எங்கோ. துடிக்கின்ற என் இதழ்களை துடித்துக் கொண்டே இருக்கும்படி விட்டு விட்டு எங்கோ எங்கோ போய்விட்டார்.

இன்றோடு மூன்று நாளாயிற்று.

16. புறப்படு, போவோம்! புதியன காண்போம்!

"வாழ்க்கை, நாடகம் எழுதுவதைப் போன்றதல்ல. நாம் நினைத்ததையெல்லாம் ஒழுங்காகவும், விரும்பியவாறும் அடைந்து விட முடியாது. வாழ்க்கைப் பாதையே விநோதமானது. அது காரணம் காரியமின்றி நம்மை நடுத் தெருவில் நிறுத்திவிடும். உணர்ச்சி வசப்படுவதற்குக் கூடப் பொழுது அளிக்காது."

—ஹெலன் மாக்இன்னஸ்: "ரோமுக்கு அப்பால்"

"கத்தியைக் கையிலே எடுத்துக் கொண்டு, உணர்வு குறைந்த பாகங்களில் பொழுதைக் கழிக்காமல், எனது ஆராய்ச்சித் திறனின் முழு சக்தியோடு நுழைந்தேன், சமுதாயத்தின் உயிரிழையோடும் உடலின் நெஞ்சு வரை சென்று பார்க்க!"

—ஆங்கிலக் கவி வில்லியம் வோர்ட்ஸ்வொர்த்.

மின்னல் வேகம், மின்சார வேகம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அந்த வேகத்தில் காரியங்கள் நடைபெற்றுவிட்டன.

பருந்தால் கொத்திச் செல்லப்பட்ட கோழிக்குஞ்சு, அதன் நல்வினை காரணமாகத் திடீரென்று பருந்தின் பிடி நழுவித் தரையிலே விழுந்து தாய்ப்பறவையின் அன்பான அணைப்பை அடுத்த கணத்திலேயே அடையமுடியுமானால் எவ்வளவு மகிழ்ச்சி அதன் உள்ளத்திலே ஊற்றெடுக்கும்? தாராவிற்கு அத்தகைய உணர்ச்சி அப்பொழுது ஏற்பட்டது.

புதிர்களுக்கு விடை கண்ட மகிழ்விலும், புதிய செய்தியொன்று கிடைத்த பரபரப்பிலும், தனது தாராவை சந்திக்க ஆவலோடு விரைந்தோடி வந்த பேராசிரியருக்கு, தாரா திருவாளர், ஏகாம்பரத்தைப் பார்க்கச் சென்றிருக்கிறார்கள் என்றதும் சிறிது ஏமாற்றமாகவே இருந்தது,

'மேலே என்ன செய்கிறது? என்று அவர் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே, அவரது கால்கள் தாமாகவே ஏகாம்பரத்தின் வீட்டை நோக்கி நடைபயில ஆரம்பித்தன.

அங்கே சென்றால்......நல்லதோர் வேளையிலே தான் அங்கே வந்திருப்பதை உணர்ந்தார் அவர்.

பசுத்தோல் போர்த்த புலி யொன்றைப் பார்க்க முடிந்தது அவரால்; நீறுபூத்த நெருப்பான தனது நெஞ்சிற்கினியாளை உணர முடிந்தது அவரால்.

'பளார்' என்ற ஓசையோடு ஏகாம்பரத்தின் கன்னத்திலும், எத்தர்களான ஆண்களின் நெஞ்சத்திலும் விழுந்த அறை ஆனந்தரங்கத்தைப் புல்லரிக்கச் செய்தது,

ஓசையேதும் செய்யாது, 'அடுத்து என்ன நடக்கிறது?' என்று பார்ப்பதற்காக, அமைதியாக அவர் நின்றிருக்கலாம். ஆனல் அவரது 'நெஞ்சின் ஒரு பகுதி' மாபெரும் கொந்தளிப்பிலே சூருவளியாக இயங்கி, பாராட்டுதற்குரிய ஓர் செயலைச் செய்து முடித்த அந்தநேரத்தில், அவரது உள்ளம் எப்படி உணர்வின்றி இருக்க முடியும்?

'சபாஷ்! தாரை! சபாஷ்!' என்ற வார்த்தைகளை உதிர்த்தது, வாய் வழியாக நெஞ்சம்!

தாரை நிமிர்ந்தாள்; வெளிறிப் போயிருந்த முகத்திலே, இரத்த நாளங்கள் துரிதகதியிலே இசைபாடின. மாமழை கண்ட மயிலானுள் அம்மங்கை!

'அத்தான்!'

'தாரை!'

நீதியின் பிடிப்பிலே நிரபராதிகாணும் இன்பத்தை அடைந்தாள் அந்நேரிழை!

ஏகாம்பரமோ, இடிவிழுந்த மரம் போல நின்ருர்; அவமானப்பட்டதும், அதை அடுத்தவர் பார்த்துவிட்டதும் அவரது நெஞ்சைச் சுட்டன!

சில விநாடிகள்...நீதியும், அநீதியும் பார்வைகளைப் பறிமாறிக் கொண்டன!

ஆனந்தரங்கத்தின் தோளிலே துவண்டு இருந்த தோகையின் விம்முதல் ஒலி ஒவ்வொன்றும் அவரது விழிகளிலே வேகத்தைப் போதையாக ஏற்றிக் கொண்டே சென்றது! அவரது நெஞ்சிலே விழுந்த தாரையின் ஒவ்வொரு கண்ணீர்த் துளியும், அக்கினித் திராவகமாகச் சுட்டது! அந்தச் சூட்டின் வெம்மை அவரது நாக்கின் நுனியிலே சேமிக்கப்பட்டது, அநீதிக்குப் பாடம் கற்பிப்பதற்காக!

எரிமலையின் வாய்போல, கொதித்தது தாரையின் பொன்னுடல்! அக்கொதிப்பு, பேராசிரியரின் மேனியெங்கும் பாய்ந்து, கால்களிலே வந்து தேங்கி நின்றது! கால்கள் துடித்தன, கயவனின் கழுத்தை நெறிக்க!

ஆனந்தரங்கம், கொலையாளியாக மாறியிருப்பார், அவரது பகுத்தறிவும் வெளியே சென்றிருந்தால்....நல்ல வேளையாகப் 'பளார்' என்று தாரை செட்டியாருக்கு அளித்த பரிசு, அவரது பகுத்தறிவைக் காப்பாற்றியது. 'தாரை தான் தண்டித்துவிட்டாளே?' என்று வாதிட்ட பகுத்தறிவு காலி செய்யவில்லை; மனத்திலே காலூன்றிக் கொண்டது!

ஏகாம்பரமும் அதற்கு உதவி செய்தார்! அவரது கன்னத்திலேபட்ட அடி, அவரை நிலைகுலையச் செய்துவிட்டது! வெறியும், வேகமும் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு விட்டான்! கொலைப் பீடத்தில் நிற்கும் பலி ஆடாகி நின்ருரவர்!

எதிரி எதிர்ப்புக் காட்டாவிட்டால், நேரிய வீரர்கள் போரிலே புகுவதில்லை பேராசிரியர் இதற்கு விதிவிலக்கல்ல!

செயலாகப் பரிணமிக்காத ஆத்திரம், சொற்களாக வெடித்தது!

'என்ன மிஸ்டர், ஏகாம்பரம்! ரொம்பப் பிரமாதமா நடந்துகொண்டீர்களே! உத்திராட்சப் பூனைகள் கையிலே பணமும், அதிகாரமும் கிடைத்தால் என்ன ஆகும் என்று நிருபித்துவிட்டீர்களே!'

ஏகாம்பரத்தின் இறங்கிய தலை நிமிரவேயில்லை!

'என்ன ஊமையாகி விட்டீர்கள்? 'தர்மத்தின் காவலர்' என்ற பட்டம் பெற்ற பெரியமனிதரே! ஆசிரமம் நடத்தித் தொண்டு செய்யும் 'அநாத ரட்சகர்' என்று போற்றப்படுபவரே! ஆயிரம் ஆலயங்களின் ,டிரஸ்டி!' அறநிலையங்கள் பலவற்றின் அதிகாரி! என்று புகழப்படுபவரே! இதுதானு உமது திருத்தொண்டு? கோபுரம் என்று குப்பைமேட்டைப் பார்க்குமளவிற்கு குருடாகிவிட்டதே இவ்வுலகம்!'

பேராசிரியருக்கு அலுத்துவிட்டது. சாக்கடையில் கல்லெறியும் பணியைத் தாம் புரிவதாக எண்ணலானுர் அவர்.

'தெரிந்து கொள்ளுமய்யா...இந்தக் கணம் முதல்... தாராதேவி ஆசிரமத் தலைவியல்ல...இந்த முடிவை நான் விரைவிலே எடுக்கத் தூண்டிய உமக்கு எங்கள் நன்றி...வா...தாரா...போகலாம்'

வெளிநடந்தார்கள் — அவர்கள். 'இன்பவுலக'த்திலிருந்து அருளும், அன்பும் அவர்களோடு சென்று விட்டதாகச் சிந்தித்தார் ஏகாம்பரம். தனது மதிப்பும், மரியாதையும் வெளியேறிவிட்டதாக விசித்தார். அந்தச் 'சிறிய உள்ளம்' படைத்த பெரிய மனிதர்.

* * *

உயிர்த்துடிப்போடு இயங்கிக் கொண்டிருந்த நகரத்திலே, அவர்கள் அமைதியாக நடந்து சென்றுகொண்டிருந்ததாகக் காணப்பட்டார்கள்!

அவர்கள் உள்ளங்களிலோ பெரும், பெரும் போராட்டங்கள். ஏறத்தாழ இருவரது கருத்துக்களும் ஒரே திசையிலேதான் ஓடிக்கொண்டிருந்தன.

பேராசிரியர் எண்ணினார்: "வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானது! அரை மணி நேரத்திற்கு முன்பாக, இவ்வளவு துணிவாக நகரத்திலே என்னுடன் நடந்து வருவதற்குத் தாரா மனம் ஒப்பியிருப்பாளா? திடீரென்று ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள், எங்கள் இருவரையும் பிணைத்தன. சோதனையிலும், சிக்கலிலும் அந்தப் பிணைப்பு இறுகுகிறதே ஒழிய அறுவதாகக் காணோமே! நடுத்தெருவிற்கு நாங்கள் வந்து விட்டோம். இருவரும் எதிர்பார்க்காதநேரத்திலே!'

தாரா நினைத்தாள், 'இது என்ன ஆச்சரியம்! ஏதோ நாடகத்தில் நடப்பது போல இருக்கிறதே! திடீரென்று வேலை இழந்து விட்டேன்! ஆனால் அதனால் வேதனை உணர்வு எதுவும் ஏற்படவில்லையே! எத்தனையோ ஆண்டுகளாக, உயிரோடு கலந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருந்த எனது ஆசிரமத்தைத் துறந்தேன்! அன்புக் குழந்தைகளை மறந்தேன்! நடுத் தெருவிற்கு வந்துவிட்டேன்!'

ஆனந்தரங்கம் ஏதோசொல்ல ஆரம்பித்தார்: 'தாரை! வாழ்க்கை '

தாரை, அவர் தொடங்கியதை முடித்தாள்: 'விசித்திரமானது தான்!'

இருவரும் பெரு மூச்செறிந்தார்கள், பிறகு இருவரும் புன்னகைத்தார்கள். இவரது எண்ணங்களும் ஒரே மாதிரி ஓடுவதைக் கண்டு மலர்ந்த உள்ளங்களின் மலர்ச்சியே அந்தப் புன்னகை! பிறகு சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. உள்ள மகிழ்விலே கண்ட தன்னிறைவிலே வார்த்தைகளை மறந்தார்கள்.

'எங்கேயாவது சென்று கொஞ்ச நேரம் அமர்ந்தால்...'

'அமைதியாகப் பேசலாம்...'!

பூங்கா ஒன்று அழைப்பு விடுத்தது, அவர்களது கண்களைக் கவர்ந்த தனது விளம்பரப் பலகையால்! நுழைந்தார்கள் இருவரும்.

* * *

மாலைப் பொழுது எழுத்தாளர்கள் வர்ணிப்பது போல் தங்க முலாம் பூசிக் கொண்ட சூரியவட்டம், வேலை முடிந்து ஓய்வு எடுக்கச் செல்லும் வேளை.

வானொலிப் பெட்டியொன்று அலறிக் கொண்டிருந்தது. அதை யார் கேட்கிறார்கள்?

தம்மை மறந்து குதித்தோடி, ஆடிப்பாடும் குழந்தைகள். அவர்களைப் பார்த்துக் குழந்தைகளாகிவிட முயற்சிக்கும் வாழத் தெரிந்த பெரிய மனிதர்கள். 'காதலைத் தவிர வேறெதுவுமே உலகிலே இல்லை' என்று கருதும் பைத்தியக்காரக் காதலர்கள். இப்படிப் பல ரகத்தினர் அந்தப் பூங்காவிலே காணப்பட்டார்கள்.

ஆனந்தரங்கம் தனிமையிலே இனிமை காண்பவர்; தாரையோ சந்தடியில்லாத ஆசிரம அமைதியிலே வளர்ந்தவள்; ஆனால் இருவர் உள்ளங்களும் இப்பொழுது அமைதி இழந்திருந்ததால், மக்கள் கடலிலே மூழ்க விரும்பின !

தனிமையாக ஓரிடத்திலே சென்று அமர்ந்தார்கள் இருவரும். போலிக் கூச்சங்களை உதறிவிட்டவர்கள்; எனவே மனதில் களங்கமின்றி அருகருகே அமர்ந்தார்கள்.

ஆனந்தரங்கம் பேசினார் ! 'தாரை ! நாம் எதிர் பார்க்கிறபடி எதுவுமே வாழ்க்கையில் நடப்பதில்லை. கணத்

துக்குக் கணம் சிதறிடும் கடல் அலைகளைப் போல நமது எண்ணங்கள் உடைந்து போவதைப் பார்க்கிறோம். அதற்காக எல்லாம் வருத்தப்படுவது கூடாது! இதோ பார்! இது ஒரு அதிசயம் தான்! இன்று காலை தான் நான் மாநிலக் கல்லூரி வேலைக்குத் தலை முழுகினேன்!'

'என்ன வேலையை இராஜிநாமா செய்து விட்டீர்கள்! ஏன்?...மிகவும் அவசரப்பட்டு விட்டீர்கள்!

'அவசரம் ஒன்றுமில்லை தாரை! இலண்டன் இராயல் விஞ்ஞானிகள் கழகத்தினர் என்னைச் சில பிரசங்கங்கள் புரியவும், மனோதத்துவப் பேராசியராகச் சில காலம் இங்கிலாந்து பல்கலைக் கழகத்தில் பணியாற்றவும் அழைத்திருக்கிறார்கள்...அது பற்றிய தந்தி கிடைத்ததும், இராஜிநாமா செய்ய முடிவு செய்தேன்... மன்னித்துக் கொள்...உன்னிடம் கேட்டிருக்கலாம்...!



தாரை, கதிரொளி கண்ட கமலமாகமுகம் மலர்ந்தாள். தனது துன்பங்களை எல்லாம் மறந்தாள்...... தொல்லைகளையெல்லாம் நினைவிலிருந்து அகற்றி விட்டாள் ... அவளது ஆனந்தரங்கம் உலகப் புகழேணியில் ஏறிக்கொண்டு இருக்கும் மேதை!

'அத்தான்...எவ்வளவு நல்ல செய்தி சொன்னீர்கள்?' என்று துடித்தாள்,

பிறகு...சில நிமிடங்களில் மீண்டும் அவள் முகம் கவலைக்குறி காட்டியது... முகிலிடையே ஒளிந்து மறைநேர மதியானது அவள் வதனம்.

'அவர் இங்கிலாந்து சென்றால்...?' ஆனந்தரங்கம் புரிந்து கொண்டார், இம்மாற்றத்தின் பொருளை.

'ஆனந்தரங்கத்தோடு, மிஸ். தாரா தேவியும், மிஸஸ். தாரா ஆனந்தரங்கமாகப் புறப்படுவார்கள், இங்கிலாந்திற்கு! என்ன சரிதானே?'

மத்தப்பூப் புன்னகை ஒன்றை உதிர்த்தது, தாரையின் செவ்வரளி அதரங்கள்!

'உம்...இப்பொழுது தான் நன்றாக இருக்கிறது...பழரசக் கோப்பை மீது ஊற்றிய 'கீரிம் ஐஸ்' மாதிரி!...சரி... உன் வேலையையும் உன் சார்பில் நானே இராஜினமா செய்தேனே? அது சரிதானே?'

'பிறகு வேறென்ன செய்வது? நான் ஆசிரமத்திற்குச் சென்று விடை பெற்றுக்கொண்டு வருவேன்...எல்லாம் முறைப்படி நடக்கும் வரை ஏதாவது ஒரு தோழியின் வீட்டிலே தங்கியிருப்பேன்!

'சரிதான்...அதற்கு முன்பாகச் சில வேலைகள் உள்ளன...நாம் நாளை ஏற்காடு செல்கிறோம்!'

'ஏற்காடா?...அங்கே எதற்கோ?'

'அங்கே தான் நமது ஆராய்ச்சிக் கருப் பொருள்கள் — இரட்டைக் குழந்தைகள்-கொண்டு போகப்பட்டிருக்கின்றன!"

'உங்களுக்கு எப்படித் தெரியும்?'

'அதெல்லாம் விளக்கமாகப் பிறகு சொல்கிறேன்...ஏற்காட்டிலே உன்னைப் பற்றிக்கூட பல குறிப்புக்கள் கிடைக்கும்!'

'என்ன?'

'ஆம்; உனது 'பிறப்பும், வளர்ப்பும்' பற்றிய செய்திகள்; அவற்றை அறிந்த பிறகு தான் நாம் இந்தியாவை விட்டு நிம்மதியாக நீங்க முடியும்!'

தாரை தலையசைத்தாள்; 'தன் மீது எவ்வளவு அக்கறை காட்டுகிறார்!' என்றெண்ணியதும், கண்களில் நீர் துளித்தது...'புறப்படு-போவோம், புதியன காண்போம்!' என்ற அவரது அழைப்பு அவளது நெஞ்சத்திலே இன்பமாக இனித்தது!

* * *

தாரையும், ஆனந்தரங்கமும் பேசிய இச் செய்திகளெல்லாம் அரைமணி நேரத்திலேயே, கதிரேசன் காதுகளை எட்டின, அவர்கள் அருகிலே குருட்டுப் பிச்சைக்காரன் வேடத்திலே இருந்த போலீஸ்காரன் மூலம்!

அவரும் ஏற்காட்டிற்குப் புறப்பட முடிவு செய்தார்! வளைந்து, வளைந்து உயரச் செல்லும் மலைப்பாதையில் தானும், மாலாவும் முன் ஸீட்டில் அமர்ந்து 'ஜீப்' காரில் செல்லும் காட்சியை மனதிலே தீட்டியபடி நாக்கைச் சப்புக் கொண்டார், சப்-இன்ஸ்பெக்டர் கதிரேசன்!

(வளரும்)

பருகுங்கள் :

பழரசம்

பிறக்கும் போதே பெருமையுடன் பிறக்கின்றனர் சிலர்! சிலர் பெருமை யடைகிருர்கள்! சிலர்மீது பெருமை சுமத்தப்படுகிறது" என்றுர் ஆங்கிலப் பெருங் கவிஞர் ஷேக்ஸ்பியர்! இவர் களிலே முதல் பிரிவைச் சேர்ந்தவர் ஆசிய ஜோதி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு!

தவப்புதல்வர்!

இந்தியாவின் தவப் புதல்வராகப் பிறந்து, இன்று உலகின் ஒளி விளக்கா கப் பிரகாசிக்கின்ற பிரதமர் நேருஜி, இளமையில் தந்தை மோதிலால் நேரு வைப் போல பெரிய மனிதராகவேண் டும் என்று விரும்பினுர். இன்று மோதி லால் உயிருடன் இருப்பாராயின் அவர் தம் தனையனைப் போல ஆகவேண்டும் என்றே விரும்புவார் என்பது நிச்சயம்!

மாணிக்கம்!

ஜவஹர் என்ருல் 'மாணிக்கம்' என்று பொருள்' ஆம்! அவர் இந்தியா வின் மாணிக்கம்தான்! ஜவஹர் என்ற வார்த்தை நேருவின்பெயராகஅமைந்து விட்டதை நேருஜியின் மனைவி திருமதி கமலாநேரு அவர்கள் கூடக் கிண்டல் செய்வதுண்டு.

தமாஷ் !

"இந்தியாவின் மாணிக்கமே! அந்தச் சர்க்கரைத் தட்டை இப்படிக் கொஞ்சம் தள்ளுங்கள்!" "தியாக மூர்த்தி அவர்களின் திரு முக க்ஷவரத் திற்கான வென்னீர் ரெடி!" இப்படி யெல்லாம் கமலாநேரு கிண்டல் செய்து மகிழ்வதுண்டு.!

உண்மை!

இப்போது சண்டமாருதம் போல சொற்பொழிவுகள் நிகழ்த்திவரும் இந் தியப் பிரதமர், :இலண்டனில்படிக்கும் போது மேடையேற நடுங்கிக் கொண்டு பேச மறுத்துவிட்டதற்காக அபராதம் செலுத்தினுர் என்ருல் நீங்கள் நம்புவீர் களா? ஆனுல் இது உண்மை!

ஒரு சிறந்த வக்கீலின் புதல்வராக 70 ஆண்டுகளுக்கு முன் அலஹாபாத் தில் பிறந்த நேரு லண்டனில் கல்வி பயின்ருர். காந்திஜியிடம் அரசியல் பயின்ருர்.

அற்புதமேயாகும் !

சட்டம் படித்து படாடோப வாழ்க்கை நடத்தி விட்டுத் துள்ளித் திரியும் இளம் வயதிலே கள்ளங்கபட மற்ற உள்ளத்தினரா்ய் இந்தியா திரும் பிய நேரு தீவிரமான அரசியல் வாதி கள் இந்தியாவினில் தோன்ரு திருப் பதைக் கண்டு மனம் வருந்தினுர்.

இந்தியாவுக்கு "டொமினியன் அந் தஸ்து" போதும் எனக் கூறப்பட்ட காலம் அது. ஆனுல் 1927 ம் ஆண் டில் சென்னையில்டாக்டர் அன்சாரியின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில்'சுதந்திரம்' என்ற வார்த் தையை நேரு உபயோகித்தார், மித வாதிகள் அதிர்ந்தனர். நேரு இளைஞர் களின் புரட்சிக் குரலாக உயர்ந்தார்.

தந்தை மோதிலால் மிதவாதி! தன யன் ஜவஹர் தீவிரவாதி! 1929ல் கல் கத்தாவில் தந்தையின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் நேரு தந்தையையே எதிர்த்து விளாசி விட்டார். பாருங்களேன் துணிச்சலை!

ரஷ்ய. பிரஞ்சுப் புரட்சியைப் போல இந்தியாவிலும் நடத்திக் காட்டவேண் டும் என்று துடிதுடித்து நின்ற இளைஞர் நேருவைகாந்திஜீ தம் வாரிசாகத் தேர்ந் தெடுத்து தம் அன்பெனும் ஆயுதத் தால் நேருவின் உணர்ச்சி வேகத்தைக் கூர் மழுங்கச் செய்த விதம் அற்புதமே யாகும்!

நேருஜீ படித்த நூற்கள். எழுதிக் குவித்த நூற்கள் மிக மிக அதிகம். மகள் இந்திராவுக்கு அவர் எழுதிய கடிதங்கள் உலக வரலாற்று இலக்கிய மாகி விட்டன. அவை எத்தனையோ மொழிகளில் ஆக்கப்பட்டுவிட்டன.

குழந்தை...!

நேரு வயதால் முதுகிழவராகி விட் டார் என்பது என்னவோ உண்மை! ஆனுல் அவர் குதிரைச் சவாரியை விட் டாரா? பந்தாடுவதை விட்டாரா? நீந்தி விளையாடுவதை விட்டாரா? தலைகீழாக நின்று சிரசாசனம் செய் வதைத்தான் விட்டாரா?

நேருவை ஒரு கிழவர் என்று கூறு வது சரியல்ல. ஆனுல் ஒரு குழந்தை என்று சொல்லலாம். அவரைக் குழந் தைகளுடன் விட்டுவிட்டால் எவ்வளவு குஷி அவருக்கு! உலகையே மறந்து விடுவார்!

அவர் புகழையோ, பதவியையோ, விளம்பரத்தையோ, பத்திரிகை நிருபர்களையோ விரும்புவதில்லை. எனினும் அவை அத்தனையும் அவர் வீட்டு வாசவில் காத்துக்கிடக்கின்றன அவருக்காக? என்ன விந்தை உலகம் இது?

நேருஜீயின் முகத்தில் ஒரு ஜீவகளை ஜொலிக்கிறது. அவருடைய தலை மனித சிருஷ்டிகளிலேயே விசேஷ அமைப்புடன் அமைந்திருக்கிறது.

முன்கோபக்காரர்!

நேருவுக்கு வெடுக்கென்று கோபம் வந்துவிடும். பொறுமையிழந்து சிடுசிடுப்பார்! அவர் சிறுவராக இருக்கும் போதே கிருஷ்ணுவும், விஜயலக்ஷ்மியும் சரியாகப் பாடம் படிக்கா விட்டால் புத்தகங்களை முகத்தில் வீசியெறிந்து அறையை விட்டே வெளியில் விரட்டியடித்து விடுவார். பிறகு அவர்களிடம் மன்னிப்புக் கோரவும் தயங்க மாட்டார்.

ஆசிய மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த போது, கூச்சல் போட்டுக் கொண்டிருந்த பேர்வழிகளைக் கவனித்துவிட்ட நேரு மேடையிலிருந்து தாமே இறங்கிச் சென்று, கூச்சல் போட்டவர்களை, நாற்காலியிலிருந்து கீழே தள்ளி, அந்த நாற்காலியைக் கொண்டே அவர்களை கூட்டத்துக்கு வெளியே விரட்டி விட்டார்.

ஒரு சமயம் ஒலிபெருக்கி மக்கார் செய்தபோது அதை நொறுக்கித் தள்ளினுர் நேரு! பொறுமை இழக்கும் இத்தகைய மனிதர் இந்திய விடுதலைக்காக மொத்தம் 13 ஆண்டுகள் சிறை வாழக்கைக் நடத்தினுர் என்ருல், அது சாதாரண விஷயமா?

அன்ருட வாழ்க்கையில்!

எளிய வாழ்வு வாழும் அவர் காலையில் 7 மணிக்கே படுக்கையை விட்டு எழுந்து விடுகிருர். இரவு 2 மணிவரை அவருடைய அறையில் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். மௌலானு ஆஜாத் மறைந்த பிறகு இப்போது அவருக்கு நெருங்கிய நண்பர் என்று சொல்லத் தக்கவர் யாருமேயில்லை. இப்போதெல்லாம் அவர் அதிகமாகச் சிகரெட் புகைக்கிருர்.

அவர் எப்போதும் தமது ஷெர்வாணியின் முன்பக்கத்தில் ஒரு சிவப்பு 'ரோஜாமலரை' அணிந்து கொள்கிருர். இதை மகள் இந்திராவே தினசரித் தயார் செய்து வைக்கிருர்.

வைதீக விரோதி!

நேருவின் புதல்வி இந்திரா ஒரு பார்சியான 'பிரோஸ் காந்தியை மணக்க விரும்பிய போது தடுக்கவில்லை. ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார்.

நேருவின் வீட்டு வேலையாட்களில் பலர் அரிஜனங்கள்! இது காந்திஜீ செய்த வேலை! எனவே வைதிக இந்துக்கள் அவர் வீட்டில் தண்ணீர்கூட அருந்துவதில்லை. அதைப்பற்றி அவர் கவலைப்படுவதுமில்லை.

இந்தியாவைக் கொண்டு நேருஜீ பெருமை அடைவதைவிட, நேருஜீயைக் கொண்டு இந்தியா அதிகம் பெருமை அடைகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது!

—திருமால்.

திருநிறைச்செல்வன் **இலட்சுமி நாராயணன் பி.காம்.** அவர்களுக்கும் திருநிறைச் செல்வி **பர்வதத்**திற்கும் அண்மையில் திருமணம் சிறப்பாகக் கும்பகோணத்தில் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

திரும்பிப்பார்:

சென்ற ஆண்டில் தமிழ்ப் படங்கள்

சாண் ஏற்றம், முழம் சறுக்கல்— இந்த லக்ஷணத்தில் இருக்கிறது இன்றையத் தமிழ்த் திரைப்படத் தொழிலின் வளர்ச்சி.

'அ'னா விலாசம் இராது; ஆனல், 'ல' காரத்தில் புழங்குபவர்களின் வரிசை இத்தொழிலில் வளர்ந்து கொண்டிருப்பதென்னவோ உண்மை. கடந்த ஓராண்டைத் திரும்பிப் பார்த்தால், எக்கச்சக்கமாகப் புதுப்புது கம்பெனிகள். கச்சா பிலிம் கட்டுப்பாடுக் கிடையே பிறந்தவை பல!

சென்ற ஆண்டு தென்னிந்தியாவில் தயாரான படங்கள் 120. அவற்றில் தமிழ் மட்டும் 61. இவ்வருடம் போகிற போக்கைப் பார்த்தால் அதையும் மிஞ்சிவிடும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். தயாரிப்பு மிஞ்சப் பார்க்கிறதேயொழிய மொத்தத்தில் படங்களின் தரம் மிஞ்சுவதாகக் காணோம்.

வானை வில்லாக வளைத்து, மணலை கயிறாகத் திரித்து படத்தைச் சுடுவதாக பலர் பலமாகத் தம்பட்டம் அடிக்கிறார்கள். ஆனல் கடைசியில் குறி மட்டும் கொரக்கலி வாங்கி விடுகிறது. நாய்க்குடைகள் மாதிரி பல படங்கள் தலை நீட்டுகின்றன, ஒரே முட்டாக பின்னர் வெளிக் கூச்சம் தாங்காது. மூச்சுப் பேச்சிலலாமல் எங்கோ பெட்டிப் பாம்புகளாகப் பதுங்கிக் கொண்டுவிட ஒரே பரபரப்பு!

நல்ல ஞாபக சக்தி உள்ளவர்களுக்குக் கூட நினைவுக்கு வரத் தயங்கும் சென்ற வருடத்திய சில தமிழ்ப் படங்களின் பெயர்களை வீணாகக் குறிப்பிட நானும் தயாராக இல்லை. நம் 'புதுமை' இதழின் ஆண்டுக் கணக்கு ஆகஸ்டு. ஆகவே கடந்த ஆகஸ்டுக்குப் பின் வெளியான படங்களை மட்டும் மொத்தமாக சீர்தூக்கிப் பார்ப்போம்.

பெண்களின் பெருமையைப் பேசி மாங்கல்யத்தின் மகிமையைப் பாட பல தயாரிப்பாளர்களிடையே போட்டாப் போட்டி. 'இல்லறமே நல்லறம்,' 'மாங்கல்ய பாக்கியம்,' 'மனமுள்ள மறுதாரம்,' 'நான் வளர்த்த தங்கை,' 'மாமியார் மெச்சிய மருமகள்,' 'சுமங்கலி,' 'மஞ்சள் மகிமை' முதலியன அத்தகைய பட்டியலில் அடைக்கப்பட வேண்டியவை. அவற்றில் 'மஞ்சள் மகிமை' ஒரு படி மேல்,

'ஒரே வழி,' 'தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை' ஆகிய இரண்டும் தரமான படங்கள். 'நாடோடி மன்னன்' ஆர்ப்பாட்டமாக பவனி வந்த ஓர் தனிரகம். 'சாரங்கதாரா,' காத்தவராயன்,' 'தங்கப் பதுமை,' அதிசயப் பெண்,' ஆகியவை விளம்பரத்துக்குத் தக்க வீறுநடை போடவில்லை, 'பாண்டித்தேவன்' ஓர் பிரசாரப் படம். 'நல்ல தீர்ப்'பில் கதைக் கட்டு இருந்தது. 'சிவகங்கைச் சீமை' சில சீமைகளில் ஓடிக் கொண்டிருக்கிறது. 'வீர பாண்டிய கட்ட பொம்மன்' இன்னமும் முழங்கிக் கொண்டிருக்கிறன். 'கல்யாணப் பரிசு' மக்களுக்குப் பிடித்தமான பரிசாகி அதைத் திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்,

கச்சா பிலிம் பஞ்சத்திலும் தமிழ்ப் படங்களின் சாதாரண நீளம் கொஞ்சமும் குறைவதாக இல்லை. பதினேழு, பதினெட்டாயிரம் அடி படங்களைப் பிடித்தால் தான் தமிழ் ரசிகர்கள் விரும்புகிறார்களென்பது படத்தயாரிப்பாளர்கள் நினைப்பு, கதையின் ஓட்டத்தோடு ஒட்டாமல் கூத்தும் பாட்டும் எதிர்க்களித்தால் படம் நீளத்தானே வேண்டும். கலைக்கு வெளிக்கட்டுப்பாடு கூடாது என்பதே என் கட்சி ஆனல் சுயக்கட்டுப்பாடு அவசியம்.

நீளத்தை சுருக்கினல் படம் அதிக நாள் ஓடாது என்று அவநம்பிக்கை படும் வரை தமிழ் சினிமாவுக்கு விமோசனம் இல்லையா? பட அன்பர்களின் ரசிகத்தன்மை உயராத வரை இப் பிரச்னைக்கு பரிகாரம் காண முடியாதா?

முன்னும் பின்னும் நின்ற நிலையிலேயே ஆடும் விளையாட்டு பொம்மைக் குதிரையைப் போல சினிமாத் தொழிலும் ஆட்டம் காட்டுகிறது. தென்னிந்திய திரைப்பட ரசிகர்கள் அந்த ஆட்டத்தைக் காண அரசாங்கத்துக்கு அள்ளிக் கொடுக்கும் தமாஷாவரியோ ஆண்டுக்கு ரூ. 2¼ கோடி! தமாஷாக கேட்கிறேன். சிந்திக்கவேண்டியது யார்?

விமர்சனம்

"நாட்டுக்கொரு நல்லவள்"

"உயர்ந்த இலட்சியத்திற்குப் போராடி முழுவெற்றியடையாது போய் விட்டாலும் பரவாயில்லை; கிடைத்த வரை மகிழ்வோம்; அடுத்த முயற்சியில் மேலும் முனைவோம்'' என்ற மனப்பான்மை, தென்னக திரைப்பட அதிபர்களிடம் காணக் கிடைக்காத ஓர் பண்பு.

"இலட்சியம் தேவையில்லை; இலட்சங்களே வேண்டும்; கொள்கை வேண்டாம்:' கொள்ளை லாபமே வேண்டும்!'' என்ற வேதாந்தம் அவர்களிடையே சர்வ சாதாரணம்!

'எல்லோரும் அப்படியல்ல! ஓரிரு விலக்குகளும் உண்டு' என்று முன் வந்திருக்கிறார்கள். மெஜஸ்டிக் பிக்சர் ஸார், தங்கள் கன்னி முயற்சியான நாட்டுக்கொரு நல்லவள்' வெளியீட்டின் வழியாக.

'ஒற்றுமையே உயர்வு' என்ற தத்துவத்தையும்; எடுத்ததற்கு எல்லாம் வழக்காடுபவர்கள் இறுதியிலே அழிந்து போவார்கள்' என்ற உண்மையையும் சித்தரிக்க எழுந்த திரைச் சித்திரம், "நாட்டுக்கொரு நல்லவள்.''

இரணியல் ரவி என்ற புதிய இளைஞர் எழுதிய கதையும், வசனமும் சில இடங்களில் 'அனுபவப்பட்டவர்கள்' கைவண்ண மெருகை நினைவூட்டுகிறது கதையில் ஓட்டம் இல்லை; உடைசல்கள் ஏராளம்; வசனத்தில் சில இடங்களில் புளிப்பு; சிலகாட்சிகளில் இனிப்பு; நடுத்தர மாம்பழம்!

'இலட்சிய நடிகர்' எஸ். எஸ். இராஜேந்திரன் நன்றாக நடித்துள்ள சில படங்களில் இப்படமும் சேருகிறது.

விஜயகுமாரி காதல் கட்டங்களில் நன்கு இழைகிறார்.

பண்டரி; சகஸ்ரநாமம் வழக்கமான பாணியில்; பாலையா, அலட்சியமாக நடிக்கிறார்! நமது உள்ளங்களை சுருட்டிக் கொள்கிறார்.

டைரக்ஷன் — குறிப்பிடத்தக்கதாக எதைச் சொல்வது? ஒன்றுமில்லைதான்.

பாடல்களில் நினைவில் நிற்பது எதுவுமில்லையே?

அழகான சிமெண்ட் ரஸ்தாவில் கட்டை வண்டியில் பிரயாணம் செய்வது போல, 'நாட்டுக்கொரு நல்லவளை பார்ப்பது என்றாலும், இலட்சியம் உண்டு; பொழுது போக்கச் சில காட் காட்சிகள் உண்டு; எனவே பாருங்கள்!

— "ரசிகன்''

பி. பி. ஸி. நிகழ்ச்சியில் பங்கு கொண்டார், வைஜயந்திமாலா.

‘மனம் பறித்தாய்; இதோ, மலர்ப் பரிசு’ என்கிறார் நாகேஸ்வர ராவ்.
(ஜெயந்தியின் **‘வாழ்க்கை ஒப்பந்தம்’**)

முல்லை ஏதோ மொழிய, தாமரை மலருகிறது! (சாரதியின் ‘பாக்கிய தேவதை’

கருத்துக் கலந்து விட்டபிறகு, கன்னங்கள் உரசாவோ?
(ஏழுமலையான் பிக்சர்ஸ்: "மாதா பிதா குரு தெய்வம்"

பப்பியும், சந்தியாவும் சந்திப்பது, பக்ஷிராஜாவின் 'மரகதத்தில்'

விழி கண்டார், மொழி மறப்பார்!
[illegible]ண்டல் மூவீஸ் : 'பொன் விளையும் பூமி'

197702

★

வில்லிசைவேந்தன், சாத்தூர் திரு. பிச்சைக்குட்டி குழுவினர்,
மலேயா, சிங்கப்பூர் போன்ற தூரக்கிழக்குப் பகுதிகளில் பல
கச்சேரிகள் செய்து, புகழ் முரசு கொட்டி வருகிறார்
வளர்க அவர் தம் கலைத்தொண்டு!

போன் : 203 தந்தி : "TRANSPORT

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்
அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To திருநெல்வேலி (Via) விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி
2. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
3. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
4. விருதுநகர் To பெருநாழி
5. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
6. மதுரை To சாயல்குடி
7. மதுரை To அருப்புக்கோட்டை
8. மதுரை To நாகர்கோவில் (Via) சாத்தூர், கோவில்பட்டி திருநெலவேலி, நாங்குநேரி,

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"



பார்ஸலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்படைந்த 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SR 177a